egd. No. M. 2569

1224

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 7

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 ரபீஉல் ஆகிர்மீ, 1935 ஜுலைமீ

1. திருகுர்ஆன் ... 241
2. நாயக வாக்கியம் ... 242
3. காதியானிக் கிளைகள் ... 244
4. ஐரோப்பாவில் சத்தியமத ஆராய்ச்சி ... 247
5. ஹஸ்ரத் அபூதர்ரு கிபாரி (ரலி.) ... 250
6. ஞானதினகரன் ... 253
7. மௌலானா செய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி வழக்கு அப்பீல் தீர்ப்பு ... 261
8. கல்வி போதனுமுறை ... 268
9. ஸீரத் பிரசங்கத்திலும் காதியானிப் பிரசாரமா? ... 271
10. செய்தித்திரள் ... 273
11. யவ்முர்கபி விழாக்கொண்டாட்டம் ... 276

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

23 AUG 1935

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4	0	0
தனிப் பிரதி ...	”	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G T., மதராஸ்

தமிழ்நாடு ... கட்டக நூலகம்
208343
சென்னை-600...

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 AUG1935
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 ரபீஉல்ஆகிர் மீ 1935 ௵ ஜூலை மீ	இதழ் 7

திரு குர்ஆன்

நபியே! உமக்கு வஹி அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த குர்ஆன்ஷரீபை ஓதிக்கொண்டும், தொழுகையை நிறைவேற்றிக்கொண்டுமிரும். குர்ஆன் ஷரீபானது வலுப்பம் பொருந்திய மகா மேன்மையுடையதாகும்.

மகா மேன்மையும் வலுப்பமுமுடைய அல்லாஹ் தஆலா, தனது ஹபீப் வள்ளல் ரஸூல் (ஸல்.) அவர்களை நோக்கி, இவ்வாறு அறிவித்து குர்ஆன் ஷரீப் ஓதுவதன் மேன்மையை விளக்கிக் காட்டியுள்ளான். ஒருவன் குர்ஆன் ஷரீப் ஓதுவதிலீடுபட்டிருப்பதுகொண்டு அவனுக்கு நபிலான வணக்கங்கள் தவறிப் போய்விட்டாலுங்கூட அல்லாஹ்தஆலா அந்த வணக்கத்திற்குரிய நன்மையை அவனுக்கு அளித்துவிடுகிறானெனக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் அல்லாஹ்தஆலா எம்பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, குர்ஆன்ஷரீப் ஓதிக்கொண்டிருப்பீராக! என்னுடைய போதனையை பயந்து நடப்பவருக்கு இந்த குர்ஆனை அறிவிப்பீராக! என்றும்கூறியிருக்கிறான். இதற்கேற்ப நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் குர்ஆனின் சத்போதனையை மக்கள்பால் எடுத்துக் கூறியபோது, முஸ்லிம்களாயுள்ளோருக்கு அது அளவற்ற பிரயோசனமளித்தது. காபிர்களோவெனின், தங்கள் மனதில் பதிந்துகிடந்த அளவற்ற பொறாமையின் காரணமாக, பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு பகிரங்கப் பகைவர்களாகி அளவற்ற விரோதஞ்செய்யவும் ஆரம்பித்தார்கள். இந்நிலைமையிலும் அன்னோர் குர்ஆன் ஷரீபின் அபார சக்தி வாய்ந்த மகிமையைக்கண்டு மறைவாக அதன் வசனங்களுக்குச் செவிமடுத்துக்கொண்டுமிருந்தனர்.

இஸ்லாத்தின்மீது குரோதங்கொண்ட காபிர்கள் மறைந்துகொண்டு குர்ஆன் ஷரீபைக்கேட்டுக்கொண்டிருந்ததால், அல்லாஹ் தஆலா தொழுகையில் அதனை ஓதும்படி கட்டளையிட்டு, மறைவுதலாக கேட்டுக்கொண்டிருப்பவர்கள் அதனைத் தெரிந்துகொள்ளட்டுமென, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு அறிவித்தான். இவ்வாறு தொழுகையில் குர்ஆன் ஷரீப் ஓதியதன்பயனாக, அதனை மறைவாக இருந்து

கேட்டுக்கொண்டிருந்த மனு, ஜின் வர்க்கத்திலனேகர் முஸ்லிம்காய்விட்டதாக சரித்திரம் சாக்ஷியம் பகர்ந்துகொண்டிருக்கிறது.

முடிவாக கூறுமிடத்து, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் அவர்கள் குர்ஆன் ஷரீபை தொழுகையிலும் அதற்கு வெளியிலும் ஓதியது கொண்டு அளவற்ற பிரயோசனங்களேற்பட்டதென்பது சாமான்யர்களுக்கும் தெரிந்த விஷயமே. அதிலும் குறிப்பாக ஹதீது, சரித்திரக் கலைகளில் மிகமிகப் பாண்டித்துவம் பெற்றுள்ள மகான்கள் இவ்வுண்மையை நன்குணர்ந்திருக்கின்றார்கள். எனவே நம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதான குர்ஆன் ஷரீபானது அவர்களின் பெரும் முஅஜிஜாவாக இருக்கின்றது. இன்னும் கியாமத் நாள்வரையிலுள்ள பெரும் அற்புதமாகவுமிருந்திலங்கும். இதன் அற்புத சத்தியை என்னென்று தான் கூறுவது? தங்கள் அருமை வாயிலிருந்து குர்ஆன் ஷரீபின் திவ்வியவாக்கியங்களைச் செவியுற்ற ஜின் வர்க்கங்களென்ன, வன்னஞ்சம்படைத்த வங்காபிர்களாயிருந்தோர்களென்ன? இன்னோரெல்லாம் இஸ்லாமிய பங்தத்துவத்தின் கீழ்வந்து மார்க்க பக்த சிரோன்மணிகளாகவும் தலைமைப் பதவியுடைய தகைமையாளராகவும் ஆய்விட்டார்களென்றால், அத்திருமறையின் திவ்வியத் தன்மையின் மகிமையை என்னென்று கூறுவது? மேலும் இந்த குர்ஆன் ஷரீபின் பொருட்டால் உலகமடங்கலுக்கும் எவ்வளவு பிரயோசனமேற்பட்டது, இன்னும் பிரயோசனமேற்பட்டுக்கொண்டிருக்கிறதென்பது கணக்கிட்டுக் கூறமுடியாத விஷயமாக இருக்கின்றது.

இவ்வாறு மனு ஜின் வர்க்கங்களுக்கும், உலக முழுவதிற்கும் அளவில்லா-மட்டற்ற-நற்பயன்களை அளித்துள்ள திருகுர்ஆன் ஷரீபை ஓதிவரும்படியும், தொழுகையை நிறைவேற்றுமாறும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். ஆதலால் குர்ஆன்ஷரீப் ஓதுவதும், தொழுகையை நிறைவேற்றுவதும் இஸ்லாத்திலுள்ள சிறந்த சேவைகளாகுமென்பது நன்கு புலனாகின்றது. இவ்விரண்டின் காரணமாகவே மானிடன் சிறந்த மார்க்கபக்தனாகவிளங்குவானென்பது வெளிப்படை. ஆகவே, நாம் அனைவரும் குர்ஆன் ஷரீபுடைய கருத்துகளை மனத்திலமைத்து அதனை தக்க முறையில் ஓதி அதிலுள்ள கட்டளைகளை ஏற்று, விலக்கல்களைத் தவிழ்ந்து நடப்பதற்குள்ள கிருபையை அல்லாஹ் தஆலா நம் மீது புரிந்து, தொழுகையை அழகான முறையில் - அல்லாஹ் தஆலாவால் ஒப்புக்கொள்ளப்படும் விதத்தில் - நிறைவேற்றுவதற்குள்ள கிருபை செய்து, அவனது சாலிஹான நல்லடியார்களின் கூட்டத்தில் நம்மனைவர்களையும் சேர்த்து வைப்பானாக.

நாயக வாக்கியம்

மூன்று குணங்கள் எவனில் காணப்படுகின்றதோ அவன் ஈமானுடைய இன்பத்தைப் பெற்றுக்கொள்பவனாகிறான் (1) அல்லாஹ், அவனுடைய ரஸூல் மீது சகல வஸ்துக்களைப் பார்க்கினும் அதிகப் பிரீதி கொள்வது, (2) அல்லாஹ் தஆலாவின் திருப்திக்காகவே இதரர்களுடன் சிநேகம் வைப்பது, (3) ஞாயம் ஒழுங்கோடு நீதிபுரிவது.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாளன்று ஈமானுடைய மேன்மைகளை எடுத்து விபரித்துக்கொண்டிருக்குங்கால், மேற்கண்டவாறு அறிவித்ததாக ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் சாலிஹ் ஜஸாயிரி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானிடன் அல்லாஹ்வினுடையவும் அவனது ரஸூலினுடையவும் பொருத்தத்தைத் தேடுவதற்காக தன் பலம், தன் சக்தி முழுதையும் தத்தம் செய்துவிடுவதும், அவர்களின் கட்டளையைமீறி யாதொரு காரியமும் செய்யாதிருப்பதும்தான் அல்லாஹ், அவனுடைய ரஸூல்மீது பிரீதி கொண்டிருப்பதாகச் சொல்வதற்குள்ள அடையாளமென்றும், பிற மனிதன் தன்னுடன் ஒற்றுமையாகவோ அல்லது பகைமை கொண்டோ இருந்தபோதிலும் அவ

னுடன் சத்தியத்தைக் கடைப்பிடித்து நடந்து கொள்வதுதான் உண்மை சிநேகமென்றும், சீமான் ஏழை, உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்னும் வித்தியாசம் பாராது யாவருடனும் சமமாக நடந்துகொள்ளுவதுதான் ஞாயமாக நீதிசெலுத்துவதாகு மென்றும், இச்சிறந்த குணங்கள் எந்த மனிதனில் காணப்படுகின்றதோ அவன்தான் நிறை பூர்ணமான மூமினாக இருக்கமுடியுமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

அமானிதம் வைக்கப்பட்டால் அதனை மோசம் செய்துவிடுவதும், வார்த்தையாடும்போது பொய் பேசுவதும், அறுதிமானத்தை நிறைவேற்றாது சதிசெய்வதும் முனபிக்-நய வஞ்சகர்களின் செய்கையாகும்.

உலகரட்சகர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் ஒருநாளன்று முனபிக்களின் குணதிசயங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்குங்கால், மேலே கண்டவாறு அறிவித்ததாக, ஹஸ்ரத் அப்துல் லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அப்துல் அஜீஸ் சாவீஷ் (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், 'முனபிக்' தனமானது பெரிய பாவமான காரியமாக இருப்பதால் அதற்கு தண்டனை நரகத்தின் கடைசி பாகமாகுமென்றும், அல்லாஹ், அவனது ரஸூல், மறுமைநாள், நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுக்கப்படுவது ஆகியவைகள் மீது உறுதிகொள்ளாதவன் தான் இக்கொடிய பாவத்தைச் செய்வானென்றும் கூறியிருக்கின்றார்கள்.

சத்தியத்தைக்கைபிழந்துவிட்ட இன்னோர்க்கு அல்லாஹ்தஆலாவின் பயம்எடுபட்டுபோவதால் தங்களிடம் அமானிதம் வைக்கப்படுவதை மோசஞ்செய்துவிடுகின்றனர், இதரர்களுடன்பேசிக்கொண்டிருக்குங்கால் சாதாரணமாக பொய் பேச ஆரம்பித்துவிடுகின்றனர், இதரர்களிடம் அறுதிமானஞ் செய்து கொடுத்திருந்தால் அதனை நிறைவேற்றாது மோசமே செய்துவிடுகின்றனர். ஆகவே, எவர்களில் இந்த குணங்கள் காணப்படுகின்றதோ அவர்கள் முனபிக்குளாக இருக்குமென்பதில் எவ்வித சந்தேகமுங் கிடையாது. அவர்கள் எவ்வாறான செல்வந்தர்களாகவோ பிரக்யாதி பெற்றவர்களாக இருந்தாலும் சரியே.

நீதி செய்ய விரும்பும் அதிகாரி, தன் பலம் முழுதையும் அல்லாஹ்வின் வணக்கத்தில் செலவு செய்யும் வாலிபர், மறைமுகமாக தான தருமஞ் செய்பவர் ஆகிய இம்மூவரும் சாலிஹான நல்லடியார்களாகும்.

சத்தியத்தூதர் உத்தம நபி (ஸல்) அவர்கள் ஒரு நாளன்று நல்லடியார்களின் பிரத்தியேக விசேஷித்த சத்குணங்களை எடுத்து விளக்கிக் கொண்டிருக்குங்காலை, மேலே கூறப்பட்டவாறு தெரிவித்ததாக ஹஸ்ரத் அபூதர்ரு கிபாரி(ரலி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், சகல விஷயங்களிலும் நீதத்தைக் கடைபிடிப்பது மகா மேலான காரியமாகுமென்றும், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் நீதியோடு செய்துகொண்டிருந்ததால் பெருமானார் (ஸல்) அவர்கள் யாவர்களையும்விட நீதியில் சிறந்து விளங்குகிறார்களென்றும், அல்லாஹ்தஆலாவின் திருக்கட்டளையை நிறைவேற்றுவதில் யாரிடமும் அவர்கள் சற்றும் தயவுதாக்ஷிணியம் காட்டவில்லையாகையால் நாமும் அவர்களது அடிச்சுவட்டைப்பின்பற்றி நற்கருமங்கள் புரியவேண்டியது நம்மீது கடமையாகுமென்றும், வாலிபப் பருவத்தில் வணக்கத்தின்மீது கவனத்தைச் செலுத்தி அதே பழக்கத்தை அனுஷ்டிப்பது பெரும் சிரேஷ்டத்தனத்திற்குள்ள அடையாளமாகு மென்றும், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வணக்கத்தின்மீது அதிகப் பிரீதி ஏற்பட்டிருந்ததால் சூரியன் உதயமாவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பே தாங்கள் படுக்கையை விட்டெழுந்து முக்கிய தேவைகளை நிறைவேற்றிவிட்டு, அல்லாஹ் தஆலாவை வணங்கு வதிலீடுபட்டுக் கொண்டிருப்பார்களென்றும், இதரர்களுக்குத் தெரியாத விதமாய் தானதருமங்கள் செய்வது மேலான வணக்கமாகுமென்றும் கூறியிருக்கிறார்கள்.



காதியானிக்கிளைகள்

மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியின் சிஷ்யர்கள் தலைமைப் பதவிக்கு ஆசைகொண்டு இரண்டு கக்ஷியினராகப் பிரிந்தனர். இவர்களில் ஒரு கக்ஷியாருக்கு லாகூர் பார்ட்டி என்றும், மற்றொரு கக்ஷியாருக்கு காதியானி பார்ட்டி என்றும் பெயர். கலீபா பதவி விஷயத்திலேற்பட்ட விவாதத்தினால் கக்ஷிபிரிந்ததை இவர்கள் உள்ளபடியே கூறினால் காதியானிகளிலுள்ள பாமரர்கள் இவர்களை வெகுகாலத்திற்கு ஆதரிக்கமாட்டார்கள். ஆதலால், இவர்கள் தங்களுக்குள் மத விஷயத்திலேயே அபிப்பிராய பேதமிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். அதாவது, குலாம் அஹ்மது காதியானியை நபியென்றும் றஸூலென்றும் பச்சை வெட்டையாகக் கூறுபவர் ஒரு கூட்டம். அவரை முஜத்தித், மஹ்தீ, மஸீஹ் என்று கூறுவது மற்றொரு கூட்டம். குலாம் அஹ்மதை நபி என்று பச்சைவெட்டையாகக் கூறும் கூட்டத்தைக்கண்டு முஸ்லிம்கள் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில், முஸ்லிம்கள் ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களை 'காத்தமுன்னபிய்யீன்' என்று ஒப்புக்கொண்டிருப்பதால், குலாம் அஹ்மதைநபியென்று கூறுபவர்களை முஸ்லிம் அல்லாதார் என்று சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்வார்கள்; ஏமாற்றத்தால் அவர்களை முஸ்லிம்கள் ஆதரிக்கமாட்டார்கள்; இக்கொள்கை முஸ்லிம்களிடையே பரவுவதும் மிகக் கஷ்டமாகும்.

ஆனால், குலாம் அஹ்மதை நபியென்று தாவாச்செய்யாமல் அவரை மஹ்தி என்றும், மஸீஹென்றும், முஜத்திதென்றும் தாவாச் செய்யும் கூட்டத்தார் நய வஞ்சகமான முறையில் தங்களது பிரசாரத்தைப் புரிந்து வருவதால், இவர்களது உண்மையான கொள்கையை முஸ்லிம்கள் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் ஏமாற்றமடைவது சகஜமாகிவிட்டது. நல்ல வேளையாக மௌலானா செய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரியின் மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தது. இவ்வழக்கு ஏற்பட்டதால் காதியான் பார்ட்டி, லாகூர் பார்ட்டி ஆகிய இருபிரிவின் தலைவர்களும் சாக்ஷிக் கூண்டுக்குவந்து சாக்ஷியம் கூறினர். அதனால் அவர்களது மதக் கொள்கையை நாம் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ளச் சமயம் வாய்த்தது. ஒரு பார்ட்டிக்காரர்கள் "கத்தமுன்னுபுவ்வத்" அதாவது ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் கடைசிநபியாகுமென்பதை ஒப்புக்கொள்வதால் இன்னொரு கக்ஷியினர் அக்கொள்கையை நிராகரிக்கின்றனர். வெளிக்கு இவ்விருகொள்கையும் நேர் விரோதமான கொள்கையேபோல் தோன்றிடினும் அந்தரங்கத்தில் இரண்டு கக்ஷியினரும் ஒரே கருத்தைத்தான் ஒப்புக்கொள்கின்றனர். எவ்வாறெனில், லாகூர் பார்ட்டியினர் 'கத்தமுன்னுபுவ்வத்' கொள்கையை ஒப்புக்கொண்டு புதிய நபியோ பழைய நபியோ வரவேண்டிய அவசியமில்லை என்றுகூறி, கடைசி காலத்தில்ஹஜ்றத்ஈஸா(அலை.)அவர்கள் வருவதைமறுத்து விடுகின்றனர். ஆனால்,

ஹதீது ஷரீபில் மர்யமுடைய மகன் மஸீஹ்(அலை.) அவர்களின் வருகையைப் பற்றிக்கூறி இருப்பதற்குத் தப்பான வியாக்யானம் செய்து மிர்ஜா குலாம் அஹ்மது தான் மஸிஹு என்று தாவாச் செய்கின்றனர். மேலும் வஹியுடைய வாசல் அடைபடவில்லை; வஹி வருவதால் ஒருவர் நபியாகிவிட முடியாது; குலாம் அஹ்மதுக்கு வஹிவந்தது; இனியும் பலருக்கு வஹி வரலாம் என்றும் கூறுகின்றனர். காதியானி பார்ட்டியார்கள் நபித்துவம் முடிவடையவில்லை; குலாம் அஹ்மது லில்லீ நபியாக இருந்தார், புரூஜி நபியாக இருந்தார், றஸூலாக இருந்தார், அவருக்கு வஹீவந்தது, அவர் மஹ்தியாகவும், மஸீஹாகவுமிருந்தார் என்றெல்லாம் கூறுகின்றனர். ஆகவே, இருகக்ஷியினரும், குலாம் அஹ்மதுக்குவஹி வந்தது என்பதையும், ஹுஜூர் அக்ரம்(ஸல்.) அவர்களுக்குப்பிறகு வஹியுடைய வாசல் அடைபடவில்லை என்பதையும், குலாம் அஹ்மது மஹ்தியாகவும், மஸீஹாகவும், இமாமாகவும், முஜத்திதாகவு மிருந்தார் என்பதையும் வற்புறுத்துகின்றனர். இவ்விருவர்களின் கொள்கைகளும் குர்ஆன் ஹதீதுக்கு நேர்மாறானவை என்பது பிரத்தியக்ஷம். ஆனால், ஒரு விஷயம் மட்டும் இவ்விரு கக்ஷியினரிடத்திலும் வித்தியாசமாக இருக்கிறது. அதாவது, காதியானி பார்ட்டியினர் தங்களை ஹனபி என்றும் முஸ்லிம்கள் என்றும் சொல்லிக்கொள்ளாமல் அஹ்மதி என்றே கூறுகிறார்கள். லாகூர் பார்ட்டியினரோ தங்களை அஹ்மதி என்றும், ஹனபி என்றும், முஸ்லிம் என்றும் கூறிக்கொள்கிறார்கள். இது முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம்பறிக்கச் செய்யும் சூழ்ச்சியேயன்றி உண்மையாகக் கூறிக்கொள்ளும் வார்த்தையன்று. ஏனெனில், குலாம் அஹ்மதை நபியென்று நம்பாதவர்களெல்லோரும் காபிர்கள் என்று காதியானிகள் கூறி உலகிலுள்ள ஹனபி, ஷாபி, ஹன்பலி, மாலிக்கி ஷியா, வஹ்ஹாபி, அஹ்லஹதீது ஆகிய யாவரையும் ஒரே அடியாய் அதாவது உலகிலுள்ள சகல முஸ்லிம்களையும் காபிர்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். லாகூர் பார்ட்டியினர் குலாம் அஹ்மதை மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் நம்பாத அனைவரையும் காபிர் என்று கூறி உலக முஸ்லிம்களையெல்லாம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். எனவே, உலகிலுள்ள சகல முஸ்லிம்களையும் காபிர் என்று ஒதுக்கி வைப்பதில் இருகக்ஷியினரும் ஒன்று போலவே இருக்கிறார்கள். ஆகவே, இருவரும் ஒரு மரத்தின் இரு கிளைகள்தான் என்று கூறுவது பொருந்தும்.

முஸ்லிம் பொதுஜனங்களை ஏமாற்றும் விஷயத்தில் இவ்விரு கக்ஷியினரில் காதியானி பார்ட்டியினரைப் பார்க்கினும் லாகூர் பார்ட்டியினர் அதிகப்பயங்கரமானவர்கள். பகிரங்கமாகக் காபிராக இருக்கும் ஒருவரைப்பற்றி முஸ்லிம்கள் அஞ்சவேண்டியதில்லை. பகிரங்கமான காபிர்கள் கூறும் மார்க்கக் கொள்கைகளை முஸ்லிம்கள் எளிதில் நம்பிவிடமாட்டார்கள். அத்தகைய காபிர்கள் கூறும் கொள்கைகள் புத்திக்குப் பிடித்தமானவைகளே போல் தோன்றினும் அதனை முஸ்லிம் அறிஞர்களிடம் கேட்டுத் தெளிந்துகொள்வர். ஆனால், வெளிக்கு முஸ்லிமைப் போலவும் உள்ளுக்குக் காபிர்களாகவும் இருக்கும் நய வஞ்சகர்கள் கூறும் மார்க்கப் புரட்டான கொள்கைகளை முஸ்லிம் பொது ஜனங்கள் எளிதில் நம்பிவிட இடமுண்டு. இதனால், பக்கா காபிர்களைப் பார்க்கினும் நயவஞ்சக முனபிக்குகளால் முஸ்லிம் சமூகத்திற்குள் எப்பொழுதும் பிளவும் வேற்றுமையும் உண்டாகி இலெளகிகம் வைதிகம் ஆகிய இருதுறைகளிலும் பெருத்த நஷ்டம் ஏற்படுவது சகஜமாக இருக்கிறது.

எனவே, நமது தமிழ் நாட்டிலும் இரு விதக் காதியானிகளுமிருக்கின்றனர். ஆயினும், அசல்காதியானி பார்ட்டியின் கொள்கை நமது தமிழ் நாட்டில் விரல் விட்டெண்ணக் கூடிய இரண்டொருவரைத் தவிர வேறு யாரிடத்திலும் பரவவில்லை. அதைப் பரபவிடாமற் றடுப்பதற்கு முன்னெச்சரிக்கையாக அதிகப் பிரயத்தனம் செய்யவேண்டிய அவசியமும் ஏற்படாமல் வெகு எளிதில் அக்கொள்கை அடக்கப்பட்டுப் போயிற்று. ஆயினும், லாகூர்பார்ட்டியின் கொள்கை நயவஞ்சக முனபிக்குகளின் கொள்கையைப்போலிருப்பதால் அதனை நமது முஸ்லிம் பொது ஜனங்களிற் சிலர் நம்ப ஆரம்பித்துவிட்டனர். இதனால், நமது சங்கம் இக்கொள்கையைப் பிரகடனப்படுத்தி முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை செய்யும் விஷயத்தில் அதிகம் உழைக்க வேண்டியதிருந்தது. றஹ்மானின் கிருபையால் நமது சங்கம் எடுத்துக்கொண்ட இந்நன் முயற்சி நாடெங்கும் வெற்றி பெற்றும் வந்தது. ஆயினும், லாகூர் கூட்டத்தாரின் நம் நாட்டு ஏஜண்டுகள், சங்கம் செய்யும் முயற்சிக்குப்போலிக் காரணங்களைக்கூறி பொது ஜனங்களின் கண்ணில் மண்ணைப் போட்டுவந்தனர். அதாவது, "நமது பிரசாரம் தென்னாட்டிலுள்ள முல்லாக்கள் வயிற்றில் மண்ணைப்போட்டுவிட்டதால் வயிற்றெரிச்சலின் பேரில் நம்மைக் காதியானி என்று கூறுகிறார்கள்; அவர்கள் பொறுமைக் குணம் படைத்தவர்கள்; வடநாட்டிலுள்ள படித்த மௌலவிகளும் பிரபலஸ்தர்களும் லாகூர் பார்ட்டியினரை ஆதரிக்கின்றனர்; அவர்கள் இங்கிலாந்தில் அந்நிய மதத்தினரை இஸ்லாத்தில் சேர்த்து வருகின்றனர்" என்றெல்லாம் கூறினர்.

இறைவன் இப்பொய் மூட்டைகளையும் அம்பலத்துக் கொண்டுவர பஞ்சாப் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரியின் வழக்கையுண்டு பண்ணினான் போலும். இவ்வழக்கில் இவ்விரு குழாத்தினரின் கொள்கைகளும் பொதுஜனங்களின் அறிவுக்கு வர வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இந்தியாவிலுள்ள பிரபல உலமாக்கள், தலைவர்கள் யாவரும் இவ்விருகக்ஷியினரையும் பற்றிப் பத்திரிகைகளில் தங்களது அபிப்பிராயங்களைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டனர். போதாக்குறைக்கு லாகூர் வோக்கிங் மஸ்ஜிதைச் சேர்ந்த அப்துல் மஜீத் என்பவரும், காஜா கமாலுத்தீன் தம்பி அப்துல்கனியும் நமது நாட்டுக்கு வந்து தங்களது கொள்கைகளை நன்றாக வெளிப்படுத்தி விட்டனர். ஹனபி, ஷாபி, ஹன்பலி, மாலிக்கி, ஷியா, ராபிளி என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் பின்னால் நின்று தாம் தொழுகையை நிறைவேற்றுவதாகவும், லண்டனில் இஸ்லாத்தைத் தழுவ வருபவர்களுக்குக் கலிமாவை மட்டும் சொல்லிக்கொடுத்து அனுப்பி விடுவதாகவும், அப்புறம் அவர்கள் எந்தக் கொள்கையை அனுஷ்டித்தாலும் அதைப்பற்றி தங்களுக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை என்றுங் கூறி, லண்டனில் லாகூர் பார்ட்டியினர் செய்யும் இஸ்லாமியப் பிரசாரத்தின் வண்டவாளத்தை வெளியிட்டும் விட்டனர்.

நமது தென்னாட்டு காதியானிகள், சென்னை ஹைகோர்ட்டுசெய்த ஒரு வழக்கின் தீர்ப்பை ஆதாரமாகக்கொண்டு "காதியானிகள் பக்கா முஸ்லிம்கள்" என்று கூறி முஸ்லிம்களை ஏமாற்றிவந்தனர். இந்தக் கூற்றையும் பொய்ப்பிக்க இறைவன் மற்றொருவழியையும் முஸ்லிம்களுக்குத் திறந்து விட்டான். அதாவது, பஹவல்பூர் சமஸ்தானத்தின் சீப் கோர்ட்டில் 10 வருஷகாலமாக நடைபெற்று வந்த ஒரு வழக்கில் சில மாதங்களுக்கு முன் தீர்ப்புக் கூறப்பட்டது. அதில் "காதியானிகள் காபிர்கள்" என்றும், காதியானிகள் முஸ்லிம் ஸ்திரி

களை விவாகம் செய்வது கூடாது என்றும், ஏற்கனவே விவாகம் செய்து கொண்டிருந்த தம்பதிகளிலொருவர் காதியானி மதத்தைத்தழுவினுல்உடனே நிக்காஹு முறிந்துவிடும் என்றும் ஜட்ஜ்மென்ட் செய்துவிட்டார்கள். பின்னும் எஞ்சி இருந்தசந்தேகத்தையும், லாகூர் ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்த மிர்ஜா, ஸர். ஜுபர்அலி அவர்கள்,ஹைகோர்ட்டுத் தீர்ப்பு முஸ்லிம் சமூகத்தைக் கட்டுப்படுத்தாது என்றும், ஹைகோர்ட்டுக்கு இவ்வாறுன வழக்குகளில் முடிவுகூற உரிமையில்லை என்றும், ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் இவ்விஷயத்தை உணர்ந்திருக்க வேண்டியது அவசியமில்லை என்றும், சாக்ஷிகள் கூறுவதன்மீது தீர்ப்பளிப்பதுதான் ஜட்ஜுகளின் வேலை என்றும், பொய்யான விஷயத்தை சாக்ஷிகள் திறமையாக எடுத்துக் கூறினுல் ஜட்ஜுகள் அதை மெய்யென்று நம்பிவிடவும், மெய்யான விஷயத்தைத் திறமையாக எடுத்துக் கூறத் தவறிவிட்டால் உண்மையும் பொய்யாகக் கருதப்பட்டு தீர்ப்புக் கூறுவதில் தவறு ஏற்படும் என்பதையும் அறிவித்து ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பின் குட்டை உடைத்து விட்டார்.

ஆகவே, தென்னுட்டுக் காதியானிகளின் கூற்றுக்களனைத்தும் தவறு என்று ருஜுவாகி விட்டதால், நமது நாட்டுப் பொதுஜனங்கள் இவர்களது மாயப் பிரசாரத்தைக்கண்டு இனியும் ஏமாற்றமடையாமலிருந்து கொள்ளும்படி எச்சரிக்கை செய்வதுடன் இவர்களின் மாயவலையில் சிக்காமல் முஸ்லிம்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்ளோம்.

ஐரோப்பாவில் சத்தியமத ஆராய்ச்சி

ஆலி ஜனுப் முஹம்மது ஷபீஹுல் ஹஸன்சாகிப் பக்தியாரி, எம். ஏ., எல்எல். பி. லண்டனிலிருந்து எழுதுகிறுர் :—

ஒரு மதம் நிலைபெறுவதற்கும், அதனுடைய கொள்கைகள் பரவுவதற்கும், அம்மதத்தின் கொள்கைகள் சத்தியத்தையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது முக்கிய அம்சமாக இருந்தபோதினும், அந்த மதத்தைப் பின்பற்றுபவர்களில் பிரசார வேலையும், அதைப் பிரகடனப்படுத்தும் முயற்சியும் இருக்கவேண்டியது இக்காலத்தில் அவசியமாக இருக்கிறது. சத்தியமான ஒரு விஷயத்தையறிந்தவர்கள் அவ்வுண்மையை உலகத்தார் முன்னிலையில் எடுத்துக் கூறுமல் இருந்துவிடுவதால் அவ்வுண்மை உலகில் அடையவேண்டிய ஆதரவையும் செல்வாக்கையும் அடையமுடிவதில்லை. மதவிஷயம் மட்டிலும் இந்நிலைமையிலிருக்கிறதுஎன்பதல்ல, கல்வி உலகிலும் இதே நிலைமைதானிருந்து வருகிறது.

ஐரோப்பாவின் புதிய தத்துவ சாஸ்திரத்திற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்களது தத்துவ ஆராய்ச்சி இவ்வுலகில் உண்டாகிவிட்டது. வெகு காலத்திற்கு முன்பே ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள் தங்கள் ஆராய்ச்சியால் கண்டுபிடித்த அநேகம் நுட்பங்கள் இவ்வுலகில் வந்துவிட்டன. ஆயினும், ஐரோப்பாவுக்கு அவைகளை அறிவிக்காததால் ஐரோப்பியர்கள் வெகு காலத்திற்குப் பின் அபார முயற்சியும் சிரத்தையும் எடுத்துக் கொண்டபின்னரே அந்நுட்பங்களைத் தெரிந்து கொண்டனர். ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்களது தத்துவ ஆராய்ச்சிகள் அக்காலத்திலேயே பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்குமாயின் இன்று புதிய தத்துவசாஸ்திரம் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமாக முன்னேற்றமடைந்திருக்கும்.

தவிர, தற்கால உலக நிலைமையானது நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் பிரசாரம் செய்யும் விஷயத்தை மிக மிக முக்கியமானதாக ஏற்படுத்திவிட்டது. பிரசாரம் செய்யப்படும் மதம் உலகத்தில் அதிவிரைவாகப் பெருக்கிகொண்டிருக்கிறது. பிரசாரம் செய்யப்படாத மதத்தார் வருஷந்தோறும் உலக ஜனத்தொகையில் குறைந்துகொண்டே வருகிறார்கள். சில வாரங்களுக்குமுன் பிரான்சிலிருந்து 5 பாதிரிகள் அறபி தேசத்தில் கிறிஸ்து மதத்தைப் பிரசாரம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். இதற்கு முன்னும் அநேகம் பாதிரிகள் இம்முக்கிய வேலையில் தங்களது அருமை உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இம்முறை செல்லும் பாதிரிமார்களின் நிலைமையும் யாதாகுமோ, யார்தான் அறிவர்? ஆயினும், அவர்கள் புறப்பட்டுச்சென்றபோது ஸ்திரீகளும், குழந்தைகளும்கூட அவர்களுக்கு மாலையிட்டனர். அத்தேச மக்கள் அவர்களுக்கேற்படும் செலவுகளுக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தனர். தற்போதைய கிறிஸ்துவ மதம் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பது மெய்யேயாயினும், அதற்காகச் செய்யப்படும் முயற்சி முற்றிலும் பயனற்றதாக ஏற்பட்டுவிடும் என்று கூறமுடியாது.

இக்காலத்தின் அழைப்பை நாமும் ஒப்புக்கொண்டு, ஜிஹாதின் அந்தரங்க நோக்கத்தையுணர்ந்து, எழுத்திலும் பிரசங்கத்திலுமிருக்கும் தத்துவத்தையறிந்து ஐரோப்பாவில் நமது அதிர்ஷ்டம் எவ்வளவிருக்கிறது என்பதை நாம் காணமுயற்சிப்போமாயின், இஸ்லாம் மதத்தின் சத்தியம் என்ற வாளானது உலகிலுள்ள இப்பாகத்தில் அநேகம் நற்பயன்களை உண்டாக்கிவிட முடியும். அந்நியர்கள் மிகத் துரிதமாக இந்தப் பாட்டையில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நாமோ விடியற்கால நித்திரையை சுகமென மதித்து, நம்மைச்சுற்றியுள்ள நிலைமை என்னவென்றுங்கூட உணராமல் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறோம்.

பிரதிஞாயிற்றுக்கிழமைகள்தோறும் லண்டனின் பலபாகங்களிலும் ஜனங்கள் தங்கள் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும்பற்றிப் பிரசங்கம் செய்கிறார்கள். சிலர் கிருஷ்ணனின் சிறப்புகளையும் மேன்மைகளையும்பற்றிப் பிரசங்கிக்கிறார்களென்றால், இனியொரு இடத்தில் ஹிந்துமத தத்துவத்தின் உயர்வைப்பற்றிப் பலர் பேசுகின்றனர். மற்றொரு பகுதியில் சிலர் கூடிக்கொண்டு ஹிந்துமதத்தின் ஆத்மார்த்த உன்னதங்களின் சிறப்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கின்றனர். டாகூர், காந்தி ஆகியவர்களின் உயர்வைப்பற்றியும் பிரசாரம் நடைபெறுகிறது. ஆனால், றஸூலே அறபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களினுடையவும், கலீபாக்களினுடையவும்நிகரற்றசரித்திரங்களைப்பற்றியோ, அரும்பெரும் முயற்சிகளைப்பற்றியோ எவரும் எவ்வித முயற்சியும் இங்கு செய்யக் காணோம். இஸ்லாத்தின் தத்துவங்களை ஜனங்களிடம் போதிப்பது ஒரு பக்கல் இருக்கட்டும், இஸ்லாத்தின் அஸ்திபாரமான உஸூல்களையும்கூட ஜனங்களிடம்கூறி அவைகளை உணரச் செய்வதற்கான வழி இங்கில்லை. இதன்பலனும் நன்றாக வெளியாகிவிட்டது. அதாவது, கிருஷ்ணனைப்பற்றி அறிந்தவர்கள் இங்கிருக்கிறார்கள். டாகூரைப்போற்றுபவர்களிருக்கிறார்கள். காந்தியின்பால் பக்திகொண்டவர்கள் அனந்தம் பேரிருக்கின்றனர். ஆனால், றஸூலே அறபீ (ஸல்.) அவர்கள் நபியாக இருந்தார்கள்; அவர்களுக்கு 10, 12 மனைவிமார்களிருந்தனர் என்ற விஷயத்தை மட்டிலும்தான் இங்குள்ளவர்கள் அறிந்திருக்கிறார்கள். பாக்கியுள்ள கலீபாக்களின் பெயர்களைக்கூட இங்குள்ள ஜனங்கள் அறிந்துகொண்டில்லை.

ஆழ்ந்து கவனிக்குமிடத்து, இஸ்லாத்தில் ஆத்மார்த்த பொக்கிஷங்களுக்கும், இப்பொக்கிஷங்களிலிருந்து ஆத்மார்த்த திரவியங்களை வேண்டியமட்டும் அள்ளி எடுத்துக்கொண்ட பெரியார்களுக்கும் அளவில்லை. இதுவிஷயத்தில் அந்நியர் இஸ்லாத்தின்மீது எவ்வளவு பொறுமை கொண்டாலும் அது மிகச் சொற்பமென்றே சொல்லலாம். நபிமார்கள் பாபத்தைவிட்டுக் காக்கப்பட்டவர்கள் என்ற கொள்கை நிகரற்ற கொள்கையாகும். இதுபோன்ற சிறந்ததொரு கொள்கை இதர மதங்களிலெங்கும் கிடையாது. கிறிஸ்துமதத்தின் அஸ்திபாரம் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையிலறையப்பட்டதின்பேரில் வைக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கையைப் பரவச்செய்யும் விஷயத்தில் கிறிஸ்துவர்கள் அணுவத்தனையும் குறைவு செய்யவில்லை. உலகின் எந்த மூலைமுடுக்குகளைப் பார்த்தாலும் கிறிஸ்துமதப் பிரசாரகர்கள் நிறைந்திருக்கின்றனர். ஒரு

சமூகம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிடுமாயின் அந்தச் சமூகத்தின் மதபக்தியும், பிரசார சக்தியும்தான் முதல் முதலாக மரிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இதன்படி இன்று முஸ்லிம்களிடம் இவ்விருவித சக்தியும் குறைந்து அசைவற்றிருப்பதை நாம் காண்கின்றோம்.

இஸ்லாமியப் பிரசாரகர்களை லண்டனுக்கு அனுப்பவேண்டும் என்ற வேண்டுகோள்களை இன்று முஸ்லிம்கள் மறந்துவிட்டனர். ஆயினும், இன்றைக்கில்லாவிட்டாலும் இனி ஒரு நாள் அவர்கள் இவ்வவசியத்தை நன்கு உணருவார்களென்பதிற் சந்தேகமில்லை. எனினும், சமயமும் தருணமும் நம்மைவிட்டகன்ற பின்னரே நமது சமூகம் இவ்வுண்மையை அறியும். அப்பொழுது நமதுமுயற்சி அவ்வளவுபிரயோஜனம் தராது. ஆதலால், இம்முக்கிய காரியத்தை இப்பொழுதே செய்வது அவசியமாகும்.

இவ்விடத்தில் மற்றொரு விஷயத்தை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஐரோப்பாவின் நிலைமை இந்தியாவின் நிலைமையைப் பார்க்கினும் மிகச் சாதகமாக இருக்கிறது. வகுப்புத் துவேஷமும், கோர மனப்பான்மையும், குறுகிய நோக்கமும் இங்கில்லை. நேர்மையானதும் நியாயமானதுமான வாதங்களையும் பிரமாணங்களையும் அங்கீகரிக்கும் தன்மையும் அதிகமிருக்கிறது. இந்நிலைமை பிரசார வேலைக்கு மிகவும் எற்ற நிலைமையாகும். கிறிஸ்துமதத்துக்கு விரோதமாக இயற்கைச் சட்டங்கள் இங்குள்ளவர்களைத் தன்பால் கொஞ்சங் கொஞ்சமாக இழுத்துக்கொண்டிருக்கின்றன. நவீன நாகரீகமும் புதிய சாஸ்திரங்களும், தர்க்கவாதங்களும் இயற்கை மதத்தைத் தேடும்படி ஜனங்களை நிர்ப்பந்தப்படுத்திவிட்டன. நம் சமூகம் இவ்விஷயத்தில் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொள்ளுமாயின் அநேகம் நல்ல பலன்களைக் கண்டு கொள்ள முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

குறிப்பு:—சோதரீர்! இவ்வியாசம் லண்டனில் இருந்துவரும் படித்த முஸ்லிம் ஒருவரால் எழுதப்பட்டது. அங்கு இஸ்லாம் மதப்பிரசாரம் செய்வதற்குத் தக்க ஸ்தாபனமிருக்குமாயின், இவர் இவ்விதமான வியாசமெழுத முன் வந்திருக்கமாட்டார். இங்கிருந்து இங்கிலாந்திற்குச் செல்லும் முஸ்லிம் மாணவர்களிற் சிலர் தங்களால் இயன்றவரை அங்கு இஸ்லாத்தைப்பற்றிப் பிரசாரம் செய்வது வழக்கமாக இருந்துவருகிறது. முன்னொரு சமயம் வங்காளத்திலுள்ள அப்துல்லா சுஹ்ரவர்தீ என்பவர் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்க இங்கிலாந்து சென்றிருந்தபோதுதான் "மிஷ்காத்" ஷரீபை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தார். அதனை நமது நாட்டுக் காதியானிகள் தமிழில் மொழி பெயர்த்து தக்க ஊதியம் சம்பாதித்தனர். ஆனால், அரும்பாடுபட்டு அறபியிலிருந்து ஆங்கிலத்தில் எழுதிய இப்பெரியாரின் பெயரைக்கூட இத்தமிழ்ப் பிரசுரத்தில் சொல்லாமல் மறைத்துவிட்டனர். இதுவுமன்றி காதியானிக் கூட்டத்தார் சென்ற 20 வருஷகாலமாக இங்கிலாந்தில் இஸ்லாமியப் பிரசாரம் புரிந்து வருவதாகக்கூறி நம்மிடம் அநேகம் பிரசுரங்களையும், புகைப்படங்களையும் அனுப்பி நமது பணத்தைச் சுரண்டிச் சென்றிருக்கின்றனர்; சுரண்டவும் முயற்சிக்கின்றனர். அதுவும் போதாதென்று முன்னொரு சமயம் காஜா கமாலுத்தீன் சென்னை முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து, களங்கமற்ற முஸ்லிம்களை ஏமாற்றிப் பணம் பறித்துச் சென்றார். சமீபகாலத்தில் அப்துல் மஜீது என்பவரும் காஜாகமாலுத்தின் தம்பியும் சென்னை, பெங்களூர், திருச்சி, மதுரை, முதலிய இடங்களுக்குச் சென்று, தாங்கள் இங்கிலாந்தில் இஸ்லாத்தைப்பற்றிப் பிரசாரம் புரிவதாகப் பறைசாற்றினர். ஆனால் நமதுதலைவர் மௌலானா மௌலவீ செய்யித் முர்த்தஜா சாஹிப் பஹதூர், M. L. A., அவர்கள், திருச்சியில் அவர்களிடம் கேட்ட கேள்விக்கு அன்னோர் தக்க பதில் கூற வகையறியாமல், "எவரேனும் இஸ்லாத்தைத் தழுவ முன்வந்தால் கலிமாவை மாத்திரம் நாங்கள் சொல்லிக்கொடுப்போம் அப்பால் அவர் என்ன செய்தாலும் அதைப் பற்றிக் கவனிக்கமாட்டோம்" என்று பதில் கூறி இருக்கின்றனர். இதுதானா இஸ்லாமிய பிரசாரம்? இப்படி இஸ்லாமியப் பிரசாரம் செய்தால் இஸ்லாத்தின் சத்தியத்தை இங்கிலாந்திலுள்ளவர்கள் உணர்ந்துகொள்ள முடியுமா? இதில் ஏதேனும் நன்மை ஏற்படுமா? என்பதை முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்! இக்கூட்டத்தார் இங்கிலாந்தில் இஸ்லாத்தின் பெயரால் காதியானிப் பிரசாரத்தையே புரிந்து வருகின்றனர். காதியனி மதம் என்று கூறிக்கொண்டு பிரசாரம் செய்யச்சென்றால் நம்மவர் பணஉதவி செய்யமாட்டார்கள் என்

பதும், தங்களுடைய பிரசாரத்தை எதிர்த்துப் பிரசாரம் புரியத் தலைப்பட்டுவிடுவார்கள் என்பதும் இக்கூட்டத்தாருக்கு நன்கு தெரியும். ஆதலால், இவர்கள் இஸ்லாத்தின் பெயர் சொல்லி நம்மிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு, லண்டன் வோக்கிங்கில் முஸ்லிம்களால் கட்டப்பட்ட மஸ்ஜிதிலிருந்து கொண்டு தங்களது காதியானி மதத்தை கவலையில்லாமல் பிரசாரம் செய்துவருகிறார்கள். இஸ்லாத்தின் பால் பக்தியும் விசுவாசமும் கொண்டு அதைத்தழுவ விரும்பும் சிலரையும் இஸ்லாத்தில் சேர்ப்பதாகக் கூறி கலிமாவைச் சொல்லிக்கொடுத்து, காதியானிப் புத்தகங்களைப் படிக்கக்கொடுத்துவிடுகிறார்கள். இதனால், அங்குள்ள சில ஐரோப்பிய நவ்முஸ்லிம்கள் இஸ்லாம் மதம் என்று நினைத்து காதியானி மதத்தைப் பயின்றுவருகின்றனர். இவ்வுண்மையை உணர்ந்துதான் வியாசக் கர்த்தா அவர்கள், இங்கிலாந்தில் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் விஷயமாக, இந்திய முஸ்லிம்களை வேண்டிக்கொண்டு இதனை எழுதமுன்வந்திருக்கிறார். ஆதலால், இவ்வியாசம் நம்மவரிலுள்ள சகல அந்தஸ்து வாய்ந்தவர்களும் கவனிக்கத்தக்கதும், இவ்வியாசத்தில் கூறப்பட்டுள்ள இஷாஅத்துல் இஸ்லாத்தில் சிரத்தை கொள்ளத்தக்கதுமாகும். இத்தனை காலம் வரை நம்மவர் ஏமாற்றமடைந்து காதியானிகளிடம் பணங்கொடுத்து இஸ்லாத்துக்கு இடர் செய்ய உதவியதுபோலில்லாமல் உண்மையாகவே இஸ்லாமியப் பிரசாரம் செய்யத்தக்க ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதனை முன்னேற்றமடையச் செய்ய முயலுவார்களாக!

ஹஸ்ரத் அபூதர்ரு கிபாரி (ரலி.)

தங்கள் பெயர் ஸயீத் என்பதாகும். தந்தையின் பெயர் ஹாரிது. அபூதர்ரு என்னும் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள். தாங்கள் கிபார் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் அவர்கள் ஈ.பி.கோ 572-ம் ஆண்டில் 'அஸ்கான்' என்னுமூரில் பிறந்தார்கள். சிறு பிராயமுதல் ஹஸ்ரத் அவர்கள்பால் மனோ உறுதி, தைரியம், வீரத்தனம் முதலிய சிறந்த குணங்கள் காணப்பட்டு வந்தது.

அறியாத காலம்

ஆரம்பத்தில் தாங்கள் அனீதிபுரிவதிலும், கொள்ளையடிப்பதிலும் பிரக்யாதிபெற்றிருந்தார்கள். இது சம்பந்தமாய் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள். அதாவது:—"கிபார் வர்க்கத்தார் அரபிகளிலேயே பெரும் வன்னஞ்சர்களாகவும், கிருபை தயை யற்றவர்களாகவும் விளங்கினார்கள். அதிலும் அபூதர்ரு அவர்கள் யாவரினும் குறிப்பிடப்படுபவராக இருந்தார்கள். இவ்வாறே அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொரு நபரும் ஒருவரைவிட ஒருவர் மிகைத்தவராகவே யிருந்தார். சற்குணம் நல்லொழுக்கம் என்பனவைகளே அவர்களைவிட்டு எடுபட்டுப் போயிற்றெனக் கூறலாம். அவர்களிடம் மனிதத்தன்மை என்பதேயில்லாது எடுபட்டுப் போய்விட்டதால் அநீதிபுரிவது, அதிக்கிரமம் செய்வதுபோன்ற துற்செய்கைகள்மீது அன்னோர் பெருமை பாராட்டுபவர்களாக இருந்தார்கள்" என்பதே.

மானிடன் எந்தக்கூட்டத்தில் தோன்றுகின்றானோ அக்கூட்டத்தின் செயல்கள் இவனிலும் ஏற்படுகிறதென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும் ஓர் விஷயமாகும். அத்தன்மை போல் ஹஸ்ரத் அபூதர்ரு அவர்கள் பாலும் அக்குணங்கள் காணப்பட்டது. தாங்கள் அம்பு எய்வதைப் பழகிக்கொண்ட உடனே சிநேகிதர்களுடன் பற்பல இடங்களுக்கும் சென்று வழிப்பறிக்கொள்ளை யடிப்பதிலீடுபட்டார்கள். அவர்கள் சுபாவத்திலேயே தைரியத்தன்மை ஏற்பட்டிருந்ததால் அவ்வேலையில் மென்மேலும் அதிக ஊக்கத்தைக் கொடுத்துவந்தது. எனவே ஏழை வழிப்போக்கர்களைக் கண்டவுடன் ஆட்டுமந்தையில் புலிபாய்வதுபோல் பாய்ந்து கொள்ளையிடுவார்கள்.

கொள்ளையிடுவதினின்று திரும்புதல்

கி. பி. கோ. 614-ம் ஆண்டில் இஸ்லாம் என்னும் சூரியன் மக்கமா நகரிலிருந்து கிளம்பி

சமீப இடங்களில் பிரகாசிக்க ஆரம்பித்த போது, மக்காவில் ஓர் ரஸூல் தோன்றியிருக்கின்றார்கள்; அவர்கள் ஞாயம் ஒழுங்கு நீதி தயாளம் முதலிய சற்குணங்களுக்குச் சக்கிரவர்த்தியாக இருக்கின்றார்கள்; ஒரு சிறந்த வழிகாட்டிக்கு வேண்டிய சகல விசேஷங்களும் அவர்கள்பால் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன; அவர்கள் சற்குணசாலியாகவும் இதரர்களின் சுகதுக்கங்களை கவனிப்பவர்களாகவும், ஏழைகளின்மீது அதிகப்பற்றுக் கொண்டவர்களாகவுமிருக்கின்றார்கள் என்றும், அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவதற்கு தகுதியுடைய வேறு வஸ்து கிடையாது; அவனே உலகமனைத்தையும் படைத்து அதற்கு எஜமானாக இருக்கின்றான்; அவன் தன் அடியார்கள்மீது பெரும் கிருபையாளனாக இருக்கிறான்; அடியார்கள் அவனது கட்டளைக்கு எவ்வளவு தூரம் மாறுசெய்தபோதிலும் அக்குற்றத்தை மன்னிக்கத் தேடியவுடன் அதனை மன்னித்துவிடுகிறான்; விக்கிரகங்களை வணங்குவதால் யாதொரு பிரயோசனமும் கிடையாது; அது யாருக்கும் எஜமானாகயில்லை; அதனால் யாருக்கும் நலவு இடர்களைச் செய்யமுடியாது என்பவைகள் அவர்களின் முதல் போதனையாக இருந்து வருகிறதென்றும் கேள்விப்பட்டார்கள்.

இச்செய்திகள் ஹஸ்ரத் அவர்களில் ஒரு பெரிய மாறுதலை யுண்டுபண்ணிவிட்டது. அதனால் ஹஸ்ரத் அவர்கள் சுபாவத்தில் ஏற்கனவே இருந்த சிறந்த குணங்கள் மிகைக்க ஆரம்பித்தது; இடையிலேற்பட்ட துர்ப்பழக்கங்களெல்லாம் அகண்டோடிற்று; அதுவரை புரிந்துவந்த அநீதி அதிக்கிரமங்களெல்லாம் ஒவ்வொன்றாக ஞாபகத்திற்கு வந்து தன்னுணர்வற்றவர்களாய்விட்டார்கள். இதுவன்றி மறுமையின் ஞாபகம் மனதில் ஓர் புதிய மாறுதலையுண்டுபண்ணிவிட்டது.எனவே, தூய்ய மனதுடன் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பாவ மன்னிப்புத் தேடியவர்களாய் தங்கள் வாணளின்மீதக் காலங்களை ஏகத்துவம் பொருந்திய அல்லாஹ் தஆலாவின் வணக்கத்தில் செலவிட வேண்டுமென்னும் உறுதி கொண்டார்கள். இவ்வாறு செய்வது, சென்ற பாவங்களுக்கு பரிகாரமாக இருக்குமென்னும் ஆதரவு வைத்தவர்களாய் வணக்கத்திலீடுபட்டதன் காரணமாக பெரிய வணக்கவாளியாகிவிட்டார்கள்.

ஊரைவிட்டு வெளியாகுதல்

ஹஸ்ரத் அவர்களின் இன்னோக்கங்கள் அவர்கள் கூட்டத்தார்களுக்குத் தெரியவே அன்னோர் மிகவும் பொருத்தக்கேடுடையவர்களாகி ஹஸ்ரத் அவர்களைக் கொன்றுவிடுவதற்கும் தயாராய்விட்டார்கள். இது விஷயத்தைத் தெரிந்துகொண்ட ஹஸ்ரத் அவர்கள் தங்கள் தாயார், தமயனாரான உனைஸ் (ரலி.) ஆகியவர்களுடன் கிளம்பி மக்காவைநோக்கிச் சென்றார்கள்.

பெருமானார் (ஸல்.) சந்திப்பு

ஹஸ்ரத் அவர்கள் பல இடங்களிலும் தங்கி நுபுவ்வத்தின் மூன்றாம் ஆண்டு ரஜப் மாதம் 6-ந் தேதி மக்கமாநகர் வந்தடைந்தார்கள். அதுபொழுது நபிகள் பெருமான் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூதாலிப் (ரலி.) அவர்களில்லத்தில் "இஸ்லாமிய சகோதரத்துவம்" என்னும்பொருள்பற்றி அரிய சொற்பொழி வாற்றிக்கொண்டிருந்தார்கள். அதன் சாராம்சம்வருமாறு :—

"சபையோர்காள்! இன்றைய தினம் அரபிகள் தலைமைப் பதவியென்னும் கெர்வத்திலீடுபட்டிருப்பதை பார்க்கின்றோம். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருசமுகத்திலுமுள்ள ஒவ்வொருவரும் தம் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஆசைகொண்டவராக இருக்கிறார். ஏழைகள் தனவந்தர்களுக்கு அடிமைத்தனம் செய்வதற்காகவே உயிர் வாழ்வதாகத்தெரிகிறது. சீமான்கள் தங்களை மானிடப் பதவியைவிட மேலான அந்தஸ்திலுள்ள வர்களெனக் கருதிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுடைய தோற்றத்தில் ஏழைகள் மிருகங்களைப் பார்க்கினும் கேவலமாக மதிக்கப்படுகின்றனர்.

சில இடங்களில் செல்வந்தர்கள் முன் ஏழைகள் உட்காருவதும் தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் முன்பாக வாய்திறப்பது பெரிய குற்றமாகவும் அவர்கள் புரியும் காரியாதிகளைப்பற்றிவிசாரிப்பது கொல்லப்படுவதற்குக் காரணமாகவும் ஆகிவிடுவதாகத் தெரிகிறது.ஏழை மனிதன் தனவந்தர்களிடம் வார்த்தையாட நேரிடும்போது அவனுடைய முகம் சிவந்து ஐவாய் மிருகங்களைப்போலாய் விடுகின்றான். இந்நிலைமையில் அவன் தன்கஷ்டங்களை எவ்வாறு பொருத்துக் கொண்டிருக்கமுடியும்? இதுமானிடத்தன்மையின் கெட்ட தோற்றங்க

ளல்லவா? இது மானிடத்தன்மையை கொலை செய்வதாக இருக்கவில்லையா? இவ்விஷயங்களினுல் எனக்கு கஷ்டமும் மனவருத்தமுமேற்படுகிறது. சபையோர்களே! ஏழைகளும் அல்லாஹ்வின் அடியார்களாகுமென்பதையும், அவர்களுடன் தக்க முறையில்நடந்துகொள்ளுவது கொண்டு அன்னோர் சந்தோஷமும் இடர் புரிவதுகொண்டு கஷ்டமும் அடைவதால் அவர்களுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் ஞாபகத்தில் வையுங்கள்" என்பதே.

நமது உலகரட்சகர் சமாதானத்தூதர் (ஸல்.) அவர்களது சொற்பெருக்கு முற்று பெற்றவுடனே ஹஸ்ரத் அபூதர்ரு (ரலி.) அவர்கள் தன்னுணர்வற்றவர்களாய் முன்வந்து துய்ய கலிமாவை ஓதி இஸ்லாத்தைக்கொண்டு சிறப்பிக்கப்பட்டார்கள். அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, நீங்கள் யார், எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்? என வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் யான் 'கிபார்' வர்க்கத்தைச் சேர்ந்தவரெனத் தெரிவித்தார்கள். நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இவ்வார்த்தையைச் செவியுற்றவுடனேயே தங்கள் கையை நெற்றியில் வைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் இச்சம்பவத்தை விபரிக்குங்கால், கிபார் வர்க்கத்தார் அனீதிபுரிவதில் பெயர் பெற்றவர்களாகவும் கொள்ளையடித்து ஜீவனஞ் செய்யும் தொழில் புரிபவர்களாகவும் இருக்கும் நிலைமையில்,அவர்களில் இவ்வாறு சத்தியத்திற்குக் கட்டுப்படக்கூடிய மனிதர் எங்கிருந்து ஏற்பட்டாரென, பெருமானார் (ஸல்.) ஆச்சரியமடைந்ததாகத் தெரிவித்தார்கள். எந்தவகையிலும் சத்தியசீலர் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூதர்ரு (ரலி.) அவர்களின் மனத்தூய்மையைக்கண்டு பெரிதும் சந்தோஷமடைந்தார்கள்.

குரைஷியரின் அநீதி

ஹஸ்ரத் அவர்கள் மனேஉறுதியும் தைரியமுமுடையவர்களாக இருந்தார்களாதலின் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியவுடன் மிகவும் மனே நிம்மதியோடு கஃபத்துல்லா ஷரீபின் முத்தவெளியில் நின்றுகொண்டு, "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு பாத்தியஸ்தன் யாருமில்லை, அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற கொடையாளன், அவன் ஏகத்தனித்தவன் என்பதையும், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்.) அவர்கள் அவனுடைய தூதராகுமெனவும் நான் சாக்ஷியங் கூறுகின்றேன்" என உறத்ததொனியில் அறிவித்தார்கள். குரைஷியர்கள் இவ்வார்த்தைகளைச் செவியுற்று சும்மா இருப்பார்களா? உடனே அவர்கள் துள்ளிவிழுந்து ஹஸ்ரத் அவர்களை அடித்தார்கள், அதனுல் அவர்கள் பிரக்ஞையற்றவர்களாய் விட்டார்கள். சிலமணிநேரத்திற்குப்பின் அவர்களுக்கு பிரக்ஞையுண்டாயிற்றுயினும் அதுபொழுதும் அவர்கள் வாயிலிருந்து, "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்கு பாத்தியஸ்தன் யாருமில்லை, முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் அவனுடைய ரசூலாக இருக்கும்" என்னும் வார்த்தையே வெளியாகிக் கொண்டிருந்தது.

ஹிஜ்ரத் செய்தல்

ஹஸ்ரத் அவர்கள் இந்நிலைமையில் பற்பல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு சிலகாலம் அங்கிருந்துவிட்டு பின்னர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தங்களூர்போய்ச்சேர்ந்து அங்கு இஸ்லாமியப் பிரசாரம் புரிவதி லீடுபட்டிருந்தார்கள். தங்களது அழகான முயற்சியின் பயனுக 'கிபார்' வர்க்கத்திலும் 'அஸ்லாம்' வர்க்கத்திலுமுள்ள நூற்றுக்கணக்கானேர் இஸ்லாத்தைக்கொண்டு சிறப்பிக்கப்பட்டார்கள்.

மதீனு செல்லல்

ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு ஷஅபான்மீ 11-ந் தேதியன்று ஹஸ்ரத் அவர்கள் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் சமுகம் சென்று அவர்களுக்கு பணிவிடை செய்வதற்காகவே தங்களைத் தத்தம் செய்துவிட்டார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள்பேரில் ஹஸ்ரத் அவர்களுக்கு அளவற்ற பிரீதி ஏற்பட்டிருந்ததால் பெருமானர் (ஸல்.) அவர்களுக்கு ஊழியஞ் செய்வதை தங்களுக்குள்ள பெரும்பாக்கியமெனக்கருதிக் கொண்டிருந்தார்கள்.

சோதரீர்! இஸ்லாத்தின் சிறப்புற்ற நற்போதனைகளும், நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களது அமிர்தம் போன்ற உபதேச இரத்தினங்களும் வன்னெஞ்சமுடைய—கொடுங்கோன்மையுடைய — வழிபறிக் கொள்ளைக்காரர்களையெல்லாம் எவ்வாறு சன்மார்க்க சீலர்களாகச் செய்துவிடுகிறதென்பதை மேலே கூறப்பட்டுள்ள சம்பவத்திலிருந்து நன்கு தெரிந்துகொண்டு நல்லுணர்ச்சிபெற்று நிகழ்வோமாக.

ஞான தினகரன்

குலபாயேராஷிதீன்களுக்குப் பிறகு பனு உமய்யா வம்சத்தினர் இஸ்லாமிய நாட்டில் அரசு புரிந்துவந்தனர். இவர்களிற் பலர் அரசு செலுத்தியபின் பனுஅப்பாஸ், பனு பாத்திமா ஆகிய வம்சத்தார் இவர்களது ஆட்சிக்கு விரோதமாகத் தோன்றி இஸ்லாமிய, தேசங்களை ஆட்சி புரியவும் கிலாபத் பதவியை வகிக்கவும் தாங்கள் தாம் அருகதையுள்ளவர்கள் என்று தாவாச் செய்தனர். இதனுல் நாட்டில் கட்சிப்பிளவும், வேற்றுமையும், துவேஷமும், கலகமும், அரசாங்க அடக்குமுறையும் தாண்டவமாடிற்று. இறுதியாக பனுஅப்பாஸ் வம்சத்தார் அதிகாரத்துக்கு வந்தனர். பிறகு, இவ்வம்சத்தாரிடமிருந்து ஆட்சியை மாற்றிவிடவேண்டுமென்பதற்காகச் சதியாலோசனைகளும், உள்நாட்டுக் குழப்பங்களும் நடைபெற்றுக்கொண்டே இருந்தன. இதனுல், இவ்வம்சத்தாரின் பலமும் அதிகாரமும் நாளுக்குநாள் குன்றிவிட்டது. வேறு பலர் தேசத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அப்பாஸிய்யா வம்சத்தினர் கலீபா என்ற பதவியை மட்டிலும் பெயருக்கு மாத்திரம் வகித்துவந்தனராயினும் உண்மையான அதிகாரம் வேறு அரச வம்சத்தினரிடமிருந்தது.

இவ்வித நிலைமையில் நாட்டிலுள்ள ஜனங்கள் சரிவர கவனிக்கப்படாமலும், சத்திய இஸ்லாத்தின் சரியான நேர்வழி காட்ட வசதியில்லாமலும் நாட்டில் குப்று, இல்ஹாத் முதலிய கொள்கைகள் பரவி இருந்தன. யூதரும், கிறிஸ்துவரும், நாஸ்திகர்களும் தங்களது வழிகெட்ட கொள்கைகளை நாட்டில் பிரசாரம் புரிவதும், அவர்களை முஸ்லிம் தர்க்க சாஸ்திரிகளும், விதண்டாவாதிகளும் எதிர்த்துப் பிரசங்கம் புரிவதும், விவாதச் சபைகள் கூடுவதுமாக இருந்தது. இதனுல், மக்களின் நாட்டம், தக்வா பக்தி சம்பந்தப்பட்ட கலைகளில் செல்லாமல் தர்க்க சாஸ்திரம் முதலிய கலைகளிலேயே கவனம் தோன்றி மெஞ்ஞானம் மறைந்திருந்தது. தர்க்கவாதிகளின் செல்வாக்கு நாட்டிலிருந்ததால் ஆங்காங்கு அஸ்ஹாபுல்லாஹிர் அஸ்ஹாபுல்பாத்தின் (புறக் கல்வியாளர், அகக்கல்வியாளர்)என்ற பெயரால் முஸ்லிம்களின் கொள்கைகளும் எண்ணங்களும் மாறுபட்டு இஸ்லாமிய உலகம் சீர்குலைந்து, அஞ்ஞானம் எனும் அந்தகாரத்தால் மூடப்பட்டு, ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது.

இவ்விதமான நிலைமையில் நமது ஷெய்குனு ஸெய்யிதுனு, கௌதுனு குத்புல் அக்தாப் ஹஜ்ரத் முஹையித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்ற ஞான தினகரன் தனது செங்கதிர்களைப் பரப்பி உலகில் தோன்றிற்று. நமது ஞானசிரியர் அவர்களது பரிசுத்த போதனைகளால் உலகில் ஞான ஒளி மறுபடியும் பிரகாசித்தது. ஞானக் கண் திறந்தது. வழிகேட்டில் ஆழ்ந்திருந்த மக்கள் நேர்வழியைக் கண்டனர். பாவமும் பழியும் புரிந்த மக்கள் சிறந்த நற்குண நல்லொழுக்கவான்களாயினர். உலகின் நிலைமையே வேறு விதமாக மாறி மார்க்கபக்தியும், இறை வணக்கமும், நற்குண நல்லொழுக்கமும், மெஞ்ஞானமும் மறுபடியும் சிறந்தோங்கின.

உலகத்துக்கு மெஞ்ஞான வழிகாட்டி, சன்மார்க்கத்தை உயிர்ப்பித்தவர்கள் என்றசிறப்புப் பெயர்பெற்ற ஹஜ்ரத் ஷெய்கு முஹியித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானீ (றழி.) அவர்கள் ஹிஜ்ரி 470-ம் ஆண்டு ஷஅபான் மாதத்தில் ஈரான் தேசத்திலுள்ள ஜெய்லான் எனும்பதியில் பிறந்தார்கள். இவர்களது பிறப்பினுல் இவர்களது பெற்ருேர்களான ஹஜ்றத் அபூஸாலிஹ் (றழி.) அவர்களும், ஹஜ்றத் ஸெய்யிதா உம்முல் கைர்பாத்திமா (றழி) அவர்களும் அதிக மகிழ்ச்சியடைந்தனர். இப்பெரியார் உலகில் பெரும் அந்தஸ்தை வகிக்கக் கூடியவர்களாக இருந்ததால் இவர்களது பிறப்பே உலகுக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தருவதாக இருந்தது. எனெனில், இவர்கள் பிறக்கும்போது இவர்களது மாதாவுக்கு வயது 60 - ஆக இருந்தது. இந்த வயதில் சாதாரணமாக ஸ்திரீகள் மக்கட்பேறு அடைவதில்லை; மறு உலகப் பிரயாணத்தில் ஈடுபடும் காலமாகும். ஆனுல், நமது பெரியார் உலகில் ஒரு பெரிய அந்தஸ்தை அடையக்கூடியவர்கள் என்

பதை இறைவன் முற்கூட்டியே மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தது போலும். ஆதலால், அன்னையின் 60-ம் பிராயத்தில் நமது ஞானசிரியர் அவர்களைப் பிறக்கும்படிச்செய்தான்.

பிறகு, றமலான் மாதம் பிறந்தது. நமது ஞானசிரியர் ஹஜ்றத் ஷெய்கு அப்துல் காதிர் ஜெய்லானி (றஹ்.) அவர்கள் அன்னையிடம் பகற்காலத்தில் அமுதுண்பதை நிறுத்திக் கொண்டார்கள். தமது அருமைப் புதல்வர் அமுதுண்ணுதிருப்பதன் காரணமென்னவென்பதை அன்னையார் ஆரம்பத்தில் அறியாது அவர்களுக்கு அமுதூட்ட எவ்வளவோ முயன்றும் அவர்கள் அம்மாதம் முழுவதிலும் பகற்காலத்தில் அமுதுண்ணவே இல்லை. இக்காலம் நாத்திகம் தாண்டவமாடும் காலமாக இருக்கும் நிலைமையில், பிறந்த ஒரு மாதத்துக்குள் றமலான்மாதத்தில் நோன்புவைக்கவேண்டியதிருப்பதைக் கவனித்து ஒரு சிசு தனது தாயாரின் முலைப்பாலை அருந்துவதை விட்டுவிடுமா? அந்த சிசுவுக்கு அவ்வளவு அறிவு வந்துவிடுமா? பகற்காலம் முழுதும் பட்டினியாக இருந்தால் குழந்தைதான் உயிருடனிருக்க முடியுமா? என்றெல்லாம் யுக்தி வாதிகள் தங்கள் யுக்தி வாதங்களைக் கிளப்பக்கூடும். ஆனால், புதிய ஆராய்ச்சியிலிருந்து, ஆரம்பகால முதலிலிருந்தே பலமான உணர்ச்சியுள்ள குழந்தைகள் அற்புதமான அறிவுள்ள குழந்தைகளாக இருக்கின்றன என்றும், சில சமயங்களில் அற்புதமான காரியங்கள் அக்குழந்தைகளால் நிகழுகின்றனவென்றும், கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், உலக ஞானசிரியராக உதித்த உத்தமப் பெரியார் ஹஜ்றத் ஷெய்கு அப்துல் காதிர் ஜெய்லானி (றஹ்.) அவர்கள் கைக்குழந்தையாக இருந்த காலத்தில் அமுதுண்ணுமலிருந்தது புத்திக்கு எட்டாத விஷயமன்று. ஆயினும், இது அபூர்வமான சம்பவம் என்பதில் ஐயமில்லை.

ஆரம்பப் படிப்பு

ஹஜ்றத் ஷெய்கு அவர்கள் பிறவியிலேயே நற்குணம், நல்லொழுக்கம், பணிவு, தயை, கருணை முதலிய சிறந்த தன்மையும் கூரிய மதியும், அபார அறிவாற்றலும் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு 5-ம் பிராயம் வந்தபோது அவர்களது அன்னையே அவர்களுக்கு ஆசிரியையாகவிருந்து திருகுர்ஆன், மார்க்கச் சட்டங்கள், இஸ்லாமிய தர்மசாஸ்திரம் முதலியவைகளைக் கற்றுக்கொடுத்தார்கள். 10-ம்பிராயத்திற்குள்ளாகவே நமது ஞானசிரியர் அநேகங் கல்விகளிற் றேர்ந்தவர்களாகிவிட்டார்கள். 11-ம் வயதிலிருந்து நமது ஞானசிரியர் அசரீரியான வாக்குகளைக் கேட்பது வழக்கம். இவ்வாக்குகளைக் கூறியது யார் என்பதை அவர்கள் அறியாமல் ஆரம்பத்தில் கொஞ்சம் பயமடைந்ததும் உண்டு. பின்னர், அதன் உண்மையை அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

கருவிலேயே திருவாயுதித்த இந்தப் பெரியார் அவர்களை "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்றபடி இவர்களது அந்தஸ்து பிற்காலத்தில் மகோன்னத நிலையையடையும் என்பதை உணர்ந்த அவர்களது குடும்பத்தார், அவர்களை மிகப் பக்ஷமாகவும் அன்பாகவும் வளர்த்துப் போஷித்து வந்தார்கள். இவர்களது அன்னையார் தமது அரும்புதல்வரின் அறிவாற்றலை வளர்ப்பதற்காகத் தாமே அவருக்கு மார்க்கக் கல்விகளைப் போதித்துக் கொடுப்பதில் அபாரமுயற்சி செய்தார்கள் என்பதை மேலே கூறி இருக்கிறோம். ஆயினும், தமது மைந்தருக்கு இன்னும் அதிகமானகல்விபுகட்ட வேண்டும் என்ற எண்ணத்தால், அக்காலத்தில் கிலாபத் ராஜதானிப்பட்டணமாக இருந்த 'பகுதாது' நகருக்கு இவர்களை அனுப்ப அனுமதித்தார்கள். அக்காலத்தில் பகுதாது நகரம் கல்வி கேள்விகளுக்கு உறைவிடமாக இருந்ததுடன், பலபெரியார்களும்,கலாவல்லுனர்களும்,நிபுணர்களும் வாழும் ஸ்தலமாகவும் இருந்ததால், பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பலதேசங்களிலிருந்தும் அங்கு வந்து கல்வி பயின்று கொண்டிருந்தனர்.

பகுதாதுப் பயணம்

அன்னையின் அனுமதிபெற்று நமது ஞானசிரியர் ஷெய்கு அப்துல்காதிர் ஜெய்லான் (றஹ்) அவர்கள் கல்வி பயிலுவதற்காக பகுதாது நகருக்குப் புறப்பட்ட காலை அன்னை அவர்கள் 40 தங்க நாணயங்களை அவர்களது சட்டையின் அக்குளில் வைத்துத்தைத்து வழியனுப்பும்போது "மகனே! நீர் எப்பொழுதும் பொய்பேசலாகாது என்று நான் உனக்குவஸிய்யத்துச் செய்கிறேன்; மாதாவின் இவ்வுபதேசத்தை ஒருபோதும் மறக்கலாகாது; நன்ருய் ஞாபகம் வைத்துக்கொள்" என்று கூறி விடை கொடுத்தனுப்பினர்கள். தற்செயலாக

நமது ஷெய்கு அவர்கள் சென்ற வியாபாரக் கூட்டம் வழியில் திருடர்களிடம் அகப்பட்டுக் கொண்டது. அக்கூட்டத்தாரிடமிருந்த வியாபாரச் சாமான்களும் பொருள்களும் பணமும் கொள்ளையிடப்பட்டன. அது சமயம் நமது ஷெய்கவர்கள் சிறுகுழந்தையாக இருந்ததால் கொள்ளைக்காரர்கள் தொந்தரை செய்யவில்லை. ஆயினும், அவர்களிற் பலர் ஷெய்கு அவர்களிடம் வந்து "பிள்ளாய்! உன்னிடம் யாது உளது?" என்று வினவுவர். அப்பொழுது நமது ஷெய்கு அவர்கள் அன்னையின் ஆக்கினைப்படி, என்னிடம் 40 தங்க நாணயமிருக்கிறது" என்று கூறுவார்கள். உடனே, அவர்களது மடியைச் சோதித்துப் பார்ப்பார்கள். பணம் அகப்படுவதற்கு இல்லை. ஆதலால், "சிறுபையன் பொய்யுரைத்தான்" எனநினைத்து அத்திருடர்கள் அப்புறம் சென்று விடுவர். இப்படிப் பலமுறை நடந்தது.

கடைசியாகக் கொள்ளைக்காரர்கள் தங்களுக்ககப்பட்ட பொருள்களைத் தலைவனிடம் ஒப்புவித்து நமது ஷெய்கு அவர்கள் கூறிய இவ் வார்த்தைகளையும் ஆச்சரியமாகக் கூறினர். அவ்வாறாயின் அதனைக் கண்டறிய வேண்டுமென அக்கள்வர் தலைவன் நினைத்து நமது ஷெய்கு அவர்களை அழைத்து வரும்படிச் செய்து, "பிள்ளாய்! உம்மிடமிருப்பதாகக் கூறிய அந்த 40 தங்க நாணயங்களை எங்கே வைத்திருக்கிறாய்" என்று வினவினான். உடனே, நமது ஷெய்கவர்கள் தங்களது சட்டையின் அக்குளில் வைத்துத் தைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்த இடத்தைப் பார்த்தபோது உண்மையாகவே 40 தங்க நாணயமிருப்பதைக் கண்டு அக்கள்வர் தலைவன் பிரமித்தான். நமது ஷெய்கு அவர்களைப் பார்த்து "பிள்ளாய்! இச்சமயத்திலும் கூட உண்மையைக் கூறும்படி உன்னைத் தூண்டியது எது? நாங்கள் கொள்ளைக்காரர்கள் என்பதையும் நீர் கவனிக்கவில்லையே. இந்தப் பணம் இருக்குமிடத்தை நீர் காண்பித்திராவிடில் நாங்கள் எவ்வளவு முயன்றாலும் அது இருக்குமிடத்தை யாங்களறியோமே?" என்று ஆச்சரியத்துடனும் அச்சத்துடனும் வினவினன்.

அதற்கு, ஷெய்கு (றஹ்.) அவர்கள் கொஞ்சமும் அச்சமோ பயமோ எதுவுமின்றி "யான் இந்த தங்க நாணயத்தைக் காப்பதா? அல்லது என்தாயின் உபதேசத்தை மதிப்பதா? என் தாய், யான் பிரயாணம் புறப்பட்டபோது 'மைந்த! எப்பொழுதும் பொய் சொல்லவொண்ணாது' என்று கூறிய உபதேச வாக்குக்கு யான் மீறி நடப்பனோ?" என்று தயங்காமற் கூறினார்கள்.

உண்மையோடியைந்த இச்சத்திய வாக்குகள் கள்வர் தலைவனைக் கலங்கச் செய்தன; அவனையறியாமலே அவனது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் ஓடின; தனது செய்கையை நினைத்து மனமுருகி ஏங்கினன். "இந்தக் குழந்தை தனது தாயின் சொற்கடவாமல் தன்னிடமுள்ள பணத்தையுங்கூடக் கள்வர் வசம் கொடுத்தது; யானோ, முதிர்ந்த அறிவும் உணர்ச்சியும் பெற்றவனாக இருந்தும் என்னைப் படைத்தாளும் இறையின் கட்டளையே மறந்தேன்." என்று வாய்விட்டுக் கூறி அழுதான்; தன்னுடைய பாபச் செய்கைகளையும் குற்றங்களையுங்கூறி வருந்தினான்; துடித்தான், படைத்தாளும் ரக்ஷகனிடம் பாபமன்னிப்புக் கேட்டான்; குழந்தையாக அங்கு நின்றுகொண்டிருந்த நமது ஷெய்கவர்களின் பாதாரவிந்தம் பணிந்தான்; இறைவனிடம் திரிகரண சுத்தியாக மீண்டான்; அங்கு கொள்ளையிடப்பட்ட எல்லாச் சாமான்களையும் பொருள்களையும் உரியவர்களிடம் உடனே ஒப்புக்கொடுத்தான்; நல்வழிக்காளாயினன். தலைவனின் இந்நிலைமையைக்கண்ட ஏனைய திருடர்களும் தங்கள் பாபச் செய்கைகளைவிட்டு பரமனின் மன்னிப்புக்கேட்டுப் பயபக்தியாளர்களாயினர். இச்சம்பவம் ஹஸ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜெய்லானி (றஹ்) அவர்களின் முதலாவது அற்புதமாகும்; மக்களை ரட்சித்த முதல் காட்சியுமாகும்.

கல்வித் திறமை

நமது ஞானசிரியர் ஷெய்கு அப்துல்காதிர் ஜெய்லானி(றஹ்.) அவர்கள் ஹிஜ்ரீ 488-ம் வருஷத்தில் பகுதாது நகரம் வந்து 496-ம் வருஷம்வரை அங்குள்ள பிரபலஅறிஞர்களிடமும், ஆசிரியர்களிடமும்கல்விபயின்று ஹிஜ்ரீ497-ம் வருஷத்தில் அதை நிறுத்திக் கொண்டார்கள்.

இவர்களது கல்வித்திறமையைப்பற்றி ஹஜ்றத் மௌலானா அபுஸ்ஸுஊத் (றஹ்.) அவர்கள் "ததுகிரத்துல் உப்பாத்" என்ற கிரந்தத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்கள்:—

"ஸெய்யிதுனா கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் இஸ்லாமிய உலகில் மிகப் பெரிய

முஹத்திதாகவும் (நாயக வாக்கியக் கலையில் தேர்ந்த பண்டிதராகவும்) முபஸ்ஸிராகவும் (சிறந்த வேத வியாக்யானியாகவும்) இருந்தார்கள். இவர்களது கல்வித் திறமையையும் ஞானப் பெருக்கையும் காணும்போது சங்கைவான்களான ஸஹாபிகளின் கல்வியும் ஞானமும் ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தன. இவர்களது ஜீவியம் கல்விக்கும் ஞானத்துக்கும் கரையில்லா சமுத்திரமாக இருந்தது. இவைகளிலிருந்து ஆயிரக்கணக்கான அறிஞர்களும் கலாவல்லுனர்களும் பிரயோஜன மடைந்துகொண்டிருந்தார்கள்.

யுக்தி, சுருதி சம்பந்தமான எல்லாக் கலைகளிலும் இவர்கள் பூரண பாண்டித்துவம் பெற்றிருந்தார்கள். மிகமிக முக்கியமும் சிக்கலுமான பிரச்சினைகளையும் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் தெளிவுபடுத்தி விடுவித்துவிடுவார்கள். இப்பிரசினையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காக வருபவர்கள் இவர்களுடைய இச்சுருக்கமான பதிலைக் கேட்டுத் திருப்தியடைவர். புறக்கல்விகளிலும்கூட அறப், அஜம் ஆகிய தேசங்களில் நமது ஷெய்கு அவர்களுக்கு யாரும் நிகரில்லை என்று அவர்களது காலத்திலுள்ள பேரறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆகவே, அவர்கள் பரிபூரணமான பக்கீஹ்-இஸ்லாமியச் சட்ட நிபுணராகவும், நிகரற்ற வேதவியாக்யானியாகவும், இணையில்லா நாயகவாக்கிய பண்டிதராகவும் இருந்தார்கள்.''

தெய்வ வழிபாடு

புறக்கல்விகளைக் கற்று முடிந்ததும் நமது ஷெய்கு (றஹ்.) அவர்கள் இறைவணக்கத்திலும், தெய்வ வழிபாட்டிலும் தங்களுடைய காலத்தைப் பூரணமாகக் கழிக்க ஆரம்பித்தார்கள். இராக் தேசத்திலுள்ள பயங்கரமான அடர்ந்த ஆரண்யங்களிலும், பாலை வனங்களிலும் 25 வருஷகாலம் இறை வணக்கம் புரிந்தார்கள். இவ்விருபத்தைந்து வருஷகாலத்திற்கிடையில் ஒரு க்ஷணப்பொழுது கூட இறை ஞாபகத்தை மறந்ததில்லை. பதினேரு வருஷ காலம்வரை இஷாத் தொழுகைக்காகச் செய்த உலுவினல் பஜ்ருத் தொழுகையை நிறைவேற்றினர்கள். இராக்காலங்களில் நித்திரை அதிகமாக வந்து சோர்வுறச் செய்யுமானல் ஒற்றைக்காலால் நின்று திருமறையைத் திருத்தமாகப் பாராயணஞ் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். 15 வருஷகாலம் தொடர்ந்து நோன்பு வைத்தார்கள். இக்காலத்தில் நோன்பை விடும் வேளையிலோ அல்லது நோன்புவைக்கும் வேளையிலோ புசிப்பதற்காக எதையும் சித்தம் செய்வதில்லை. கானகத்திலுள்ள இலையும் தழையும், பச்சை பேரீத்தங்காயும், ஊற்று நீரும் உண்டியாயுதவின.

நமது ஞானசிரியர் ஷெய்கு அப்துல் காதிர் ஜெய்லானி (றஹ்.) அவர்கள் தங்களைப்பற்றி ''மிஸ்பாஹுஸ் ஸுலூக்'' என்ற கிரந்தத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள் :—

''நான் பல வருஷங்கள்வரை இராக் தேசத்துக் காடுகளில் ''முஜாஹதா''ச் செய்துகொண்டிருந்தேன். அங்கு காட்டுப் பேரீத்தங்காய்கள் தான் எனக்கு உணவாக இருந்தன. உடை, அரையில் கட்டிக்கொள்ளும் ஒரு வேஷ்டியும், ஒரு சட்டையும், ஒரு தலைப்பாகையும், என்னிடமிருந்தது. இத்துணிகள் அழுக்காகிவிட்டால் கிணறு அல்லது சுனை இவைகளைத் தேடிச் சென்று அவைகளை தோய்த்துக் கொள்வேன். இது நான் வாலிபமாக இருந்த காலமாதலால், மனத்தில் அநேகம் எண்ணங்களும் ஆசைகளும் உண்டாயின. ஆனல், அவைகளை நான் மிகைத்து விடுவேன். நல்ல உடையணியவும், அருசுவை யுண்டி உண்ணவும் எனக்கு எண்ணமுண்டாவதில்லை. எனக்கேற்படும் சகல நாட்டங்களின் திசையும் அல்லாஹுதஆலாவின் பக்கமே இருந்ததால் அவனை வணங்குவதிலேயே ஈடுபட்டிருந்தேன். மனத்தில் ரியாஜத், முஜாஹதா ஆகியவைகளைப்பற்றிய ஊக்கமிருந்தது. மூளையில் அகத்தூய்மையைப் பற்றிய எண்ணமே குடிகொண்டிருந்தது. பேரின்ப நெருப்புதான் இருதயத்தில் எறிந்து கொண்டிருந்தது. அல்லாஹு தஆலாவின் பாலுள்ள அன்பு அக்கம்பக்கத்தில் ஒளிர்வுவிட்டுக்கொண்டிருந்தது. இவ்வித நிலைமையில் 25 வருஷ காலம் கழிந்தது. நான் எனது நோக்கத்தில் வெற்றிபெற்றேன். நான் இஷாவுக்குச் செய்த உலுவினல் பஜ்ரு தொழுகையை நிறைவேற்ற இறைவன் எனக்குக் கிருபை செய்தான். இராக்காலங்களில் நான் தஸ்பீஹு செய்வதிலும், தூய்மையாக்கிவைப்பதிலும் ஈடுபட்டிருந்தேன். இரவானது தன்னுடைய சடையை விரித்துப் பரவி, வானத்தில் வெளிச்சம் கொஞ்சங் கொஞ்சமாக மினுங்கிக் கொண்டு, உலகின் சகல கோணங்களிலும் அரவமொடுங்கி இருக்கும்போது, நான் எனது றப்பை தஸ்பீஹு, தக்தீஸ் செய்துகொண்டிருப்பேன். சில சமயங்களில் ஆத்மாவுக்கு அமைதியின்மையும் ஏற்படுவதுண்டு. மனத்

தில் ஒருவிதமான இரக்கச் சித்தமும் தோன்றும். கண்களிலிருந்து ஜலம் தாரை தாரையாக ஓடும். நான் பிரதிக்ஞையற்றுக் கிடப்பேன். இந்த ரியாஜத்துடைய கால சம்பவம் எனக்கு இன்னமும் ஞாபகமிருக்கிறது. அது ஞாபகத்துக்கு வருவதால் மனத்துக்கு ஒருவித இன்பம் உண்டாகிறது.''

ஜனங்களுக்கு உபதேசம்

ரியாஜத், முஜாஹதா ஆகிய கிரியா மார்க்கங்கள் நமது ஞானசிரியர் ஷெய்கு (றஹ்.) அவர்களைக்கடந்த பின்னர், ஜனங்களுக்குப் புத்திமதி கூறி வழிகாட்டும் தொண்டாற்றினார்கள். மகத்தான பெரும்வழிகாட்டியான ஒரு தெண்டிப்புடையோர்க்கு இருக்கவேண்டிய சகல அம்சங்களையும் இறைவன் அவர்களுக்கு அளித்திருந்தான். அவர்களுடைய ஜீவியத்தின் ஒரு பிரிவு கூட புத்திமதி கூறுவதையும் வழிகாண்பிப்பதையும்விட்டுக்காலியாகஇருக்கவில்லை. ஹுஜூர் அவர்கள் சிறந்த உபதேசியாக இருந்தார்கள். அவர்ளுகடைய பிரசங்கத்தில் மிகைப்படுத்திக் கூறுதல் என்பதே இருப்பதில்லை. நிர்ப்பயமாக உண்மையையும்சத்தியத்தையும் வெளியிடுவார்கள். அவர்களுடையவாக்கியத்தில் இன்பமும், வணக்கத்தின்பிரீதியும், பிரசங்கம்புரியும்அபூர்வ முறையும், பதக்கட்டும் அதைக்கேட்பவர்களைப் பரவசப் படுத்திவிடும். அவர்களது பிரசங்கத்தின் ஒவவொருபதமும் இருதயத்தைப் பிளந்துவிடத்தக்கதாகவும், மனத்தில் நன்கு பதியத்தக்கதாகவும், பயபக்தி ததும்புவனவாகவும், அனுதாபம், அன்பு ஆகியவைகள் நிரம்பியனவாகவுமிருக்கும். இவர்களது உள்ளத்திலிருந்து புறப்படும் வாக்கியங்கள் அவைகளைக் கேட்போரின் இருதயத்தில் அம்புபோல் பாய்ந்து கொண்டிருந்தன. இவர்களது வசிகர சக்தி பொருந்திய பிரசங்கங்களாலும், முஜாஹதாவுடன் கூடிய முயற்சியினாலும் பல்லாயிரக்கணக்கான பாஸிக் பாஜிர்-பாவிகளும் முதல் தரமான முத்தக்கீகளாகவும் பயபக்தியாளராகவும் மாறிவிட்டனர். எவருடைய உபதேசத்தையும், புத்திமதிகளையும் காதில் போட்டுக் கொள்ளக் கூட இஷ்டப்படாத அத்தனை மௌட்டீகம் பொருந்திய மாக்களையெல்லாம் சீர்திருத்தம் செய்தார்கள். ஆண்டகைக்கும் அடியானுக்குமிடையிலுள்ள சம்பந்தத்தைப்பற்றி நமது ஞானசிரியர் அவர்கள் செய்த சத்துள்ள பிரசங்கத்தின் பலனாய், பல்லாயிரக்கணக்கான சுயநல மிகள் மிகப்பெரிய ஞானிகளாக மாறினர். முதல் முதலாக ஆரம்பகாலத்தில் வாரம் ஒருமுறை மார்க்கோபன்யாசம் புரிந்தார்கள். பின்னர் வாரத்தில் மும்முறை பிரசங்கம் செய்து வந்தார்கள். இவர்களுடைய ஒவ்வொரு பிரசங்கத்திலும் 'ஹக்காயிக்கு'களும் 'மஅரிபா'க்களும் கூடிய சமுத்திரத்தின் அலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கும். அவர்களுடைய மார்க்கோபந்யாசங்களில் பெரும்பாலும் சபையினருக்கு 'வஜ்து' வந்து விடும். பொதுவாக இவர்களுடைய சபையில் 60 அல்லது 70 ஆயிரம் பேர்கள் சாதாரணமாகக்கூடியிருப்பார்கள். ரஸ்தாக்களிலும் தெருக்களிலும் ஜனங்கள் நெருங்கி இருந்து பிரசங்கம் கேட்பார்கள். முஸ்லிம்கள் மட்டுமில்லாமல் யூதர்களும், கிறுஸ்துவர்களும்கூட இவர்களது பிரசங்கத்தைக் கேட்க வருவார்கள். இவ்வாறு பொது ஜனங்களுக்கு மார்க்கோபன்யாசம் செய்யும் சேவை கிட்டத்தட்ட 40 வருஷகாலம் நடைபெற்றது. இந்த 40 வருஷகாலத்தில் ஏறக்குறைய ஒரு லக்ஷம் பேர்வரை இவர்களது கையில் பைஅத்துச் செய்து அல்லாஹுத ஆலாவின் நேர்வழியிற் திரும்பி கல்வி ஞானம் என்ற செல்வத்தை யடைந்தனர்.

நற்குண நல்லொழுக்கம்

ஸெய்யிதுனா கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் நற்குண நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் பேணுதள் உள்ளவர்களாகவு மிருந்தார்கள். ஏழைகளை ஆதரிக்கும் இவர்களது தன்மை போற்றத்தக்கதாக இருந்தது. நமது ஷெய்கு அவர்கள் மிகவும் உண்மையுடன் ஏழைகளுக்கு ஊழியம் புரிவார்கள். நோயாளிகளை அவர்களது இல்லஞ்சென்று விசாரித்து ஆறுதல் தேறுதல் கூறுவார்கள். ஹஜ்றத் அவர்கள் கிருபைக்கும் நலவுக்கும் ஊற்றாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் நப்ஸின்மீது பேராதிக்கம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களது எண்ணம் எப்பொழுதும் பரிசுத்தமானதாக இருந்தது. அவர்கள் பிறவியிலேயே தயாளராக இருந்தார்கள். அவர்களுடைய வாசலுக்கு வந்தவர் ஒரு போதும் வெறுங்கையாகத்திரும்பிச்சென்றதே இல்லை. மன்னிப்புக்கும் க்ஷமிப்புக்கும் அரசராக இருந்தார்கள். ஆனால், ஷரீஅத்தின் சட்டத்தை அமல் நடத்தும் விஷயத்தில் நீதியையும் நேர்மையையும் கொஞ்சமும் தவறவிட்டதில்லை. கருணையும் இரக்கமும் உருவாக

அமைந்தவர்களாக இருந்தார்கள். ஆனால், இறைவனுக்கு மாறுசெய்த தெய்வ குற்றவாளிகளுக்கு எவ்வித தயையும் காண்பித்ததில்லை. அகம்பாவம், தற்பெருமை என்பதை அவர்களிடம் மருந்துக்குக்கூடக் காண முடியாது. மிகவும் தாழ்மையுள்ளவர்கள். ஆனால், செல்வம், மமதை கொண்டவர்களிடம் ஒருபோதும் பணிந்ததில்லை. சத்தியத்தை வெளியிடும் விஷயத்தில் எவருடைய எதிர்ப்பையும் லக்ஷியம் செய்ததில்லை. தியாகம்செய்யும் விஷயத்தில் இலங்கும்படியானவிளக்காக இருந்தார்கள். பிறருடைய நன்மைக்காக எப்பொழுதும கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டே இருந்தார்கள்; எவரைப்பற்றியும் எப்பொழுதும் முறையிடுவதைநாவில்வைத்துக்கொள்ளவே இல்லை. சத்தியத்தினுடையவும் உண்மையினுடையவும் துவஜத்தை தாங்கி நின்றார்கள். சத்தியத்துக்கும் நேர்மைக்கும் விரோதமாகஇருந்தவர்களை அவர்கள் மன்னித்ததே இல்லை. அவர்கள் நபில் தொழுகை முதலியவைகளில் இராக்காலம் முழுவதையும் கழிப்பார்கள். பெரும்பாலும் திருகுர்ஆனை ஓதிக்கொண்டே இருப்பார்கள். மிகவும் பய பக்தியும் பேணுதலுமுள்ளவர்கள். இவர்களுருடைய நன்னெறிகளைப்பற்றி எவரும் எச்சமயத்திலும் சந்தேகித்ததே இல்லை. அவர்கள் மிகவும் இரக்கச் சித்த முள்ளவர்கள். எப்பொழுதேனும் அனாதைகளையும் ஆதரவற்றவர்களையும்பார்த்தால் துடி துடித்துவிடுவார்கள். ஆனால் அசத்தியவான்களை எதிர்க்கும் விஷயத்தில் எப்பொழுதும் உறுதியாகவே இருந்தார்கள். இவர்கள் விஷயத்தில், கருணை இரக்கம் என்பதைக்காண்பிக்கவே மாட்டார்கள். சுருங்கக்கூறுமிடத்து, இவர்களுடைய பரிசுத்தமான ஜீவியம் மனிதத்தன்மைக்குள்ள உயர்ந்த சகல லக்ஷணங்களும் பொருந்தி இருந்தது. சிறந்த வழிகாட்டிக்கும் பரிபூரணமான மனிதத்தன்மைக்கும் இருக்கவேண்டிய சகல தத்துவங்களும் இவர்களிடம் அமைந்திருந்தன.

பணக்காரர் சாவகாசம்

ஸெய்யிதுனா கௌதுல் அஃலம் அவர்களுக்கு, பெருமையை நாடும் பணக்காரர்கள் பால் அதிகம் வெறுப்பிருந்தது. அவர்கள் இவ்வுலகத்தின் புறப்பெருமையை மிக அற்பமாகமதித்து வந்தார்கள். அவர்கள் மிகவும் நற்குண சீலராக இருந்தார்கள். ஆனால் செல்வந்தர்களின் முன் ஒரு காலத்திலும் தங்களுடைய இயலாமையைக் காண்பித்துக் கொண்டதில்லை.

ஒருமுறை“அல்முஸ்தன்ஜித்பில்லாஹ்” என்னும் கலீபா கௌதுல் அஃலம் (றழி.) அவர்கள் தர்பாருக்கு வந்தார். அதுசமயம் நமது ஞானாசிரியரான கௌதுல் அஃலம் (றழி.) அவர்கள் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார்களாதலின் அந்த கலீபாவுக்கு மரியாதை செய்யாமல், மிகச் சாவதானமாக அந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டே இருந்தார்கள். அவர் ஹஜ்றத் அவர்களிடம் வந்து ஸலாம் சொல்லி தாங்கள் எனக்கு உபதேசம் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது நமது ஞானாசிரியர் ஹஜ்றத் கௌதுல் அஃலம் (றழி.) அவர்கள் பின்வருமாறு உபதேசம் செய்தார்கள் :—

“ நீர் ஏழைகளை அற்பமாக மதிக்கிறீர் என்றும், அவர்களை உமது தர்பாருக்கு வர அனுமதிப்பதில்லை என்றும் எனக்குத் தெரியவருகிறது. இம்முறை வெறுக்கத்தக்கதாகும். கஷ்டத்தினால் வருத்தமும், சுகத்தினால் சந்தோஷமும் ஏற்படக்கூடிய இருதயம் அவர்களிடமும் இருக்கிறது என்பது உமக்குத் தெரியாதா? நீர் அவர்களது மனத்தைத் திருப்திப்படுத்தாமலிருப்பதற்கு உமக்கு நேர்ந்த காரணமென்ன? இம்மாதிரி செய்வது அறியாமைக் காலத்திலிருந்த அகம்பாவமல்லவா? இது இஸ்லாமிய ஆசாரமுறையாகுமா? நீர் ஏழைகளை நல்லவிதமாக நடத்தவேண்டுமென்று நான் உமக்குப் புத்திமதி கூறுகிறேன். அவர்களை நீர் அற்பமாக மதிக்கக் கூடாது. அறியாமை காலத்தில்தான் எல்லா இடங்களிலும் பணக்காரர்களும், கோத்திரங்களின் தலைவர்களும் பெருமையையும் மதிப்பையும் கொண்டாடிக் கொண்டிருந்தனர் என்பதையும், தங்களை மனித வர்க்கத்தைப் பார்க்கினும் உயர்ந்தவர்களென்று நினைத்துக்கொண்டிருந்தனர் என்பதும், பணக்காரர்களுக்குத் தொண்டூழியம் புரிவதுதான் ஏழைகளின் வாழ்க்கை என்று அவர்கள் எண்ணி இருந்தனர் என்பதும், தனவந்தர்கள் செய்யும் அநியாய அக்கிரமங்களைக் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதுதான் ஏழைகளின் வாழ்க்கையின் இலக்ஷியம்என்றும் கருதியிருந்தனர். ஆனால், இஸ்லாம் இந்த வழக்கத்தை அழித்துவிட்டது; முட்டாட்டனமான அகம்பாவத்தைத் தலைகீழாகப் புறட்டி

விட்டது. மனித தத்துவத்தைப் பார்க்கினும் பெரிய அந்தஸ்து வேறொன்றுமில்லை என்பது இஸ்லாம் மதத்தின் சித்தாந்தம். இஸ்லாத்தின்முன் ஏழையும் பணக்காரனும், உயர்ந்தவனும் தாழ்ந்தவனெனப்படுபவனும் ஒன்றுதான் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளும். ஆனால், இஸ்லாத்தினிடத்தில் உயர்வைக் கொடுப்பது நற்கிரியை ஒன்றுதான்''

நமது ஷெய்கு கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்களின் இப்பிரசங்கம் கலீபாவை உருகச் செய்துவிட்டது. அன்று முதல் ஏழைகளைப் பரிபாலிப்பதாக கலீபா வாக்கு தத்தம் செய்துகொடுத்தார். எந்த தனவந்தருக்கும் மரியாதை செய்யும் முறையில் கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் எழுந்து நிற்பதை எவரும் பார்த்ததில்லை என்றும், தனவந்தர்களின் தலைவாசலில் போகப் பார்த்ததில்லை என்றும், "கதுகிரத்துல் உப்பாத்" என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் ஒரு முறை பிரசங்கம் செய்கையில் பின்வருமாறு கூறி இருக்கிறார்கள் :—

"எவருடைய தலைவாசல்களில் தனவந்தர்கள் வருகிறார்களோ அப்படிப்பட்ட ஏழைகள் அல்லாஹ் தஆலாவை வணங்கும் மெய்யடியார்களாக இருக்கிறார்கள். தனவந்தர்களுடைய வீட்டிற்குச் செல்லும் தர்வேஷ்கள்-பக்கீர்கள் தங்கள் இச்சைக்கு வழிபட்டவர்கள். நீங்கள் பணக்காரர்களின் மனத்தைத்திருப்திப்படுத்தி அவர்களிடமிருந்துஎதையும் அடையமுடியாது. உங்களைப்படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றுபவனை அல்லாஹு சுப்ஹானஹு வதஆலாவைத் திருப்திசெய்வதுகொண்டு சகலத்தையும் நீங்கள் அடைய முடியும். நீங்கள் உங்களது றப்பைதிருப்திபடுத்தினால் அவன் தன்னுடைய கிருபை என்னும் தலை வாசலை உங்களுக்குத் திறந்து விடுவான்; உங்களுக்கு கண்ணியம் மரியாதை ஆகிய அந்தஸ்துகளை அளிப்பான். நீங்கள் அவனது கட்டளைகளின் முன் பணிந்து விடுவீர்களாயின் நீங்கள் எந்த வஸ்துவுக்காகவேனும் வேறு எவ்விதமான ஏற்பாடும் செய்ய வேண்டியதே இல்லை. அவன் உலகில் உங்களுக்கு கண்ணியத்தையும் சாந்தியையும் உற்பத்தி செய்வான். உலகம் முழுவதிலும் அவ்வொருவனுடைய அரசாங்கம் தானிருக்கிறது என்பதும்,எல்லாரும் அவனிடம் தேவையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதும் உண்மையில்லையா? நீங்கள் அவன்பால் அன்பு பூண்டு அதிலேயே மூழ்கி விடுவீர்களாயின் அவன் தன்னுடைய கிருபை கடாக்ஷத்தால் உங்களுக்குநியாயமாகக் கொடுக்கவேண்டி அளவைப் பார்க்கினும் அதிகமாகவே அனுக்கிரகம் செய்வான். அவ்வாறிருக்க பரிசுத்தனான-கிருபையாளனான அந்த ரக்ஷகனின் தலைவாசலைத் தட்டுவதை விட்டுவிட்டு தனவந்தர்களின் தலைவாசல்களுக்குச் சென்று அவர்களுக்கு முகஸ்துதி செய்கிறீர்கள்."

"லத்தாயிபுல் காதிரிய்யா" என்ற கிரந்தத்தில் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (றஹ்) அவர்களைப்பற்றிப் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது :—

ஹஜ்றத் கௌதுல் அஃலம் (றஹ்) அவர்களுக்கு கௌரவத்தை விரும்பும் சீமான்கள்மீது வெறுப்பிருந்தது. எந்த தனவந்தரையும் மரியாதை செய்யும்பொருட்டு அவர்களுக்காக எழுந்து நிற்கமாட்டார்கள். கலீபா அவர்கள் ஹஜ்றத் அவர்களைக் கண்டு பேசுவதற்காக வந்திருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டால், கலீபா அவர்கள் வருவதற்கு முன்பே ஹஜ்றத் அவர்கள் எழுந்து நின்றுகொண்டு, கலீபாவை வரவழைத்து அவரை நிற்கவைத்துப் பேசி அனுப்பிவிடுவார்கள். உட்கார்ந்து பேசவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டால் அவருடன் உட்கார்ந்து கொண்டு எவ்விதத்தயையும் தாட்சண்யமுமில்லாமல் பேசுவார்கள். உபதேசம் செய்ய வேண்டியதேற்பட்டால் அவர்கள் கலீபாவுக்குக் கூறும் கண்டிப்பான வார்த்தைகளைப் பார்த்துச் சபையினர் தங்கள் விரல்களைக் கடித்துக் கொள்வார்கள். கலீபாவும் மிகப் பணிவுடன் ஹஜ்றத் அவர்கள் எதிரில் கால்களை மடித்துப்போட்டு மரியாதையாக உட்கார்ந்து உபதேசங் கேட்பார். கலீபாவுக்குக் கடிதம் எழுதவோ சிட்டு எழுதி அனுப்பவோ வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமாயின் "அப்துல் காதிர் உமக்கு இவ்வாறு கூறுகிறார்; உமது சம்பந்தமாக அப்துல் காதிருடைய கட்டளை இவ்விதமிருக்கிறது" என்று எழுதுவார்கள். கலீபா அவர்கள் ஹஜ்றத் அவர்களின்கடிதத்தை வாங்கிக் கண்ணில் வைத்துக்கொண்டு "ஷெய்கு அவர்களது கட்டளை முற்றிலும் சரியானது" என்று கூறுவார். ஹஜ்றத் அவர்கள் கலீபாவினிடம் இம்மாதிரி நடந்து கொள்வது தங்களு

கடைய தற்பெருமையினலன்று. அரசர்களுக்கு இயற்கையாக ஏற்படுகிற அகம்பாவத்தை அழிக்க வேண்டுமென்பதே ஹஜ்றத் கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்களது நோக்கமாகும்.

ஏழைகளை ஆதரித்தல்

ஹஜ்றத் கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் மிகவும் இரக்கச்சித்தமும் ஏழைகளைப் பரிபாலிக்கும் தன்மையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களுடன் எப்பொழுதும் நாலைந்து ஏழைகள் ஆகாரமருந்துவர். அவர்களிடம் ஹஜ்றத் அவர்கள் மிக அன்பாக நடந்துகொள்வார்கள். ஹஜ்றத் அவர்கள் அவ்வேழைகளுடன் சமமாக உட்கார்ந்துகொண்டு கொஞ்சமும் சங்கோஜமின்றி உணவருந்துவார்கள். அவர்களில் எவரேனும் ஒருநாள் வரத்தவறிவிட்டால் "இன்று அந்த மனிதரைக் காணவில்லையே; அவர் சுகமாக இருக்கிருரா? என்று மற்றவர்களிடம் விசாரிப்பார்கள். அவர்கள் யாவருடனும் பக்ஷமாய் கலந்துகொள்வதைப் பார்த்து "தங்களிடம்தான் ஹஜ்றத் அவர்களுக்கு அதிகப்பிரியம்" என்று ஒவ்வொருவரும் நினைத்துக்கொள்வார்கள். இம்மாதிரியாக ஹஜ்றத் அவர்கள் எல்லாரிடத்திலும் பொதுவாகவே நடந்துகொண்டார்கள். இது அவர்களுடைய பெருந்தன்மையாகும். ஹஜ்றத் அவர்கள் ஒருமுறை தங்களது பிரசங்கத்தில் சபையினரைப் பார்த்து, "நீங்கள் ஏழைகளை நேர்மையாக நடத்தவேண்டும். அவர்களை அற்பமாக மதிக்கக்கூடாது. எதை நீங்கள் உங்களுக்கு விரும்புகிறீர்களோ அதையே அவர்களுக்கும் விரும்புங்கள். உங்களுக்குப் பிரியமில்லாததை அவர்கள் விஷயத்திலும் பிரியப்படாதீர்கள். அவர்கள் உங்களுடன் பிரயாணம் செய்தால் அவர்களுடைய சௌகரியத்தையும் கவனியுங்கள். உங்களிடம் வாகனமிருந்தால் கொஞ்சதூரம் நீங்கள் அதில் சவாரி செய்துகொண்டு, கொஞ்சதூரத்துக்கு அவர்களையும் சவாரி செய்யும்படிச் செய்யுங்கள். அவர்கள் மனிதன் என்ற முறையில் உங்களைப் பார்க்கினும் எவ்விதத்திலும் குறைந்தவர்களில்லை. உங்களது இருதயத்தில் எப்படிப்பட்ட மனம் இருக்கிறதோ அப்படிப்பட்ட மனமே அவர்களிடமுமிருக்கிறதுஎன்று நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்" என்பதாகக் கூறினர்கள்.

ஒருமுறை ஹஜ்றத் அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றபோது, பக்தர்களின் திரளான ஒரு கூட்டமும் ஹஜ்றத் அவர்களுடன் சென்றது. ஒரு கிராமத்திற்குப் பக்கத்தில் வந்தவுடன் சூரியாஸ்தமனமாயிற்று. அவ்வூரில் இராத்திரிப் பொழுதைக் கழிக்க முடிவுசெய்தார்கள். ஹஜ்றத் அவர்கள் அவ்வூரிலேயே மிகவும் ஏழையாகவுள்ளவரின் வீடு எதுவென்று தேடினர்கள். கடைசியில்ஒரு தையல்காரனின் வீட்டைக் கண்டுபிடித்தார்கள். அத்தையல்காரன் அவ்வூரிலேயே பரம ஏழையாக இருந்தான். அவனுடைய குடும்பத்தார் அதிகம். அவனுக்குச் செலவுக்குத் தக்க வரவு இல்லை. அவனது வீட்டுக்கு ஹஜ்றத் அவர்கள் சென்று "இன்று, உமது வீட்டில் தங்கி இருக்க விரும்புகிறேன்" என்று கூறினர்கள். அதற்கவன் "தங்கம்போல் தங்கி இருக்கலாம். ஆனல், நாங்கள் தங்களுக்கு எவ்வித ஊழியமும் செய்வதற்குத் தகுதியாக இல்லையே" என்று வருத்தத்துடன் கூறினன். அதற்கு ஹஜ்றத் அவர்கள் "உம்மிடமிருந்து நாங்கள் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவில்லை. ஆதலில், நீர் எங்களுக்கு ஊழியம் புரியவேண்டிய அவசியமுமில்லை" என்று கூறிவிட்டு அவனுடைய வீட்டிலேயே தங்கினர்கள்.

கொஞ்சநேரத்திற்குப் பிறகு ஹஜ்றத்அவர்கள் வந்திருக்கிற செய்தி ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிந்தது. பணக்காரர்களும், தலைவர்களும், பிரபலஸ்தர்களும் பழங்களையும் காணிக்கைகளையும் எடுத்துக் கொண்டு ஹஜ்றத் அவர்களைப்பார்க்க வந்தார்கள். ஹஜ்றத் அவர்கள் அந்தச் சாமான்களனைத்தையும் அவ்வீட்டுக்காரருக்குக் கொடுத்து உதவினர்கள். ஆகவே இக்காலத்திலுள்ள நம்மவர் ஹஜ்றத் அவர்கள் செய்து காட்டிய இவ்வுதாரணத்தைப் பின்பற்றி யொழுகுவார்களாக! இவ்வாறன அரும் குணங்களையுடைய ஷெய்கு அவர்கள் இந்த றபீஉல் ஆகிர் மாதத்தில் தான் இப்பூ உலகில் ஜனனமானர்கள்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் பாக்கிகளை உடனே அனுப்பிவிடுமாறு வேண்டுகிறேம். இல்லையேல் அடுத்த இதழ் வி. பி. செய்து அனுப்பப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

மௌலானா செய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரீ வழக்கு அப்பீல் தீர்ப்பு

மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி அவர்கள்மீது தொடரப்பட்ட சரித்திரப் பூர்வமான வழக்கின் அப்பீல் குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் கோஸ்லா விடம் விசாரணைக்கு வந்து கீழ்கோட்டு தண்டனை மாற்றப்போன விஷயம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த அபீலில் செஷன்ஸ் ஜட்ஜு செய்த தீர்ப்பின் விபரம் வருமாறு :—

அப்பீல் மனுதார் ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்கள் சென்ற 21—10—34-ல் காதியானில் நடைபெற்ற தப்லீக் கான்பரன்சில் செய்த பிரசங்கத்திற்காக இந்தியன் பெனல் கோடு 153-ஏ செக்ஷன்படி அவர்களை குற்றவாளி என மதித்து 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

மிர்ஜாவும் மிர்ஜாயிக் கொள்கையும்

அப்பீல் மனுதார்மீது குற்றச்சாட்டுச் செய்யப்பட்டிருப்பவைகளைப்பற்றிக் கவனிப்பதற்குமுன் இவ்விவாதத்திற்குச் சம்மந்தப்பட்ட சில விஷயங்களைக் கூறிவிடுவது அவசியமாகுமென்று தோன்றுகிறது. அதாவது, குலாம் அஹ்மது என்று பெயருள்ள காதியான் கிராமவாசி ஒருவர், ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு முன் "நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன்" என்றுஉலகத்தின் முன் தாவாச்செய்தார். இந்த அறிக்கையுடன் அவர் பிரதம மத குருவின் அந்தஸ்த்தையும் ஏற்படுத்திக்கொண்டு, புதிய ஒரு வகுப்புக்கு அஸ்திவாரமு மிட்டார். இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொண்டாலும், அடிப்படையான சில கொள்கைளிலும் இஸ்லாத்தின் பொதுக்கொள்கைகள் சிலவற்றிலும் முஸ்லிம் களுக்கு நேர்மாறாக இருக்கின்றனர். இந்த வகுப்பில் சேருபவர்கள் காதியானி அல்லது மிர்ஜாயீ அல்லது அஹ்மதி என்றழைக்கப்படுகிறார்கள். இவர்கள் வித்தியாசப்பட்டுக்கொண்டிருப்பதுஎன்னவெனில், இந்த ஜனங்கள் மிர்ஜாயி வகுப்பின் ஸ்தாபகரை (மிர்ஜா குலாம் அஹ்மதை) நபியென்று விசுவாசங் கொண்டிருக்கிறார்கள்.

காதியானி இயக்க சரித்திரம்

இந்த இயக்கம் கொஞ்சங் கொஞ்சமாக அபிவிருத்தியடைந்து, இதனைப் பின்பற்றுபவர்களும் சில ஆயிரம் வரை பெருகிவிட்டனர். இதனால் முஸ்லிம்கள் சார்பில்இதற்கு எதிர்ப்பு ஏற்படுவது அவசியமாக இருந்தது. ஆகவே, முஸ்லிம்களில் பெரும்பான்மையினர், மிர்ஜா தம்மை உயர்த்திக் கூறிய தாவாவை—முக்கியமாக அவருக்கு மார்க்க விஷயத்தில் மேம்பாடிருக்கிற தென்பதைப்பற்றிப் பலமாக எதிர்த்தார்கள். மிர்ஜா முஸ்லிம்கள்மீது குப்ரு குற்றம் சுமத்தி கூறியதற்குப் பதிலாக அவர்களும் கடும்வார்த்தைகளை உபயோகித்தனர். ஆனால், வெளியிலிருந்து செய்யப்படும் இப்பரிசீலனையால் காதியானி அரனில் வசிப்பவர்கள் கொஞ்சமும் பாதகமடையாது தங்களது மத்தியஸ்தலத்தில் அதாவது காதியானில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

காதியானிகளின் கலக உணர்ச்சி

காதியானிகள் மற்றவர்களைப் பார்க்கினும் அதிகமாகப் பாதுகாக்கப் பட்டவர்களாக இருந்தனர். இந்த நிலைமை இவர்களில் அதிகமான அகம்பாவத்தையும் அடங்காமையையும் உண்டாக்கி விட்டது. அதனால் அவர்கள் தங்களது ஆதாரங்களை மற்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், தங்களுடைய வகுப்பை விருத்தி செய்யவேண்டு மென்பதற்காகவும் உபயோகிக்க ஆரம்பித்த கருவிகள் அதிருப்திகரமானவைகள் என்று சொல்லலாம். எனவே, காதியானி ஜமாஅத்தில் சேர மறுத்தவர்களை அவர்கள் பகிஷ்கரித்தனர்; காதியானை விட்டு வெளியேற்றினர். சில சமயங்களில் இதிலும் அதிகமான வெறுக்கத்தக்க கஷ்டங்களைக் கொடுப்பதாகப் பயமுறுத்தி அவர்களை பயப்படச் செய்யும் நிலைமையையும் உண்டாக்கி

னர். அநேகம் சமயங்களில் இப்பயமுறுத்தல்களைக் கிரியாம்சையில் செய்து காட்டி தங்களது ஜமாஅத்தைப் பலப்படுத்தவும் முயன்றனர். காதியானில் தொண்டர் (வாலண்டியர்) படை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்படையை ஏற்படுத்திய தன் நோக்கம், காதியானில் "இன்றைக்கு யாருடைய ராஜ்பம் நடக்கிறது'' என்ற வாக்கியத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு பலம் உண்டாக்கவேண்டும் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் கோர்ட்டு அதிகாரத்தையும்கூடத் தங்கள் கையில் வைத்துக்கொண்டனர். சிவில் கிரிமினல் வழக்குகளையும் விசாரணை செய்தனர். சிவில் வழக்குகளில் டிக்ரி ஜாரீ செய்து அவைகளை நிறைவேற்றினர். அநேகம் ஜனங்கள் காதியானிலிருந்து வெளியேற்றவும்பட்டனர்.

இந்த விஷயம், இம்மட்டுடன் நின்றுவிடவில்லை. அவர்கள் வீடுகளையும் அழித்து எரித்திருக்கிறார்கள் என்றும், கொலைக்குற்றம் செய்திருக்கிறார்கள் என்றும் அவர்கள்மீது பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறது. இக்குற்றங்கள் அஹ்ரார்கள் கூறியவைகள்தாம் என்று நினைக்கவேண்டாம். இவைகள் உண்மையிலேயே நிகழ்ந்தவைகள். அது சம்மந்தமாய் இவ்வழக்கின் ரிக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறவைகளிலிருந்து சில உதாரணங்களை எடுத்துக்கூறுகிறேன்.

வெளியேற்றுந் தண்டனை

குறைத்துப் பார்த்தாலும், காதியானை விட்டு வெளியேறும்படி இரண்டுபேருக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், அவ்விருவருடைய கொள்கைகள் மிர்ஜாவுடைய கொள்கைகளுக்கு வித்தியாசப்பட்டிருந்தன. அவ்விருவரும் 28 நெ. டிபன்சு தரப்பு சாக்ஷியான ஹபீபுர் ரஹ்மானும், இஸ்மாயீல் என்பவருமாவார்கள். ரிக்கார்டுகளில் (D. Z. 33) ஒரு காகிதமிருக்கிறது. அது தற்போதைய மிர்ஜா கைபட எழுதப்பட்டதாகும். அதில் "ஹபீபுர் ரஹ்மான (28-வது சாக்ஷி) காதியானுக்கு வர அனுமதி இல்லை'' என்று எழுதப்பட்டிருக்கிறது. டிபன்சு தரப்பு 38-வது சாக்ஷியான மிர்ஜா பஷீருத்தீன் இந்தக் காகிதத்தை தம்முடையதென ஒப்புக்கொண்டிருக்கிறார். இஸ்மாயீலை வெளியேற்றி அவரைக் காதியானுக்குள் நுழைய விடக்கூடாது என்ற விஷயத்தை டிபன்சு தரப்பு 20-வது சாக்ஷி ஒப்புக்கொண்டிருக்கிறார். அநேகம் காக்ஷிகள் (காதியானிகளின்) அக்கிரம அட்டூழியங்களைப்பற்றிய கதைகளைச் சொல்லி இருக்கிறார்கள். டிபன்சு தரப்பு சாக்ஷியான பகத்சிங் தம்மைக் காதியானிகள் தாக்கினர் என்று கூறி இருக்கிறார். கரீப்ஷாஹ் என்பவரைக் காதியானிகள் நையப் புடைத்திருக்கிறார்கள். ஆனால் அவர் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்பியபோது ஒருவரும் சாக்ஷிக்கு வரவில்லை. காதியானி ஜட்ஜுகள் முடிவுகூறிய தீர்ப்புகளின் நகல்கள் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. காதியானில் கோர்ட்டு அதிகாரங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்றும், தன்னுடைய கோர்ட்டு தான் எல்லாவற்றிற்கும் கடைசியான அப்பீல் கோர்ட்டு என்றும், இந்தக் கோர்ட்டில் இதர கோர்ட்டுகளில் செய்யப்படும் டிக்ரீகளின் பேரில் அமல் நடத்தப்படுகின்றன வென்றும் மிர்ஜா (பஷீருத்தின் மஹ்மூது) ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒரு டிக்ரீயை நிறைவேற்றுகையில் ஒரு வீட்டையும்கூட விற்பனை செய்யப்பட்டிருக்கிற விபரம் அந்த டிக்ரி சம்பவங்களிலிருந்து தெரியவருகிறது. ஸ்டாம்பு காகிதங்களை அவர்கள் தாங்களாகவே செய்துவைத்திருக்கிறார்கள். காதியானி நீதிஸ்தலங்களில் சமர்ப்பிக்கப்படுகிற விண்ணப்பங்கள், மனுக்கள் ஆகியவைகளில் அந்த ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. காதியானில் வாலண்டியர் கோர் இருப்பதாக டிபன்சு தரப்பு 40-வது சாக்ஷியான மிர்ஜா ஷரீப் அஹ்மது கூறி இருக்கிறார்.

முபாஹலா அப்துல் கரீமும் முஹம்மது ஹுஸைனும்

எல்லாவற்றையும் பார்க்கினும் கடினமான காரியம் (முபாஹலா ஆசிரியர்) அப்துல் கரீம் சம்மந்தப்பட்டதுதான். அவருடைய விஷயம் வருந்தக்கூடிய விருத்தாந்தமாகும். இவர் ஆரம்பத்தில் மிர்ஜாவின் சிஷ்யர்களில் சேர்ந்து காதியானுக்குச் சென்று குடியேறினார். அங்கு, அவருடைய மனத்தில் (மிர்ஜாவின் உண்மை சம்பந்தமாகச்) சந்தேகங்கள் உண்டாயின. அதனால் அவர் மிர்ஜாயிக்கொள்கையை விட்டுவிலகினார். இதற்கு பிறகு அவர்மீது அநியாய அக்கிரமங்கள் ஆரம்பமாகின்றன. அவர் காதியானிக் கொள்கைகளை அலசிப் பார்ப்பதற்காக "முபாஹலா'' என்ற பெயருள்ள பத்திரிகை

ஒன்றை நடத்தினர். மிர்ஜா பஷீருத்தீன் ஒரு பிரசங்கத்தில் "முபாஹலா" வைப் பிரசுரிப்பவர்களின் மரணத்தைப்பற்றி முன்னறிவிப்புச் செய்திருக்கிறார். இப்பிரசங்கம் 1-4-30-ல் "அல்பஜ்லு" பத்திரிகையில் பிரசுரமாகி கோர்ட்டில் ரிக்கார்டாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசங்கத்தில், மதத்துக்காகக் கொலை செய்யவும் தயாராகிவிடுகிறவர்களைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசங்கத்திற்குப் பிறகு சீக்கிரமாக அப்துல் கரீமின்மீது கொலைபுரியக்கூடியதாக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர் தப்பித்துக்கொண்டார். ஆனால், அவருடைய உதவியாளரான முஹம்மது ஹுஸைன் என்ற ஒருவர் அப்துல் கரீமின்மீது தொடரப்பட்டுள்ள ஒரு கிரிமினல் வழக்கில், அப்துல் கரீமுக்கு ஜாமினாகவுமிருந்தார். அவர்மீது அத் தாக்கு ஏற்பட்டதால் அவர் கொல்லப்பட்டார். கொலை செய்தவர்மீது வழக்கு நடைபெற்று தூக்குதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

முஹம்மது ஹுஸைனைக் கொன்றவருக்கு மரியாதை

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டபின் கொலையாளியின் பிரேதம் காதியானில் கொண்டுவரப்பட்டு மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் "பெஹிஷ்தீ மக்பரா" வில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மிர்ஜாயி பத்திரிகையான "அல்பஜ்லு" இக்கொலையாளியைப்பற்றிப் போற்றிப் புகழ்ந்தெழுதி இருக்கிறது; கொலைச்செய்கை சிலாகிக்கப்பட்டிருக்கிறது. "கொலைகாரர் குற்றவாளியாக இல்லை, தூக்குத்தண்டனை நிறைவேறுவதற்கு முன்பே அவருடைய ஆவி உடலைத்தை விட்டு விடுதலையாகி விட்டது; இவ்விதமாக அவர் தூக்கு என்னும் கேவலமான தண்டனையை அனுபவிப்பதை விட்டுத் தப்பிக்கொண்டார்; நீதிவானான அல்லாஹு தஆலா தூக்குக்கு முன்பே அவருடைய உயிரைக் கைப்பற்றி விடவேண்டுமென்பதை உசிதமாகக் கருதினான்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

மிர்ஜா மஹ்மூதுவின் ஏமாற்றம்

மிர்ஜா மஹ்மூது இது சம்பந்தமாக கோர்ட்டில் முற்றிலும் நேர்மாறான விருத்தாந்தத்தை கூறி இருக்கிறார். "கொலைக்கார முஹம்மது அலீ தம்முடைய குற்றத்துக்காக கைசேதப்பட்டு வருத்தம் தெரிவித்திருந்ததால் அவர் பாவத்தை விட்டுச் சுத்தமாகி விட்டார். ஆதலால், அவருக்கு மரியாதை கொடுக்கப்பட்டது" என்று கூறி இருக்கிறார். ஆனால், தஸ்தாவேஜ் D. Z. இதை மறுக்கிறது. இதிலிருந்து மிர்ஜாவின் பனப்பான்மை புலனாகின்றது.

ஹைகோர்ட்டை அவமதித்தல்

இந்த தஸ்தாவேஜிலிருந்து, லாகூர் ஹைக்கோர்ட்டை அவமதித்த செய்கையும் வெளியாகிறது என்பதையும் இவ்விடத்தில் நான் கூறிவிட விரும்புகிறேன்.

முஹம்மது அமீனைக்கொன்றது

முஹம்மது அமீன் மிர்ஜாயியாகவும்அதிலும் மிர்ஜாயி ஜமாஅத்தின் பிரசாரகராகவு மிருந்ததால் இவர் மதப் பிரசாரத்துக்காக புகாராவுக்கு அனுப்பப்பட்டர். ஆனால், ஏதோ காரணத்திற்காக அவர் பின்னர் திரும்ப அவ்வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். அவர் கோடாறியினால் அடிக்கப்பட்டதால் மரணமடைந்து விட்டார். டிபன்சு தரப்பு 21-வது நெம்பர்சாக்ஷி சௌத்ரி பத்துஹ்முஹம்மதுஎன்பவர் அவரைக் கோடறியால் அடித்திருக்கிறார். கீழ்க்கோர்ட்டு இவ்விஷயத்தில் மேலெழுந்தவாரியாகக் கவனஞ் செலுத்தி இருக்கிறது. ஆனால், இது அதிகம் கவனிக்கத்தக்க விஷயமாகும். முஹம்மது அமீன்மீது மிர்ஜாவின் கோபம் இறங்கியதால் அவர் மிர்ஜாயிகளின் பார்வையில் கண்ணியவானாகவும் மதிக்கத்தக்கவராகவுமிருக்கவில்லை. அவர் மரணமடைந்த சம்பவங்கள் எப்படி இருந்தாலுஞ்சரி முஹம்மது அமீன் கொடுமைக்குட் படுத்தப்பட்டிருக்கிறார்; கோடாறியின் தாக்கினால் மரணமடைந்தார் என்பதில் சந்தேகமே இல்லை. இச்சம்பவம் போலீஸில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அனால், எவ்வித நடவடிக்கையும் அமலில் வரவில்லை. அவரைக் கொலைசெய்தவர், தற்காப்பின் நிமித்தமாக முஹம்மது அமீனைக் கோடாறியால் அடித்தார் என்ற விஷயத்தை வற்புறுத்துவது வீணாகும். இதை முடிவுசெய்யும் வேலை கொலைக்கேசை விசாரிக்கும் கோர்ட்டைச் சேர்ந்தது. "நான்தான் முஹம்மது அமீனைக் கொன்றேன்" என்று சௌத்ரி பத்தஹ் முஹம்மது கோர்ட்டில் பிரமாணமாகக் கூறுவது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். ஆனால், போலிஸ் இவ்விஷயமாக ஒன்றுஞ் செய்ய

முடியவில்லை. மிர்ஜாயிகளின் சக்தி அதிகமாகி விட்டதால் எவரும் அவர்களுக்கு முன்னால் கோர்ட்டில் வந்து உண்மை சொல்லத் துணிய முடியாது என்று இதற்குக் காரணங் கூறப் படுகிறது. அப்துல்கரீமை காதியானை விட்டு வெளியேற்றியபின் அவருடைய வீடு நெருப்புக்கு இரையாக்கப் பட்டிருக்கிறது. காதியானின் டௌன் கமிட்டியின் உத்தரவுபெற்று பாதி உத்தியோக முறையில் அதை இடித்து விட முயற்சியும் செய்யப்பட்டிருக்கிறது.

காதியானின் நிலைமையும் மிர்ஜாவின் தூஷணையும்

காதியானில் சட்டத்தின் மதிப்பு முற்றிலும் எடுபட்டுவிட்டது என்பதற்கு இந்த துக்ககரமான சம்பவங்கள் வாய்மொழியான சாக்ஷியமாகும். நெருப்பு வைத்தல், கொலை செய்தல் ஆகியவைகளும் கூட நடந்துகொண்டிருந்திருக்கின்றன. மிர்ஜா தன்னுடைய கொள்கையிலில்லாத கோடிக்கணக்கான முஸ்லிம்களை கடுமையாக தூஷணை செய்திருக்கிறார். அவருடைய நூல்கள் பிரதம மத குருவின் ஒழுக்கத்தை வெளியிடுவனவாக இருக்கின்றன. அவர் நபித்துவத்தை மட்டிலும் தாவாச் செய்யவில்லை. தான் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட மனிதராகவும், இரண்டாவது மஸீஹாகவும் இருப்பதாக தாவாச் செய்திருக்கிறார்.

அரசாங்கமும் காதியானியத்தும்

அரசாங்கம் (காதியானிகள் விஷயத்தில்) அளவுக்கதிகமான சோர்வடைந்து விட்டதாகத் தெரிகிறது. இம்மை மறுமை ஆகியவைகள் சம்பந்தப்பட்ட காரியங்களில் மிர்ஜாவின் கட்டளைக்கு விரோதமாக அரசாங்கம் ஒரு போதும் வாய்திறக்கவில்லை. ஸ்தல ஆபீஸர்களிடம் பலமுறை இதைப்பற்றிப் புகார் செய்யப்பட்டிருந்தும் அவர்கள் இதைத் தடுக்க இயலாதவர்களாகி விட்டனர். ரிக்கார்டுகளில் இன்னுஞ் சில முறையீடுகளுமிருக்கின்றன. ஆனால், இங்கு அவ்வாக்கியங்களைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியமில்லை. காதியானில் அநியாய அக்கிரம அட்டூழிய ராஜ்யம் தாண்டவமாடுவது சம்மந்தமாய் மிகவுந் தெளிவான குற்றச் சாட்டுகளும் அவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன, என்ற அளவுக்கு மாத்திரம் இவ்வழக்கு சம்பந்தப்பட்டவரை கூறிவிடுவது போதுமானது. ஆனால், இது சம்பந்தமாக எவ்விதக் கவனமும் செய்யவே இல்லை என்று தெரிகிறது.

தப்லீக் கான்பரன்சு

இக்காரியங்களை எல்லாம் தடைசெய்வதற்காகவும், முஸ்லிம்களில் ஜீவஆத்மாவை உண்டாக்குவதற்காகவும் தப்லீக் கான்பரன்சு கூட்டப்பட்டிருக்கிறது. காதியானிகள் இவ்வாறு கூட்டப்படுவதை வெறுப்பாகக் கண்டு அதைத் தடுப்பதற்காக இயன்றவரை முயற்சியும் செய்தனர். அஹ்ரார்கள் இக்கான்பரன்ஸைச் கூட்டுவதற்காக ஈஷர்சிங் என்ற ஒருவருடைய பூமியையும் அடைந்தனர். ஆனால் காதியானிகள் இதைக்கைப்பற்றிக்கொண்டு அதில் சுவர் எழுப்பிவிட்டனர். இதனால், அஹ்ரார்கள் அந்த இடத்தை அடைவதைவிட்டுத் தடுக்கப் பட்டனர். ஆகவே, அவர்கள் நிர்ப்பந்தமாக காதியானுக்கு 1 மைலுக்கு அப்பாலுள்ள இடத்தில் தங்கள் மகாநாட்டைக் கூட்டினர். இருகக்ஷியினருக்கிடையிலும் எவ்வளவு மனஸ்தாபமிருக்கிறது என்பதும், காதியானிகளின் கலக உணர்ச்சி எந்த அளவுவரை வந்திருந்தது என்பதும், அவர்கள் தங்களது அக்கிரமச் செய்கைகளுக்குச் சட்டப்படி அடைய வேண்டிய தண்டனையை விட்டுத் தாங்கள் தப்பித்துக்கொண்டவர்களென்று எண்ணிக்கொண்டிருந்தனர் என்பதும் சுவர் எழுப்பிய இவ்விஷயத்திலிருந்து தெரியவருகிறது.

ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி

எவ்வாறாயினும், கான்பரன்சு நடைபெற்றது அதற்குத் தலைமை வகிக்கும்படி அப்பீல் மனுதார் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் பெரிய பிரசங்கி. அவரது பிரசங்கத்தில் காந்தசக்தி இருப்பதால் இம்மகாநாட்டில் உணர்ச்சியூட்டக் கூடிய பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கம் பலமணி நேரம்வரை நடைபெற்றிருக்கிறது. சபையினர் பிரசங்கம் நடைபெறும்போது முற்றிலும் வசியப்படுத்தப் பட்டிருந்தனர் என்று சொல்லப்படுகிறது. அப்பீல் மனுதார் இப்பிரசங்கத்தில் தமது அபிப்பிராயத்தைக் கொஞ்சம் விபரமாகக் கூறிவிட்டார். அவரது இருதயத்தில் மிர்ஜாவின்மீதும், அவரது சிஷ்யர்கள்மீதும் இருந்த வெறுப்பான உணர்ச்சியை மறைக்க அவர் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. பிரசங்கத்தைப்பற்றி பத்திரிகைகளில் ஆக்ஷேபணைகள் நிகழ்ந்தன. விஷயம் பஞ்சாப் அரசாங்கத்தினிடம் சமர்ப்பிக்கப்பட்டு அத்தா

வுல்லாஷாஹ் புகாரியின்மீது வழக்குத்தொடர பஞ்சாப் கவர்ன்மெண்ட் அனுமதி கொடுத்து விட்டது.

பிரசங்கத்தைப்பற்றிய ஆக்ஷேபனே.

அப்பீல் மனுதாருக்கு விரோதமாகச் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தில் அவருடைய பிரசங்கத்திலிருந்து ஏழு மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு விஷயங்கள் தாம் குற்றம் சாட்டத்தக்கவை என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வேழு விஷயங்களும் வருமாறு :—

1. பிர்ஔனிய ஆசனம் புறட்டப்படுகிறது. இன்ஷா அல்லாஹ் இந்த ஆசனம் நிற்கமாட்டாது.

2. அவர் நபியின் புதல்வர். நான் நபியின் பேரன். அவர் வரட்டும். நீங்கள் எல்லோரும் சும்மா இருந்துகொள்ளுங்கள். அவர் என்னிடம் உருது, பஞ்சாபி, பார்ஸீ ஆகியவைகளில் எல்லாம் விஷயங்களேப்பற்றி விவாதிக்கட்டும். இந்த தகராறு இன்றே முடிவடைந்துவிடும். அவர் திரையைவிட்டு வெளியில் வரட்டும். முகமூடியை எடுக்கட்டும். குஷ்தி செய்யட்டும். மௌலா அலியின் திறமையைப் பார்க்கட்டும். அவர் சகல விதத்திலும் வரட்டும். அவர் மோட்டாரில் அமர்ந்து வரட்டும். நான் வெறுங்காலால் நடந்துவருகிறேன். அவர் பட்டணிந்துவரட்டும். நான் முரட்டு கதர் அணிந்து வருகிறேன். அவர் கபாப், முத்துகள், புளோமிர் கம்பெனியின் வொயின் டானிக்—தன்னுடைய தகப்பனாின் சுன்னத்தைப்பின்பற்றி-அருந்திவரட்டும். நான் எனது நானுவின் சுன்னத்தைப் பின்பற்றி கோதுமை ரொட்டி சாப்பிட்டு வருகிறேன்.

3. இவர்கள் நம்மை எவ்வாறு எதிர்க்க முடியும் ? இவர்கள் பிரிட்டிஷாரின் வாலறுந்த நாய்கள். அவர்கள் முகஸ்துதி செய்பவர்கள். பிரிட்டிஷாரின் பூட்சைத் துடைக்கிறார்கள். நான் அகம்பாவத்துடன் சொல்லவில்லை. நான் அல்லாஹு தஆலாவின்மீது பிரமாணம் செய்து கூறுகிறேன். என்னைத் தனிமையில் விட்டுவிடுங்கள் ; பிறகு, பஷீருடையவும் என்னுடையவும் கையைப் பாருங்கள். என்செய்வேன் ? தப்லீக் என்ற வார்த்தை நம்மைக் கஷ்டத்திற்குள் ஆழ்த்திவிட்டது. இந்தக் கூட்டம் ராஜீயவிஷயம் சம்பந்தமான கூட்டமல்ல. ஓ! மிர்ஜாயிகளே! மூக்குக் கயிறு தளன்றிருந்தால் இனியேனும் உஷாராகிக் கொள்ளுங்கள், என்றுநான் கூறுகிறேன். உங்களுடைய சக்தி மூத்திரத்துளிகளின் அளவுகூட இல்லை.

4. ஐந்தாவது வகுப்பில் பைலாகுபவர்கள் நபியாக ஆகிவிடுகிறார்கள். "பைலாகுபவர் நபியாகி விட்டார்" என்பது இந்துஸ்தானிலுள்ள ஒரு பழமொழி.

5: ஓ! மஸீஹுடைய ஆட்டு மந்தைகளே! உங்களுடன் யாரும் மோதவில்லை. இன்று அதை அடைய வேண்டியதாக இருக்கிறது. இது அஹ்ரார்சபை. இது உங்களேத் துண்டு துண்டாக்கிவிடும்.

6. ஓ! மிர்ஜாயீகளே! உங்களது நுபுவ்வத்தின் அடையாளத்தைப் பாருங்கள். நீங்கள் நுபுவ்வத்தின் தாவாச் செய்வதாயிருந்தால் நுபுவ்வத்தின் கம்பீரம் உங்களிடமிருக்கும்.

7. நீங்கள் நுபுவ்வத்தின் தாவாச் செய்வதாயிருந்தால் ஆங்கிலேயர்களின் நாயாகி இருக்கமாட்டீர்கள்.

அப்பீல் மனுதார், தமது பிரசங்கம் சரியாக எழுதப்படவில்லை என்றும், 5-வது குற்றத்தில் கண்டவாக்கியம் அவருடைய நாவிலிருந்து வெளிப்பட்டதல்ல வென்றும், பாக்கியுள்ள வாக்கியங்கள் தம்முடையதுதான் என்றும், மற்றவைகளை அவர் ஒப்புக்கொண்டிருந்தாலும் அவைகளுடைய வாக்கிய அமைப்பு தவறாக இருப்பதாய் கீழ்க்கோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு வாக்கியத்தைப் பற்றிய ரிப்போர்ட் தவறு என்று கீழ்க்கோர்ட்டு ஒப்புக்கொண்டு விட்டது. ஆதலில், அந்த ஒரு வாக்கியம் சம்பந்தமாக அப்பீல் மனுதாரைக் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது. ஆதலால், அப்பீல் மனுதார் தண்டனையடைவது பாக்கியுள்ள 6 வாக்கியங்களேப் பொருத்திருக்கிறது. அப்பில் மனுதாரின் வக்கீல் தமது கக்ஷிக்காரர் 1, 4, 6, 7 வாக்கியங்களேக் கூறினர் என்றுஒப்புக்கொண்டிருக்கிறார். இப்பொழுது நான் கவனிக்க வேண்டிய விஷயம், அப்பீல் மனுதார் கூறிய இவ் ஆறு வாக்கியங்களும் இந்தியன் பின்னல் கோடு 153 ஏ. பிரிவின்படி குற்றஞ் சாட்டுவதற்குத் தகுந்தன

வாக இருக்கிறதா? இவ்வார்த்தைகளைக் கூறியதால் அப்பீல் மனுதார் எத்தகைய குற்றத்தைச் செய்திருக்கிருர்? என்பதாகும்.

கோர்ட்டாரின் ஆதாரம்

தப்லீக் கான்பரன்சு எதற்காகக் கூடிற்று என்பதற்குள்ள சம்பவங்களையும் நிலைமைகளையும்பற்றி நான் இதற்கு முன்னதாகவே கூறிவிட்டேன். மிர்ஜாவினுடையவும் அவரது சிஷ்யர்களுடையவும் அநியாய அட்டூழியங்களைப்பற்றி நியாயமான முறையில் பரிசீலனை செய்வதைத் தவிர வேறு நோக்கமில்லை என்பதை ரிக்கார்டு மூலமாகவுள்ள சாக்ஷியங்களைக் கொண்டு ருஜூப்படுத்த அப்பீல் மனுதார் முயன்றிருக்கிருர். எனவே முஸ்லிம்களைத் தட்டி எழுப்புவதும் மிர்ஜாயிகளின் கேவலமான செய்கைகளை உடைத்து விடுவதும்தான் இந்தப்பிரசங்கத்தின் கருத்து என்பதாக அவர் கூறி இருக்கிருர். அவர் தமது பிரசங்கத்தில் ஆங்காங்கு மிர்ஜாயிகளின் அநியாய அக்கிரமங்களைப் பிரஸ்தாபித்திருக்கிருர். மிர்ஜாவின் நுபுவ்வத்தை மறுத்து, அவர்கள் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட அதிகாரத்தை ஒப்புக்கொள்ளாமலிருப்பது கொண்டு ஆபத்துகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகி இருக்கிற முஸ்லிம்களின் முறைப்பாடுகள் நீங்கவேண்டும் என்றும் கோரிக்கொண்டிருக்கிருர். நான் காதியானியின் நிலைமையை அனுசரித்து அப்பீல் மனுதாரின் பிரசங்கத்தில் கவனஞ் செலுத்தினேன். இந்தப் பிரசங்கம் முஸ்லிம்களின் சார்பாக சமாதானத் தூதாக இருக்கிறது என்று எனக்குச் சொல்லப்பட்டது. ஆனல், இந்தப் பிரசங்கத்தை மேலெழுந்தவாரியாகப் படிக்கிற எவரும் இந்தப் பிரசங்கம் சமாதானத் தூதாக இருப்பதற்குப் பதிலாக போர் செய்து பார்க்க வேண்டும் என்று அழைப்பாக இருக்கிறது என்ற முடிவுக்கே வரமுடியும். அப்பீல் மனுதார் சட்ட வரம்புக்குட்பட்டிருக்க முயற்சி செய்திருக்கக்கூடும். ஆனல், அவர் பிரசங்க வன்மையையும், வாக்கிய அமைப்பையும் கவனிக்கும் முகத்தால் அவர் இந்த வரம்பை விட்டு வெளியில் வந்துவிட்டார். சபையினரின் இருதயங்களில் மிர்ஜாயிகளின்மீது வெறுப்பான உணர்ச்சியைத் தவிர வேறு எதையும் உண்டாக்காத விஷயங்களைக் கூறிவிட்டார். ரோமாபுரியிலிருந்த மார்க் அந்தோனியைப்போல் அப்பீல் மனுதார் அஹ்மதியர்களுடன் கலகஞ் செய்யும் பான்மையை ஏற்படுத்த விரும்பவில்லை என்று கூறிவிட்டார். ஆனல், சமாதானத்துக்கான இந்தச் செய்தி தூஷணைகளால் நிரம்பி இருக்கிறது. இதன் நோக்கம் சபையினருக்கு அஹ்மதியர்கள்மீது வெறுப்புணர்ச்சி யுண்டாக்குவதைத் தவிர்த்து வேறெதாகவுமிருக்க முடியாது.

ஆக்ஷேபிக்கவேண்டிய நியாயமான வரம்பு

அப்பீல் மனுதாரின் பிரசங்கத்தின் சில பாகங்களில், மிர்ஜாவின் செய்கைகளைப்பற்றி நியாயமானவும் யுக்தமானவுமான ஆக்ஷேபனைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. கரீப்ஷாவை அடித்துப்புடைத்த சம்பவம், முஹம்மது ஹுஸைன், முஹம்மது அமீன் ஆகியவர்கள் கொலைச் சம்பவம், மிர்ஜாவின் அட்டூழியத்தின் இதர விஷயங்கள் ஆகியவைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பரிசீலனை செய்ய உண்மை முஸ்லிம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. தவிரவும், இந்தப்பிரசங்கத்தின் மத்தியில் இஸ்லாத்தின் நபி முஹம்மது (ஸல்.) அவர்களின் கௌரவத்தின்மீது காதியானி உபயோகித்திருக்கிற இழிவு கலந்த பதங்களும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவை முஸ்லிம்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தக் காரணமாக இருக்கின்றன.

மிர்ஜாயிகளும் முஸ்லிம்களும்

முஸ்லிம்களிடத்தில் முஹம்மது நபி (ஸல்.) காத்தமுல் முர்ஸலீனாக (கடைசி தீர்க்கதரிசியாக) இருக்கிருர்கள். ஆனல், முஹம்மது (ஸல்.) அவர்களைப் பின்பற்றுபவர்களில் அநேகம் நபிமார்கள் வரமுடியும், அவர்களனைவருக்கும் வஹீ வரமுடியும், தவிரவும் மிர்ஜா குலாம் அஹ்மது நபியாகவும்இரண்டாவது மஸீஹாகவுமிருந்தார் என்பது மிர்ஜாயிகளின் கொள்கை. இந்த அளவுக்கு அப்பீல் மனுதாரின் பிரசங்கம் சட்டத்தின் வரம்புக்குட்பட்டிருக்கிறது. ஆனல், அவர் தூஷணையில் இறங்கும்போதும், கேட்கவும்கூட எவரும் சகிக்காத விதமான பெயர்களைக்கூறி மிர்ஜாயிகளை அழைக்கும்போது அவர் நியாயமான எல்லைகளை விட்டு மீறி விடுகிருர். அவர் தமது பிரசங்க உணர்ச்சியின்பேரில் கூறி இருக்கலாம், அல்லதுவேண்டுமென்றே கூறி இருக்கலாம். ஆனல், சட்டம் இவைகளை அலக்ஷியம் செய்ய முடியாது.

பிரசங்கத்தின் பலன்

அப்பீல் மனுதாரின் பிரசங்கத்தைக் கேட்க வந்தவர்களில் பெரும்பாலர் பாமரர்களாகவும் கிராமவாசிகளாகவும் இருந்தனர் என்பதையும், இவ்விதமான பிரசங்கம் அவர்களுடைய இருதயத்தில் வெறுப்பையும் போட்டியையும் உண்டாக்கிவிடும் என்பதையும் அவர் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். பிரசங்கம் சபையினரில் இவ்விதமான உணர்ச்சியையே உண்டாக்கிற்று என்று சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. பிரசங்கியின் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் அநேகம் முறைகளில் ஆத்திர உணர்ச்சியைக் காண்பித்திருக்கிறார்கள். சபையினர் அது சமயம் மிர்ஜாயிகளுக்கு விரோதமாக ஏன் கலகஞ் செய்யவில்லை என்பதைப்பற்றிய காரணங்களை இங்கு கூறவேண்டிய அவசியமில்லை. இரு கக்ஷியினரின் சம்பந்தங்களும் வெகு காலமாக நன்ருக இல்லாமலிருந்தபோதினும், இந்தப் பிரசங்கம் சாம்பலுக்குள் மறைந்திருந்த நெருப்புக்கங்குகளைக் காற்றினல் ஊதிப்பற்ற வைத்துவிட்டது.

பிரசங்கத்தில் ஆக்ஷேபிக்கத் தக்கவை

குற்றச்சாட்டில் பிடிக்கப்படத் தகுந்தவைகளென்று சொல்லப்பட்டிருக்கிற ஏழு வாக்கியங்களில் 3-வது வாக்கியமும் 7-வது வாக்கியமும் மற்றவைகளைப்பார்க்கினும்அதிகமாகஆக்ஷேபிக்கத் தக்கனவாகும். இதில் அப்பீல் மனுதார் மிர்ஜாயிகளைபிரிட்டிஷாரின் வாலறுந்த நாய் என்று கூறி இருக்கிருர். என் அபிப்பிராயத்தில் மற்றைய வாக்கியங்கள் இந்தியன் பெனல் கோடு 153-ஏ பிரிவின்படி குற்றஞ் சாட்டத் தகுந்தனவாக இல்லை. முதலாவது பாகம் அதாவது பிர்ஔனிய ஆசனம் புறட்டப்படுகிறது என்ற வாக்கியம் ஆக்ஷேபிக்கத் தக்கதன்று. இரண்டாவது பாகம் மிர்ஜாவின் உணவைப் பற்றியது. முதலாவது மிர்ஜா தன்னுடைய சிஷ்யர்களில் ஒருவருக்கு கடிதம் எழுதி இருப்பதில் அவருடைய உணவில் இந்த விவரங்கள் எல்லாம் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்க விஷயமாகும். இந்தக் கடிதங்கள் புத்தகரூபமாக அச்சிடப்பட்டிருக்கின்றன. அக்கடிதங்களடங்கிய அச்சுப்பிரதி ஒன்று இந்த ரிக்கார்டுகளிலிருக்கின்றன.

பானமும் மிர்ஜாவும்

மிர்ஜா ஒருவகை டானிக் உபயோகித்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அதற்கு புளோமிர் கம்பெனியின் பானம் என்று பெயர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தமது சிஷ்யர்களில் ஒருவருக்கு "புளோமிர் கம்பெனியின் ஷராப் லாகூரில் வாங்கி தனக்கு அனுப்பிவைக்க வேண்டும்" என்று எழுதி இருக்கிருர். இதர கடிதங்களில் முத்துகளைப்பற்றிய பிரஸ்தாபமிருக்கிறது. ஒருமுறை அவர் (மிர்ஜாகுலாம் அஹ்மது) மருந்து என்ற முறையில் புளோமிர் கம்பெனியின் ஷராபை உபயோகித்திருக்கிருர் என்று மிர்ஜா மஹ்மூது ஒப்புக்கொண்டிருக்கிருர். ஆகவே, என்னிடத்தில் இந்த வாக்கியங்களும் குற்றஞ்சாட்டத் தகுந்தனவாக இல்லை. நான்காவது பாகம் மிர்ஜாகுலாம் அஹ்மது பரீக்ஷையில் வெற்றி பெருத்ததைப் பற்றியது. 6-வது பாகத்தில் மிர்ஜா முகஸ்துதிபேசுவதைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதுடன் முகஸ்துதி பேசுவது நபியின் அந்தஸ்துக்கு மாறுனது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கோர்ட்டாரின் அபிப்பிராயம்

என்னுடைய அபிப்பிராயத்தில் 3-வது, 7-வது பாகங்களைத் தவிர மற்றைய பாகங்கள் குற்றஞ் சாட்டத் தகுந்தனவாக இல்லை. ஆனல் அப்பீல் மனுதாரின் பிரசங்கம் முழுவதிலும் இரண்டு பாகங்கள் மட்டிலும்தான் ஆக்ஷேபிக்கத்தக்கது என்பது எனது நோக்கமல்ல. மிர்ஜாயிகளின் அநியாயச் செய்கைகளைப்பற்றிக் கூறி இருக்கிற இடங்களிலெல்லாம் முஸ்லிம்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட அப்பீல் மனுதார் விரும்பினர் என்று பிரசங்கத்திலிருந்து தெரியவருகிறது. ஆனல் சபையினர் பிரசங்கத்தைக்கேட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் எப்படி இருந்தார்கள் என்ற விஷயம் குற்றத்தை இலேசாக்குவதற்குப் போதுமானதாக இருக்கமுடியும்.

அப்பீல் மனுதார் மிர்ஜாயிகளைப் பற்றி கணிப்புரை கூறும் விஷயத்தில் நியாயமான உரிமைபெற்றிருக்கிருர்என்பதில்எனக்குப்பேச்சில்லை. ஆனல், அவர் தமக்குள்ள இவ்வுரிமையை உபயோகிக்கும் விஷயத்தில் எல்லையைக் கடந்துவிட்டாராதலின் சட்டத்தின் பலனை அனுபவிப்பதற்கு அருகதையுள்ளவராகிவிட்டார். அப்பீல் மனுதாரின் இச் செய்கையைப் போற்றிப் புகழ்வது சுலபம். ஆனல், முன்னலிருந்தே உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டும் ததும்பிக் கொண்டுமிருக்

கும்போது இவ்விதமான பிரசங்கம் செய்வது எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதற்கு ஒப்பாகவே இருக்கிறது. அப்பீல் மனுதார் பெயருக்கு மாத்திரமுள்ள வழக்கமான ஒரு குற்றத்தைச் செய்தவராக இருந்தபோதினும் சட்டத்தை கௌரவிப்பது அவசியமான காரியங்களிலுள்ளதாக இருக்கிறது.

தீர்ப்பு

வழக்கின் எல்லா அம்சங்களையும், அப்பீல் மனுதாரின் பிரசங்கம் சபையினரில் செய்துள்ள பலனையும் கவனிக்குமிடத்து அப்பீல் மனுதார் இந்தியன் பெனல்கோடு 153 ஏ. பிரிவின்படி குற்றவாளியாக இருக்கிறார் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். அதற்குரிய தண்டனை ஏற்படுவது அவசியமாகும். ஆனால், தண்டனையின் கடுமையையும் இலேசையும் மதிப்பிடும்போது காதியானில் நிகழ்ந்த சம்பவங்களையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். தவிரவும், மிர்ஜா முஸ்லிம்களைப் காபிர் என்றும், பன்றியென்றும், அவர்களுடைய ஸ்திரீகளை பெட்டை நாய்களென்றும் கூறி அவர்களது உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருப்பதை அலக்ஷியம் செய்ய முடியாது. ஆகவே, அப்பீல் மனுதாரின் குற்றம் இஸ்திலாஹிக் குற்றம் (பெயருக்கு மாத்திரமுள்ள குற்றம்) என்பதே எனது அபிப்பிராயம். ஆதலால், அவருக்கு அவருடைய தண்டனையைக் குறைத்து கோர்ட்டு கலையும்வரை வெறுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

(ஒப்பம்)

குர்தாஸ்பூர் ஜூன் 6. } ஜீ. டி. கோஸ்லா. செஷன்ஸ் ஜட்ஜ்.

கல்வி போதனுமுறை

கல்வி மானிடவர்க்கத்திற்கு இன்றியமையாச் சாதனமென்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளுவர். ஆனால் இக்காலை நம்மக்களுக்கு எவ்வாறான கல்வி போதிக்கப்படுகிறது; அதனாலேற்படும் பிரயோசனம் யாது? அது அத்தியாவசியமானதா? அஃது பிரயோசனம் கொடுக்கிறதா அன்றி கெடுதியை யுண்டுபண்ணுவதாக இருக்கிறதா? என்பன போன்றவைகள்தான் நாம் இங்கு கவனிக்கவேண்டிய விஷயங்களாகும். வெளித் தோற்றத்தில் ஒரு வகையான பாடம் நல்லதாகஇருக்கவாம், ஆனால் அதனாலேற்படும் பிரயோசனம் அவ்வாறில்லாதிருக்கலாம். பிரயோசனம் தரத்தக்க கல்வியே ஒரு மாணவருக்கு அவசியமில்லாதிருக்கலாம். அவசியத் தேவையாக இருந்தபோதிலும் அவருடைய தேவையைப் பூர்த்தி செய்துவைக்காததாக இருக்கலாம். ஆகவே, பொதுவாக இதுகாலை போதிக்கப்படும் கல்வியின் நலவும் இடரும் அதனுடைய பிரயோசனத்தைப் பொருத்திருக்கிறது என்று கூறி விடலாம்.

மேலும் ஒரு மாணவருக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடம் அத்தியாவசியமாக இருக்கும் நிலையில், அந்த மாணவருடைய கவனமானது அதில் விருப்பங்கொள்ளாதிருக்கலாம். ஆனால் காலநிலையும், கலாசாலை சட்டமும், சேவகம் புரியவேண்டிய நிர்ப்பந்தமும் அவரை வற்புறுத்தி கட்டாயமாக அவர் மூளையில் அப்பாடத்தை அமைக்கவேண்டுமெனச் செய்வதனாலேற்படும் பிரயோசனங்களை கூர்மையான அறிவுடையோர் நன்கறிவர். ஒருபாடம் ஒரு மாணவருக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதாக இருக்கும் நிலைமையில், மானிடரின் தற்சுபாவம் பலவிதமாக இருப்பது கொண்டு, அதே பாடம் வேறொரு மாணவருக்கு வெறுப்பைக் கொடுப்பதாக இருக்கலாம். ஆகவே, எல்லோரையும் ஒரே தடியைக்கொண்டு விரட்டிச் செல்லுவது புத்திசாலித்தனமாக மாட்டாது. இதனால் தேவையற்ற—கெடுதியை உண்டுபண்ணக்கூடிய விஷயத்தில் கவனத்தைச் செலுத்தச் செய்வதாக ஏற்படும். அதனால் அறிவு விசாலம் குன்றிவிடும். நமது வாலிபர்கள் தேசசமூக முன்னேற்றத்தைவிட்டுத் தடுக்கப்பட்டவர்களாய் விடுவர்.

கல்வியினாலேற்படும் கெடுதியை நான்கு விதமாக பாகுபாடு செய்யலாம்.

(1) ஒருவிதமான கல்வி வெளிரங்கத்தில் நல்லதாக இருந்து அது மாணவரின் குணத்தைக் கெடுக்கக் கூடியதாகவும் தற்கால தேவையற்றதாகவும், ஐசுவரிய விரயத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும், எத்தேவையை பூர்த்திசெய்துகொள்ளுவதற்காக அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதனை நிறைவேற்றி வைக்காததாயும் இருக்கிறது.

(2) இரண்டாவது, உண்மையில் அக்கல்வி நல்லதாக இருக்கும் நிலைமையில் மாணவருக்கு அவசியமில்லாததாயிருக்கின்றது.

(3) மூன்றாவது, அக்கல்வி அத்தியாவசியமானதாக இருக்கிறது. ஆனால் தேவையை தக்க முறையில் பூர்த்திசெய்வதாக இல்லை. தேவையைப் பூர்த்திசெய்துவைப்பதாக இருந்தாலும் அளவற்ற கஷ்டமும் பொருள் விரயமும் ஏற்படுவதுடன் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டியதாகவுமிருக்கிறது.

(4) நான்காவது, கற்பிக்கப்படும் கல்வி மாணவர்களின் தற்சுபாவத்திற்கு விரோதமாக இருக்கிறது.

முதல் வகையான கல்வி, இக்காலையுள்ள ஆங்கிலக் கலாசாலைகளில் கற்பிக்கப்படும் ஆங்கிலப் பாடமும் நாவல், நாடகம் போன்ற வீண்கதை போன்றவைகளுமாகும். இவைகளினால் 100-க்கு 99-மாணவர்கள் வெட்கம், நாணம், உரோஷம் முதலிய சிறந்த குணங்களை இழந்தவர்களாய் விடுவதுடன் உற்றார் உறவினர்மீது பகைமையும் இதரர்மீது நேசமும் கொள்பவர்களாயும், தாய்தந்தையர் அரும்பாடுபட்டு சம்பாத்தியஞ் செய்த ஐசுவரியங்களை அள்ளி காற்றில் பறக்க விடுபவர்களாகவும், இஸ்லாத்தையும் இஸ்லாத்தின் கோலங்களையும் கண்டு வெறுப்புக் கொள்பவர்களாகவும், நாஸ்தீகம் போன்ற வழிகெட்ட கொள்கையில் மெள்ள மெள்ள கால்வைத்து இதரர்களையும் அதன்பக்கல் இழுக்கிறவர்களாகவும், அதிகார வர்க்கத்துக்கு அடிபணிபவர்களாகவும், உறவினர்களை வெறுப்பவர்களாகவும், சினிமா தியேட்டர் முதலிய விளையாட்டின்மீது விருப்பங் கொண்டவர்களாயும், இவ்வாறு உலகமுழுதும் வெறுத்துத் தள்ளும் துற்செய்கை என்னும் வலைக்கு இரையாகி விடுகின்றனர். இக் கெடுதிகளெல்லாம் அக்கல்வி கற்றதினாலேற்படும் பயன்களேயாகும். எனவே, மானிடர் புதிய புதிய 'பேஷன்'களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்; சீர்திருத்தம் நாகரீக முன்னேற்றமென்று அதற்குச் சொல்லப்படுகிறது; ஆகவே அதனைப் பெறுவதற்கு நாமும் முயற்சிக்க வேண்டுமென்று இக்கல்வி கற்பதன் மூலம் மாணவர்களின் மனதில் தோன்றுவதால், சம்பாத்தியஞ் செய்து புதிய நாகரீக முறையிலீடுபட வேண்டும்; அந்த புதிய 'பேஷன்' மூலம் பலவாறான புதிய சீர்திருத்தப்பாதையிற் செல்லவேண்டும் என்ற எண்ணம் மனதில் அமைந்து விடுவதால், பணஞ் சம்பாத்தியஞ் செய்வதிலீடுபடுவது, அதிலும் வியாபாரம் புரிவது பெரும் கசப்பாகத் தோன்றுகிறது. உண்மையில் இக்கல்வியானது சாதாரணமாக வியாபாரிகளிலிருக்க வேண்டிய மனோதைரியத்தைப் போக்கி விடுவதாக இருக்கிறது. ஆகவே, இவ்வாறான கல்வி கற்போர் தாங்களும் கெட்டுப்போவதுடன் தங்கள் வர்க்கத்தினரையும் நாசத்தின் பக்கல் சேர்ப்பவராக இருக்கின்றனர்.

இரண்டாவது வகையான கல்வி, அச்சர கணிதம், ரேகா கணிதம் முதலியவைகளாகும். இவை சர்க்கார் கிளர்க்கு வேலைக்காகக் கற்றுக் கொள்ளும் பிரயோசனமற்ற படிப்பாகும். செல்வந்தர், அமீர்களின் மக்கள் அறிவு வளர்ச்சிக்காகவோ அல்லது பிரியத்தின்மீதோ இதனைப் படிக்கின்றார்கள். அன்னோர் தங்கள் வாணாள் முழுதையும் இதற்காகவே தத்தம் செய்திருப்பதால் தங்கள் நேரத்தைக் கழிப்பதற்காக இதிலீடுபட்டிருக்கின்றனர். கூர்மையான அறிவுடைய ஒரு மாணவன் இதில் கவனத்தைச் செலுத்துவதுபோல் வியாபார சம்மந்தமான கணக்குகளில் கவனஞ் செலுத்துவானாகில் கூடிய சீக்கிரம் முன்னேற்றமடைந்து விடமுடியும். ஆனால் தற்கால கல்வியினாலும் அதன் போதனா முறையிலும் அறிவு விசாலத்தை எதிர்பார்ப்பது பகற்கனவேயாகும். ஆகவே இக்கல்வி கற்போர் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. இஃதென்ன? முன்னேற்றத்திற்குறிய வழியே இன்னோரைவிட்டு வெகுதூரம் சென்று விடுகிறது.

மூன்றாவது வகையான கல்வி, பி.ஏ.,எம். ஏ,க்குள்ள பரீக்ஷைகளாகும். மாணவர் 14, 15, வருடங்கள் வரை ஆயிரக்கணக்கான ரூபாய்

களையும் அருமையான வாணுளையும் விரயஞ் செய்து கடைசியாக 40 ரூபாய்சம்பளம் பெற்று அதனை சாப்பாடு, சிகரட், சினிமா முதலியவைகளில் செலவு செய்து விடுவதென்றால்இவ்வாறு கஷ்டத்துடன் கற்ற கல்வியின் பிரயோசனம் என்னவாயிற்றென்று சிந்தனை செய்துபாருங்கள்? அவர்களது கல்வியின் சேவையை உற்று நோக்குவோமாயின், இக்கால கிராஜிவேட்—பட்டதாரிகள் கல்விக்காக என்னென்ன ஊழியம் புரிந்து வருகிறார்களென்பது உலகிற்கே நல்ல வெளிச்சமாக இருக்கிறது. அவர்கள் பற்பல பாடங்களைப் படிப்பதற்கு பதிலாக குறிப்பிட்ட ஒரு பாடத்தில் பரிபூரணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுவார்களாயின் இவ்வளவு காலமும் செல்படியாகி இருக்கமாட்டாது; மூளைக்கு இவ்வளவு தூரம் வேலைகொடுக்கும் படியு மேற்பட்டிராது; ஐசுவரிய அழிவும் உண்டாக மாட்டாது. இக்கஷ்டங்களன்றி மாணவர் குறிப்பிட்ட ஒரு கலையில் பூர்ண முடையவராக ஆகிவிடுவர். இதனால்தான் இக்காலையுள்ள கிராஜிவேட் - பட்டதாரிகள் எந்தக் கல்வியிலுமே தக்கப்பாண்டித்துவ மில்லாதவர்களாய் இருப்பதைக் காண்கிறோம்.

நான்காவது வகையானகல்வி, மானிடர்களின் தற்சுபாவத்திற்கு விரோதமாக இருக்கிறது. அதாவது, ஒரு மாணவனின் மனம் ரேகா கணிதம், அல்லது பூகோளசாஸ்திரம் இவைகள் மீது வெறுப்புற்று சரித்திரக்கலைகள்மீது பிரீதி கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் அவனுக்கு சரித்திரக் கலைகளை கற்பிப்பதற்குள்ள முயற்சிசெய்து அதற்காக பிரத்தியேக ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. இதற்கு மாற்றமாய் தற்கால போதனா முறையில், இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் மற்றதில் ஒரு பிடியாக ஏற்படுத்தி அம்மாணவனின் மூளை சிதறும்படி செய்திருப்பது எவ்வளவு தூரம் விபரீதமுடையதாகு மென்பதை உணரக்கடவோமாக. அம்மாணவன் ஒரு பாடத்தில் எவ்வளவுதூரம் கஷ்டமெடுத்து அதில் அறிவை செலுத்துகின்றானே அவ்வளவுதூரம் மற்றொரு பாடத்திலும் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. கடைசியாக அவன் இங்குமங்குமின்றி திண்டாட வேண்டியதுதான். இஃது பெரிய அநீதியல்லவா? இவ்வாறு ஆயிரக்கணக்கான மாணவர்களின் அறிவு ஆற்றலை தத்தளிப்பு என்னும் அலையில் போட்டு ஒன்றுக்கும் பிரயோசன மற்றவர்களாகச் செய்துவிடுவதாக இருக்கிறது. தற்காலையுள்ள கல்வியினாலேற்படும் இக்கெடுதிகளை நன்கு நோட்டமிட்டுப் பார்ப்பது கொண்டு, பிரயோசனமளிக்கக்கூடிய போதனா முறையின் பக்கல் நமக்கு விழிப்புண்டாகின்றது; அநேக கெடுதிகளின் பிரயோசனங்களைக் காண்பது கொண்டு நல்லவேலையின் பக்கல் பிரீதி ஏற்படுகிறது; தவறிப்போன வழி தென்படுவதாக இருக்கிறது. ஆகவே நாம் இதுகால கல்வின் அசல் பிரயோசனங்களின் பக்கல் ஒரு பார்வையும், தற்காலையுள்ள மார்க்க, உலக சம்பந்தமான கலாசாலைகளின் பக்கல் ஒரு பார்வையும் செலுத்திவிட்டு நம்முடைய அசல் கருத்தின் பக்கல் நோக்குவோமாக.

இதுகாலை நமக்கேற்பட்டிருக்கும் தாழ்மை, கெடுதி, பொருள்விரயம், சமூகக்ஷீணதிசை, வாலிபர்களது கூச்சல், குணக்கேடு, சன்மார்க்க வழிகேடு முதலிய சகலவைகளின் முழுப் பொறுப்பையும் தற்காலையுள்ள பரிபூர்ணமற்ற கல்வியே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இக்காலையுள்ள போதனாமுறை இருவகையாக இருக்கிறது: (1) சர்க்கார்கல்வி (2) மார்க்கக் கல்வி. சர்க்கார் கலாசாலையிலும், சர்க்கார் உதவி பெற்று நடத்தப்படும் கலாசாலையிலும் அவைகளின் நிருவாகிகள் தங்கள் இஷ்டம்போல் பாட முறைகளை ஏற்படுத்தமுடியாது. எனவே, பாடமுறைகளை கணிப்பதோ புஸ்தகங்களை ஏற்படுத்துவதோ இதர சீர்திருத்த ஒழுங்குகளைச் செய்வதோ அவர்களிஷ்டத்திலில்லை. ஆகையால் அவர்களைப்பற்றி இங்கு பேச வேண்டிய அவசியமேயில்லை. எனவே முழுப் பொறுப்பும் தனிஹோதாவில் நடத்தப்படும் யூனிவர்ஸிடியே பொறுத்திருக்கிறது. ஆங்கிலம், உருது, தமிழ் முதலிய பாஷைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாட புத்தகங்கள் முழுதும் நாவல்களாகவே இருக்கின்றன. இது விஷயம் யாவருக்கும் தெரிந்தவையேயன்றி வீண் புகார் செய்வதன்று. மாணவர்கள் 10-வது வகுப்பில் படித்துக்கொண்டிருக்குங்கால் ஷேக்ஸ்பியர் கதைகளை அவர்கள் முடித்தவுடன் அக்கலாசாலையின் தலைமை ஆசிரியரான ஆங்கிலயபாதிரியானவர், இப்புத்தகத்தைக்கொண்டு நீங்கள் திருப்தியடைகின்றீர்களா என அம்மாணவர்களை நோக்கிக் கேட்டார். "அது வீண் கதையாக இருக்கிறது, நாங்கள் பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவதற்காகவே

அதனைப்படித்தோம், இல்லாதுபோனல் சற்குண நல்லொழுக்கங்களைக் கெடுக்கக்கூடிய அக்கதைகளை யாங்கள் வாசிப்போமா, என மாணவர் கூறினர். இதனை செவியுற்ற தலைமை ஆசிரியர் "பேராச்சிரியமாக இருக்கிறது, இதில் என்ன கெடுதி இருக்கிறது? ஆண் பெண் இருவருக்குமிடையே, தானே சம்மந்தமேற்படுகிறது; இதனல் இருவருக்குமிடையே அபரிமிதமான பிரீதி உண்டாகிறது. அதற்குப்பின் அவ்விருவர்களுக்கிடையே காணப்படும் சம்மந்தம் அவர்களுக்கிடையிலுள்ள பிரீதியினலேற்படுவதாகும். உங்கள் வர்க்கத்தாரில் புருஷன் பெண்சாதிக்கிடையில் சண்டை ஏற்பட்டு உங்கள் வீடு நரகத்தின் இரு துண்டுகளாக ஆகிவிடுகிறது. இதற்குக் காரணம் உங்களுக்கிடையே பிரீதி மேலிட்டு, அதன் காரணமாக விவாகம் நடைபெருக் குறைவேயாகும். ஆகையினல் ஆண் பெண் இருவருக்கிடையே, தானே ஏற்படும் பிரீதியைப்பற்றிக் கூறுவதும் அதனை கற்பது, கற்பித்துக்கொடுப்பது, கேட்பது இதரர்களைக் கேட்கும்படி செய்வதும் குற்றமானதும் பளிப்புடையதாகுமோ?" எனக் கூறினர். மனக்கவர்ச்சியை அளிக்கவல்ல இவ்வார்த்தைகளை செவியுற்ற மாணவர்களில் சாதுர்யமான ஒருவர் மிகவும் அழகான மறுமொழி கொடுத்தார். அதாவது, "மாஸ்டர் அவர்களே! அது, தானே ஏற்படும் பிரீதியாக இருக்குமாயின் அதனைக் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லையே. இவ்விளம்பிராயத்தில் அதனை நாங்கள் வாசிப்போமாகில் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக ஒவ்வொரு பாடத்தையும் ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டியதிருக்கும். அதனல் கதாசிரியர் வீரத்தனமுடைய சீர்திருத்தக் காரராக இருந்ததுபோல் நாமும்மாதர்மீதுஆசைகொண்டவரெனப்பெயர் வாங்கக்கூடாதா? என்ன இன்பகரமான வார்த்தைகளாக இருக்கின்றது? நமக்கும் ஒரு ஆசை நாயகி இருந்து அவளிடம் உல்லாச வார்த்தைகளாடிக் கொண்டிருக்கலாகாதா? என்பனபோன்ற எண்ணங்களெல்லாம் எங்கள் மனதிற் தோன்றும். இதனல் குணக்கேடு ஏற்படாது வேறு என்னதான் நடைபெறும்? இதுகாலை எங்களுடைய வாலிபப்பருவமானது கல்வியைக்கற்று அதனை செய்முறையில் நடத்திக் காண்பிப்பதாக இருக்கிறது. ஆகவே நாங்கள் படிப்பதை அப்படியே செய்வதற்கும், கண்கூடாகப் பார்ப்பதற்கும் விரும்புகிறோம். இதுதான் மாணவர்களின் தற்சுபாவமாகும். காதலை வருத்தும் விஷயங்கள் வாலிபப்பருவத்தில், தானே ஏற்பட்டுப்போகிறது; அதில்தான் இன்பமிருக்கிறது; மானிடனுக்கு இச்சையைக் கற்பித்துக் கொடுப்பதற்கு எந்த ஆசிரியரும் தேவையில்லையே, நாங்கள் மானிடராவதற்கும் கல்வியினல் பிரயோசனமடைவதற்கும் தான் எங்களைகலாசாலைக்குஅனுப்பப்படுகிறது. ஆனல் நாங்கள் இவ்விடம் வந்து காதலைக் கற்றுக்கொள்கிறோம்; எங்கள் மனம் அதன் மீது மோகங்கொண்டு விடுகிறது," எனக்கூறினர். இதனை செவியுற்ற உபாத்தியாயர் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்து விட்டார்.

(தொடரும்.)

ஸீரத் பிரசங்கத்திலும் காதியானிப் பிரசாரமா?

(மௌலான அபுல்ஹஸன் சாஹிப் மத்ராஸி வரைவது)

சோதரீர்!

இவ்வருடத்திய 'யவ்முந்நபி'க்கென்று பல ஸ்தாபனங்களும், சிலர் சொந்தத்திலும் பற்பல பிரசுரங்கள் தயாரித்தனர். அவைகளிலநேகம், நம்பெருமானர் சத்தியத்தூதர் காத்தமுந்நபிய்யீன் (ஸல்.) அவர்களின் குணதிசயங்களையும் மஹாத்மியத்தையும் வெளியிடக்கூடிய அரும் பொக்கிஷமா யிலங்கா நிற்கின்றன. யவ்முந்நபியின் இலக்ஷியமும் அதுவேயாகும்.

என்னெனின், உலகமக்களிற் சிலர் சத்தியத்தூதர் (ஸல்) அவர்களினது சீரையும் சிறப்பையும் அறியாதவர்களாக இருந்துவருகின்றனராதலின் அவர்களுக்கு இறுதி நபி அவர்களின் சற்குண நல்லொழுக்க விசேஷங்களை எடுத்தோதவேண்டியது நம்மவரின் கடமையாகும். இதுதான் உலக முழுதிலும் "யவ்முந்நபி விழா" கொண்டாடுவதின் நோக்கமாகும். அப்பிரசுரங்களில் எம்பெருமானர் நபிகள் திலகம்

(ஸல்) அவர்களோடு நபித்துவம் முற்றுபெற்றுப்போயிற்று; அவர்கள் "காத்தமுல் அன்வியா" வாகும்; அவர்களைக் கொண்டேயன்றி முக்திபெற வேறு வழி கிடையாதென்பதையும் வற்புறுத்தி எழுதவேண்டும்.

இன்னேக்கத்தின் தோரணையில்தான் அநேக பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுளன. ஆனல் இச்சந்தர்ப்பங்களில் காதியானிகள் மெள்ள வந்து நுழைந்துகொண்டு தங்கள் கொள்கைகளை நயவஞ்சகத்தனமாய்ப் புகுத்தி வஞ்சித்துவருவது சகஜமாய்க் காணப்பட்டு வருகிறது. இஃதொரு பக்கலிருக்க,

பா. தா. வால் வரையப்பட்டுள்ள "மஹான் முஹம்மது நபி (ஸல்.) சீர்திருத்தங்களும், யுத்த தர்மமும்" என்ற நூலை எடுத்துக்கொள்வோம். அதில் சன்மார்க்கத்துக்கு ஒவ்வாத—ஏன்? முஸ்லிம்களின்கொள்கைக்குநேர்விரோதமான பற்பல விஷயங்கள் காணக்கிடக்கின்றனவாதலின் அவைகளில் சிலவற்றை இவண் விளக்குவாம்:—

ஷை புத்தகம் 13-ம் பக்கம் 36-வது பாராவில் வரையப்பட்டிருப்பதாவது:—

முஸ்லிம்களை, புத்தர் ராமர் கிருஷ்ணர் ஜோரோஸ்டர் (ஜர்தஷ்தியர்) மூஸா ஈஸா ஆகிய எல்லா மதத்தலைவர்கள்மாட்டும் மரியாதை காண்பிக்கச் சொல்லி நபிகள் நாயகம் (ஸல்.) மத சுதந்திரத்தின் சர்வலோக சமாதானத்திற்குரிய அஸ்திபாரத்தை நிலைநிறுத்தி யிருக்கிறார்கள். என்பதாகும்.

மேலே கூறப்பட்டவர்கள்மாட்டு மரியாதை காண்பிக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக வரையப்பட்டிருக்கிறது. ஆகவே, இச்சொல்லுக்கு ராவி யார்? அதாவது நபிகள்பிரான் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்களென அறிவித்தது யார்? சத்தியதூதர் (ஸல்.) அவர்கள் இவ்வாறு அறிவித்ததாக எந்த ஹதீது கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது?

இந்த ஹதீதை ரிவாயத்துச் செய்தவர் பெயர் ஹஸனு, கரீபா அல்லது ஹஸன் கரீபா? இவைகளைக் குறித்து இந்நூலாசிரியர் தக்க பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார். அவ்வியாசத்தில் கடைசியாகக் குறிப்பிட்டுள்ள இருவரும் மூஸா (அலை), ஈஸா (அலை) என்று கருத்துவைத்துக்கொண்டால் அது விஷயமாய் முஸ்லிம்களுக்கு எவ்விதமான ஆக்ஷேபனையுங் கிடையாது. ஆனல் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வரைப்பற்றி காதியானிகளின் அபிப்பிராயம் அவர்கள் நபிமார்கள் என்பதேயாகும். அவர்கள் இன்னோர்மீது கலிமாவும் ஓதுகின்றனர். இவ்வபாண்ட வழிகெட்ட கொள்கையை இந்நூலாசிரியர் நம் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்,) அவர்கள் பக்கல் இணைத்து முஸ்லிம்களின் கண்களில் மண் தூவப் பார்க்கின்றார்; காதியானிக் கொள்கையை மெள்ள இஸ்லாத்தில் கொண்டுவந்து நுழைக்க ஆரம்பிக்கிறார். ஆனல் அவ்வாறு ஒருவரும் தூங்கவில்லை என்பதையும் அவர் நினைப்பதுபோல் உலகம் ஏமாந்து இருக்கவில்லை என்பதையும் உணர்ந்து மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு தக்க விடையிறுப்பாராக.

மேலும் அப்புத்தகம் 15-ம் பக்கத்தில்,

கடவுளை அதற்கு முன்வரை மனிதர்கள் ஒரு வெறும் சூன்யமாகவே கருதிவந்திருக்கிறார்கள். ....அவனுடன் சம்பாஷணை புரியவும் அவன் கூறியதை செவிமடுக்கவும் அநேக முஸ்லிம்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

என வரைந்திருக்கிறார்.

இது சம்பந்தமாயும் நன்கு பரிசீலனை செய்ய வேண்டியதாயிருக்கிறது. ஏனெனின், பா. தா வால் வெளியிடப்பட்டுள்ள ஞானபோதத்தில், வஹீவரும் வாசல் இன்னமும் திறந்தே வைக்கப்பட்டிருக்கிறதெனவும், ஜவாஹிருல் புர்கானில், வஹீயை நேர்வழியில் செல்லும் ஒவ்வொரு உண்மை முஸ்லிமும் அடைதல் கூடும் என்றும் அவர் வற்புறுத்தி எழுதியிருக்கிறார். அக்கருத்தை வெளியிடுவான்வேண்டியே இப்பிரசுரத்திலும் மேற்குறிப்பிடப்பட்ட வார்த்தைகளை புகுத்தியிருக்கிறார். ஆனல் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களோ வஹியின்வாசல் அடைபட்டுப் போயிற்று; யாருக்கும் வஹீவரமாட்டாதென சந்தேகமறக் கூறிவிட்டார்கள். இந்த ஹதீதுகள் புகாரி முஸ்லிம் முதலிய ஹதீது கிரந்தங்களிலும் வரையப் பட்டுள்ளது.

இந்நிலைமையில், நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு எதிரியாய், தான் நபி என்று வாக்காடிய "முத்தநபி" யாகிய மிர்ஸா குலாம் அஹ்மது காதியானின் பஹிரங்க (வழி

கெட்ட.) கொள்கையை மீலாத் ஷரீப் பிரசுரத்தில் தந்திரமாய்க் கொணர்ந்து நுழைத்து முஸ்லிம்களிடையே அக்கொள்கை பரவும்படி செய்ய முயற்சிப்பது எவ்வளவு தூரம் மோசடியான காரியமாகுமென்பதை நேயர்கள் நன்குணர்வார்களாக. இவ்விஷயங்களை நன்குணராத—காதியானிகளின் வலையில் சிக்கிய—சில யுவர்கள் இப்பிரசுரத்தை முஸ்லிம்களிடையே வினியோகிக்கவும் முயற்சிக்கின்றனர். அந்தோ பரிதாபம்! அனந்தம் பரிதாபம்!! ஒரு சில இடங்களில் இப்பிரசுரம் வினியோகிக்கப்படாது தடுக்கப்பட்டும் போயிருக்கிறது. ஆகவே, நம்மனோர் இனியேனும் ஏமாறாது உஷாராகுவார்களாக. ஏகவல்ல நாயன் அதற்கான நல்அறிவை நம் யுவர்களுக்கு அளித்து இகபர பாக்கியங்களைத்தந்தருள்புரியானுக.

செய்தித்திரள்

காலித் லதீப் கௌபா

எம்பயர் பார்லிமெண்டரி கான்பரஸில் சமூகமளிப்பதற்காக லண்டனுக்குச் செல்லும் வழியில் பாரிஸ்டர் காலித் லதீப்கௌபா, எம். எல். சி. அவர்கள் மிஸர் துறைமுகம் வந்து சேர்ந்தார்கள். அதுகாலை மிஸ்ரில் பிரசுரமாகும் பத்திரிகைகளெல்லாம், இந்தியா சம்மந்தமாகவும் மிஸ்டர்கௌபா அவர்கள்சம்மந்தமாகவும் பத்திபத்தியாகப் பிரசுரம் செய்தன. மிஸ்டர் கௌபா அங்கு விஜயஞ்செய்தகாலை அங்குள்ள "எங்முஸ்லிம் அஸோஸியேஷன்" தக்க முறையில் வரவேற்பு செய்தது. மிஸர் ஷைகுல் இஸ்லாம், ஹிஸ் எக்ஸிலென்ஸீ காரீதவ்பீக் பாஷா முதலிய பிரபலத் தலைவர்கள் துறைமுகஞ்சென்று வரவேற்பில் கலந்து கொண்டனர். "வப்த்" தலைவரே நேரில் மிஸ்டர் கௌபாவிடஞ் சென்று, மிஸர்வாசிகள் சார்பாகவும், வப்த் புறத்திலிருந்தும் நல்வரவு கூறினர். "ஸகுலூல்" ஹவுஸுக்கு அழைக்கப்பட்டு அங்கு வெகு நேரம் வரை நுஹாஸ் பாஷாவிடம் பலவிஷயங்களையும் பேசிக்கொண்டிருந்தார். இதற்கிடையே, அநேகப் பத்திரிகைப் பிரதிநிதிகள் அங்கு பிரவேசிக்க அனுமதி கோரியும் உத்திரவு கிடைக்காததால் இந்தியா, மிஸர் இவைகளின் ஐக்கிய சம்பந்தமாயும், இஸ்லாம் சம்பந்தமாயும் பேச்சுகள் நடைபெற்றிருக்குமெனத் தெரிகிறது.

மிஸ்டர் கௌபா அவர்களுக்கு பற்பலவிடங்களிலும் உபசாரம் நடைபெற்றது. இதற்கிடையே மிஸர் கவர்னரும், இல்மீஈஸா பாஷாவும் 'டீ பார்ட்டி' செய்தனர். மிஸர் தேசாதிபதியின் தமையன் குமாரத்தி 'இப்பத்ஹஸன்' இராஜகுமாரியும் அன்றிரவு அழகிய பெருவிருந்தொன்று அளித்தார். பின்னர் 'எங் முஸ்லிம் அஸோஸியேஷன்' தலைமை ஸ்தானத்தில் மிஸ்டர் கௌபா மிகவும் அருமையான பிரசங்கமொன்று செய்தார். அது யாவருடைய மனதிலும் பெரும் கவர்ச்சியைக் கொடுத்துளது. மறுநாள் கௌபா 'ஜாமிஅ அஜ்ஹரு'க்கு அழைக்கப்பட்டார். அதுபொழுது கல்வி இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜெனரலான ஹுஸைன் பேயும் கூடவேயிருந்து யூனிவர்ஸிடியின் வேலைகளையும் சீர்திருத்த ஏற்பாட்டின் சகலகாரியங்களையும் விளக்கினர். அது காலை 'ஜாமிஆ மில்லியா' சார்பிலும் மிஸர்வாஸிகள் சார்பிலும் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மறுநாள் நீதிஸ்தலங்களைப் பார்வையிட்டார். அப்பொழுது நீதிஸ்தலத்தின் சீப்ஜஸ்டிஸ் ஹிஸ் எக்ஸிலென்ஸி அஜீஜ் பஹ்மீபாஷா அவர்கள் மிஸ்டர் கௌபாவை வரவேற்று ஜட்ஜ்களுடன் அமரச்செய்தார். பிறகு ஜட்ஜ்களுடன் புகைப்படமும் எடுக்கப்பட்டது.

ஒரு காதியானியின் சதி

காதியான் அஹ்ரார் சபைத் தலைவர் முஹம்மது இநயத்துல்லா சாஹிப் அவர்களைக் கொலை புரிவதற்கு எத்தனித்துள்ள மிர்ஸாயி வகுப்பைச் சேர்ந்த ஒரு வாலிபன் கைது செய்யப்பட்டிருக்கிறான். "எனக்கு இல்ஹாம் ஏற்பட்டு,நான் அவரைக்கொல்ல வந்ததால் நிச்சயமாய் அவர் கொல்லப்பட்டுப் போவாரென்பது எமது நம்பிக்கையாகும்" என்று அவ்வாலிபன் கூறினர். இவ்விஷயம் முஸ்லிம்களுக்கிடையே பெரியதோர் பரபரப்பை உண்டுபண்ணி எல்

லோர் மனதிலும் பயமேற்பட்டிருந்தது. ஆங்காங்கு போலிஸ்சிப்பாய்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். ஆனால் மக்கள் இவ்விஷயத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு அதிக ஆவல் கொண்டவர்களாய் பள்ளிவாசலில் வந்து கூடி விட்டனர். அங்கு எள்ளுப்போடகூட இடம் இல்லாது போயிற்று. வீட்டுத்தளம், தெருவீதி முதலிய இடங்களில் நின்றுகூட மக்கள் அன்று ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பத்துக்கு வந்துவிட்டது.

சரியாய் பகல் 1-மணி சுமாருக்கு மௌலானா இனாயத்துல்லா சாஹிப் அவர்கள், காதியானிக் கொள்கையை தக்க முறையில் விளக்கிக் காண்பித்து வருவதற்கிடையே, காதியானி வர்க்கத்தினருக்கு சன்மார்க்கத்துடன் எவ்வாறான சம்பந்தமுங் கிடையாது; ரூபாய் சம்பாத்தியஞ் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு நோக்கமெதுவுமிருக்கவில்லை என்பதை மிர்ஸாவினா லியற்றப்பட்ட புஸ்தகங்களின் ஆதாரங்களைக் கொண்டே ஸ்திரப்படுத்தினார்கள்.

பின்னர், மௌலானா முஹம்மது அலீ சாஹிப் பாஸ்லவீ அவர்கள் எழுந்து, எனக்குப் பிரசங்கமாற்ற இஷ்டப்படாது போயினும், காதியான் தலைநகருக்கு வந்து இவ்விடத்திய விஷயங்களை நன்கு தெரிந்துகொண்டபின் வாய் திறக்காதிருக்க முடியவில்லை. இவ்விடத்தில், உண்மையை வெளிப்படுத்துவதற்கு முயற்சித்த எத்தனையோ பெயர்கள் அநேக துன்பங்களை அனுபவித்தும், அநேகர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டும், சிலர் கொல்லப்பட்டும், அவர்களது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் போயுள்ளது. ஆனால் இந்த இடத்தில் இன்று ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி யிருப்பதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டியதாக இருக்கிறது. இங்குவாசஞ் செய்துள்ளோர்பலவாறானகஷ்டநஷ்டங்களைச் சகித்துக்கொண்டு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் முந்தாணியைக் கைவிட்டார்களில்லை. நீங்கள்மனோஉறுதியுடன் சன்மார்க்கத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் நிலைமையில், உங்கள் சுகம் சங்கை மரியாதை யாவற்றையும் பொருட்படுத்தாது 50 வருடம்வரை மிர்ஜாயிகளின் அதிக்கிரமத்திற்கு ஆளாயிருந்துங்கூட நீங்கள் ஸ்திரமாகவே யிருந்து வந்தீர்கள். இதுகாலை அநீதிபுரிபவர்களின் கைமடக்கப்பட்டுப் போயிருக்கிறது; அனியாயக்காரர்களின்அநீதியை அடக்குவதற்காக அல்லாஹ்தஆலா அஹ்ரார் சபையினரை ஏற்படுத்தியிருக்கிறான். நீங்கள் அநீதியைச் சகித்துக்கொண்டிருந்ததின் காரணமாக இன்று இந்தியா முழுவதிலும் மிர்ஸாயிக் கொள்கையைக் கண்டனஞ் செய்வதில் புதிய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

சகோதரர்களே! மிர்ஸாயிக் கொள்கையைக் கண்டனஞ் செய்வதில் உங்களுடைய முயற்சியைச் சற்றும் தளரவிடலாகாது. மௌலவீ இனாயத்துல்லா சாஹிப் அவர்களைக் கொலை செய்துவிடவேண்டும் என்னும் உறுதியோடு, இன்றைய தினம் மிர்ஸாயிகளின் வாலண்டியர் படையிலிருந்து ஒருவன் வெளிவந்தது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. "அநீதி வரம்பைக்கடந்து விட்டது; உலகில் நெருக்க மேற்பட்டுப் போயிற்று; அநீதி செய்யப்பட்டவர்களின் அழுகை 'அர்ஷ்' வரை போய்ச் சேர்ந்துவிட்டது; அல்லாஹ்வின் கோபப் பார்வை இறங்க ஆரம்பித்துவிட்டது; அனியாயக்காரர்களை பெரிய சக்தியாலுங்கூட காப்பாற்ற முடியாத காலம் வந்துவிட்டது; ஆரம்பத்தில் அநீதி தாண்டவமாடி உலக முழுதும் அநீதி அக்கிரமத்தைக்கொண்டு நிரப்பப்பட்டுப் போனபோது அல்லாஹ் தஆலா வேதனையை அனுப்புவது வழக்கமாக இருக்கிறது; அநீதி எப்பொழுதும் அழிந்துபோகக் கூடியதுதான்; எஜீத் முதலியோரின் சம்பவம் நம்முன் இருக்கிறது; அது அழிந்துபோகக்கூடிய காலம் வருமாயின் அவனுடைய அறிவும் ஐசுவரியமும் வீணாதாய்விடும்" என்பதை மிர்ஸா மஹ்மூதுக்கும் அவர் கூட்டத்தினருக்கும் இதுபோது தெரியப்படுத்திவிட விரும்புகிறேன்.

மௌலவீ இனாயத்துல்லாசாஹிப் அவர்களைக் கொல்ல எத்தனித்தது அவர் தலையோடுநின்றுவிடாது. ஒரு இனாயத்துல்லா கொல்லப்பட்டுப் போய்விடுவாராகில் மிர்சாயிகளின் வேறுகளை அறுக்கக்கூடிய 1000 இனாயத்துல்லாக்கள் அவருடைய ஸ்தானத்தில் வந்துவிடுவர்; மிர்ஸாயிகளின் பயமுறுத்துதலுக்கு யாரும் பயப்படவில்லை; இரத்தப்பழி சும்மாவிடாதாகையால், முஹம்மது ஹுஸைன்ஷஹீது அவர்களை ஒரு மிர்ஜாயி கொன்றதின் பயனாகத்தான் மௌலவீ முகம்மது இனாயத்துல்லா காதியானில் வேலை செய்யும்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை காதியானி வகுப்பார் தெரிந்து கொள்ளவேண்டும்.

மௌலவீ அவர்களைக் கொலைபுரிந்து விட வேண்டுமென்று உறுதியோடு புறப்பட்டவ

ளின் கதி என்ன வாயிற்றென்பதை நீங்கள் நேரில் பார்த்துக்கொண்டீர்கள். அவன் போலீ ஸார் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறான். இனி நீங்கள் பொறுமை ஒற்றுமையோடு வேலை செய்வீர்களாகில் நிச்சயம் ஜெயம் பெறுவீர்க ளென்பது திண்ணம், எனக்கூறி முடித்தார்கள்.

காதியானிகளின் அதிக்கிரமம்

16-6-35 தேதி இரவு காத்யான் ஜும்ஆ மஸ் ஜிதில்முஸ்லிம்களின் மாபெரும்கூட்டமொன்று கூடிற்று. அதில் மௌலானா இனயத்துல்லா சாஹிப், மியான் தாஜுத்தீன் சாஹிப் இவர்கள் அரிய சொற்பெருக்காற்றினர். பின்னர் அடியிற் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. "மிர்ஸா மஹ்மூத் தன் ஏஜண்டுமூலம் முஸ்லிம் களின் கபரஸ்த்தான், ஈத்காஹ் இவைகளைக் கைப்பற்ற முயற்சிப்பதால் கவர்ன்மெண்டார் இதில் பிரவேசித்து அனியாக்காரர்களின் அதிக்கிரமங்களை அடக்குமாறு கவர்ன் மெண்டை வேண்டிக் கொள்ளுகிறது" என்ப தாகும்.

மறுநாள் பகல் 10 மணிக்கு மிர்ஸா பஷீர் அஹ்மத், மிர்ஸாஷரீப் அஹ்மத் இவ்விருவரும் தங்கள் பார்ட்டியினருடன் ஆயுதபாணி அணிந்தவர்களாய் முஸ்லிம்களின் கபரஸ் தானைக் கைப்பற்றுவதற்காகப் புறப்பட்டார் கள். இது செய்தி முஸ்லிம்களுக்குத் தெரிந்த வுடன் அவர்களும் கபரஸ்தான் போய்ச்சேர்ந் தார்கள். "மிர்ஸாயிகள் சட்டத்திற்கு மீறி நடக்கிறார்கள்" என்னும் விஷயமும் போலீஸா ருக்கு அறிவிக்கப்பட்டது. தவிர மௌலானா இனயத்துல்லா சாஹிப் அவர்கள் இது செய் தியை போலீஸ் சூப்ரெண்டெண்டுக்கும் டிப்டி கமிஷனருக்கும் தந்திமூலம் அறிவித்து, தாங்க ளும் கபரஸ்தானுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரினார்கள். இதற்கிடையே மிர் ஜாயிகள் கபரஸ்தானுள் பிரவேசித்து பூமி யைத் தோண்டுவதற்கு ஆரம்பித்தனர். முஸ் லிம்கள் அங்கு சென்று, "மிர்ஸாயிகாள்! அல் லாஹ்வுக்காக எங்கள் கபர்களைத் தோண்டாதீர் கள்" எனக்கேட்டுக் கொண்டிருப்பதற்கிடையே போலீஸார் அங்கு வந்து, இருவகுப்பாரும் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டு மெனக் கூறினர். அதுபொழுது முஸ்லிம்கள் "இது எங்கள் இடமாகும் ஆகையால்இதில் மிர் ஸாயிகளுக்கு எவ்விதபாத்தியதையுங் கிடை யாது. எனவே அவர்களை வெளிப்படுத்திவிடுங் கள்" என்று கூறினர். மிர்ஸாயிகள் வெளியில் போக மறுத்தனர். சில மிர்ஸாயிகள் போலீ ஸார்வருவதைக்கண்டுஆரம்பத்திலேயேஓட்டம் பிடித்தனர். மிர்ஸாபஷீர் அஹ்மத், ஷரீப் அஹ் மத் இருவரும், போலீஸார் தங்களைப் பார்க் காது மரத்தில் மறைந்து கொண்டனர். போலீ ஸார் வந்தவுடன் கைது செய்வதற்கு ஆரம்பித் தனர்.

மிர்ஸாயிகளில், போக்கிரித்தனமுடைய வம் பர்களில் அறுவர்கைது செய்யப்பட்டனர். அத் துடன் ஒன்றுமறியாத 4 முஸ்லிம்களும் பிடிக் கப்பட்டிருக்கின்றார்கள். பின்னர் சப் இனிஸ் பெக்டர் ஸர்தார் குஷ்ஹால்சிங் என்பவர் நான்கு போலீஸ்களை கபரஸ்தானில் ஏற்படுத்தியிருக் கிறார். போலீஸ் டிப்டி சூப்ரெண்டெண்ட் லாலா ஜவாஹிர்லாலும் மாஜிஸ்டிரேட் சௌதரி ஹுஸைன் அலீயும் தக்க சமயத்தில் அங்கு வந்து சேர்ந்தனர். கைதிகள் யாவரும்கடைத் தெருவு வழியாக அதிகாரிகள் இறங்கியிருக்கு மிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒவ் வொருவரிடமும் ஆயிரம் ரூபாய் ஜாமினும், 1000 ரூபாய்க்கு சொந்த முச்சலிக்காவும் கொடுத்து வெளியில் வந்திருக்கிறார்கள். போலீஸ் பாரா எற்படுத்தப்பட்டும், மிர்ஸாயி கள் பிடிபட்டும் போனதால் அமைதி நிலவி இருக்கிறது. ஆனாலும் மிர்ஸாயிகள் ஆத்திரம் ததும்பியவர்களாய் அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருக்கிறார்கள். மிர்ஸா மஹ்மூதின் அதிர்ஷ்டம் விரண்டோடி விட்டதோ? தெரிய வில்லை. அன்று மத்தியானமே மிர்ஸா மஹ்மூத் தனது தம்பி மியான்ஷரீப் என்பவரை ஸர், ஜபருல்லா இடம் ஷிம்லாவுக்கு அனுப்பி இருப்பதால் அந்த மலை உச்சத்திலிருந்து என்ன செய்தி வரப்போகிறதோ தெரியவில்லை. ஆகவே, பொதுவாக இந்தியாவனைவரும் குறிப் பாக முஸ்லிம் உலகும், காதியானில் அநீதிக் குள்ளாயிருக்கும் முஸ்லிம் ஹிந்து, ஸிக்கு முத லியவர்களின் பக்கல் கவனத்தைச் செலுத்தி உதவி புரிவதற்கு முன் வருவார்களாக.

நாகூர் முஸ்லிம் சங்கம்

சகோதரர்களே!

இவ்வூரில் மையத்து ஏற்பட்ட அன்றைய தினம் மையத்தை வைத்துக்கொண்டு போஜ னம் தயாரிப்பதும், மையத்தை நல்லடக்கம்

செய்தவுடன் பலரையும் அழைத்து விருந்தளிப்பதுமான வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்று நாகூர் முஸ்லிம்களில் பலர் கையொப்பமிட்டு இச்சங்கத்திற்கு ஒரு மகஜர் அனுப்பினர்கள். அம்மகஜரை இச்சங்கத்தில் 24-5-35-ல் கூடிய பொதுச்சபையில் வைத்து ஆலோசித்ததில், 14-6-35ல் நாகூர் தர்கா ஷரீபில் முஸ்லிம்களின் மஜ்லிஸ் ஒன்றை கூட்டிவைத்து அதில் முடிவுசெய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வண்ணமே 1935 ளு ஜூன் மீ 14உ வெள்ளிக்கிழமை மாலை மணி 5-க்கு தர்கா ஷரீபில் ஜனுப் ஹாஜீ முக. முகம்மது மீரான் சாஹிப் மரைக்காயர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் இச்சங்கத்தின் ஆதரவில் கூடிய முஸ்லிம்களின் பொதுக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகோபித்து நிறைவேறின.

தீர்மானங்கள்

1. இவ்வூரில் மையத்து ஏற்பட்ட அன்றையதினம் மையத்தை வைத்துக்கொண்டு போஜனம் தயாரிக்கவும் கூடாது; மையத்தை நல்லடக்கம் செய்தவுடன் பலரையும் அழைத்து விருந்தளிக்கவும் கூடாது.

2. மையத்தை நல்லடக்கம் செய்த பிறகு அம்மையத்துவின் இரத்த பந்துகளுக்கும் வெளியூரார்களுக்கும் மட்டில், பந்துக்களாவது அயலகத்தாராவது அல்லது அம்மையத்துக் குடையவர்களாவது விசேஷமற்ற சாதாரண முறையில் போஜனம் தயாரித்துகொடுக்கலாம்.

3. மேற்கண்ட தீர்மானங்களுக்கு விரோதமாக மையத்து வீட்டில் களரி செய்வார்களேயானல், அக்களரிக்கு ஒருவரும் போகக் கூடாது.

மேற்கண்ட தீர்மானங்கள் நம்முஸ்லிம் சமூகத்திற்கு பொதுவாக எவ்வளவு நன்மையைத் தரக்கூடியதாய் இருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். ஆகையால், சகோதரர்களே! இது விஷயத்தில் ஒற்றுமைத்து இத்தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டிக்கொள்கிறோம்.

M. P. S. மாலிம் பெரியநாஞ,
மு. துலாம் முஹையதீன்,
காரியதரிசிகள்.

யவ்முந்நபீ விழாக்கொண்டாட்டம்

உலகரட்சகர் முஹம்மது நபி (ஸல்.) அவர்களின் ஜனன விழா வைபவம் நம் தமிழ் நாட்டின் பற்பல இடங்களிலும் சிறப்பாகக் கோண்டாடப்பட்டிருக்கிறது. நண்பர்கள் அவ்வைபவ நிகழ்ச்சிகளை அப்படியே எழுதிப் பிரசுரிக்குமாறு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவ்வாறான கடிதங்கள் ஏராளமாக நம் ஆபீஸுக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவைகளை அப்படியே பிரசுரிப்பதென்றால் பூரா இதழும் போதாதாகையால் அந்நிருபங்கள் சிலதிலிருந்து சுருக்கத்தை மட்டும் பிரசுரிக்கிறோம்.

புத்தானத்தம்

இவ்வூர் 'ஸீரத் கமிட்டி'யாரின் நன்முயற்சியால் திருநபி அவதாரதினம் இவ்வைபவத்திற்காக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் 14-6-35-ல் மௌலானா மௌலவீ முஹம்மது கமாலுத்தின் ஆலிம் அவர்கள் தலைமையில்மிக்க விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. அதில் மௌலவீ அல்ஹாஜ் அப்துல்கரீம்ஆலிம், மௌலவீகுலாம்ரஸூல்சாஹிப்,முஹம்மது ஜைனுத்தீன்சாஹிப், அஹ்மத் ஜலாலுத்தீன் அப்துல் வதூத் சாஹிப் முதலானோர் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது வாழ்நாள் சரிதையை தக்க முறையில் எடுத்து விளக்கினர்கள். பிறகு "உலகரட்சகர் முஹம்மது நபி (ஸல்.)" "காத்தமுந்நபிய்யீன்" என்னும் ஸீரத் பிரசங்கங்கள் வினியோகிக்கப்பட்டு சபை கலைந்தது.

எரவாஞ்சேரி

இவ்வூர் 'ராத்திப் சங்க' ஆதரவில் மஸ்ஜித் முன் அமைக்கப்பட்டுள்ள சிங்கார பந்தலில் 14-6-35 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின் மௌலவீ அபுல்மல்ஹர் ஷர்புத்தீன் ஆலிம்

அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு கூடிற்று. அக்கிராசனர் அவர்களது முன்னுரைக்குப் பின் மௌலவீ உ. அப்துல்கரீம் ஆலிம், நீடூர் அராபிக்கலாசாலை புரொபஸர் மௌலவீ E. M. S. கமால், ஸ்ரீமான் வெங்கட்டருமய்யர் ஆகியோர் இஸ்லாத்தில் மிளிர்ந்து காணப்படும் ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் முதலியவைகளை விளங்கி அரும் சொற்பெருக்காற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் "காத்தமுந்நபிய்யீன்", "உலகரட்சகர் முஹம்மது நபி(ஸல்)" என்னும் ஸீரத் பிரசங்க நூற்கள் வினியோகிக்கப்பட்டது.

கூத்தானல்லூர்

இவ்வூர் 'பெஸ்டிவல் சொசைட்டி'யின் ஆதரவில் "ஈதுகாஹ்வில்" 14-6-35 வெள்ளிக்கிழமையன்று ஆலீஜனுப் கான்பஹாதுர் P. கலீபுல்லாஹ் சாஹிப் M. A., B. L., M. L. C. அவர்கள் தலையில் 'யவ்முந்நபிவிழா'க் கொண்டாடப்பட்டது. அதுபொழுது சாந்தி சாரணர்கள் நபிகள்பெருமானர் (ஸல்.) அவர்கள்மீது புகழ்பாக்கள் பாடினர். தலைவரின் முகவுரைக்குப்பின் அல்ஹாஜ் மௌலவீ ச. அ. முஹம்மது அலீ சாஹிப், நா. மு முகம்மது இப்ராஹிம் சாஹிப், ஸ்ரீமான் விஸ்வனதைய்யர் முதலானேர் இஸ்லாத்தின் உயரியநோக்கம், பெருமானர் (ஸல்.) அவர்களின் திவ்விய வாழ்க்கை இவைகள் சம்பந்தமாய் அரிய சொற்பெருக்காற்றினர். 'உலகரட்சகர் முஹம்மது நபி (ஸல்)' என்னும் ஸீரத்பிரசங்கப் பிரதிகள் ஏராளமாய் வினியோகிக்கப்பட்டது.

ஆவணியாள்புரம்

இவ்வூர் 'எம். எச். இ. ஸ்கூல் கார்டன்' பந்தடி மைதானத்தில் 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஷை ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் எ. வ. சுவாமிநாத அய்யர் தலைமையில் மகாநாடு கூடிற்று. தலைவர் முன்னுரைக்குப்பின் மௌலவீ ஹாஜீ காதிர்முஹையித்தீன் ஆலிம், மௌலவீ மு. முஹம்மது ஷரீப் ஆலிம் ஆகியோர் நபிகள் நாயகம் (ஸல்) உலக மாந்தருக்குச் செய்துள்ள பல அரிய பரோபகாரங்களை விளக்கி அறிய சொற்பெருக்காற்றினர். கடைசியில் 'உலக ரட்சகர் முஹம்மது நபி(ஸல்)' என்னும் அரும் ஸீரத் பிரசங்கம் வாசிக்கப்பட்டு நூற்றுக்கணக்கில் வினியோகிக்கப்பட்டது.

நாகூர்

இந்நகர்ப்பதியின்கண் சிறந்து விளங்கும் தர்கா ஷரீயில் 14-6-35 வெள்ளிக்கிழமை யன்று ஜனுப் M. ஹமீது சுல்த்தான் மாலுமியார் பி.ஏ., பி.எல், அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மீலாத் ஷரீப் மகாநாடு கூடிற்று. அக்கிராசனர் அவர்களது முகவுரைக்குப் பின் ஜனுப்களான மௌலவீ ஹாஜீ செய்யித் ஹஸன் சாஹிப், மௌலவீ முஹம்மது மூஸாஆலிம், ஹாஜீ முகம்மது மீரான் சாஹிப் மரைக்காயர் முதலியோர் பெருமானர் (ஸல்) அவர்களது திருச்சரிதை, குணதிசயம், நடை, ஒழுக்கம் முதலானவைகளை சாங்கோபாங்கமாய் எடுத்துக் கூறினர்கள். பின்னர் இவ்வூர் டவுன்காஜியும், தர்கா டிரஸ்டியும், ஹிபாஜத்துல் இஸ்லாம் பேரபிமானியுமாகிய சுல்தான்கலீலா சாஹிப் அவர்களால் துஆ ஓதப்பட்டு சபைமுற்றுப் பெற்றது.

அத்திக்கடை

இவ்வூர் 'ஹிதாயத்துல்அனும்' ராத்திப் சங்கத்தின் ஆதரவில், சங்க ஹாலுக்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் 12-6-35 புதன் கிழமையன்று ஆலீஜனுப் மௌலானமௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மகா நாடு ஆரம்பமாயிற்று. சங்க சார்பில் தலைவருக்கு உபசார பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு தலைவரின் முகவுரைக்குப் பின், ரா. மு. அப்துல் ரஹீம், மூ. மு. முஹம்மது இப்ராஹீம், கா. ப. ஜகரிய்யா ஆகியோர் நாயகம் (ஸல்) மீது புகழ்பாக்கள் பாடினர். பின்னர் மௌலவீ S. N. ஹுஸைன் முகம்மது சாஹிப், மௌலவீ A. A. அப்துல்கரீம் சாஹிப், மீ. இ. மு. அபுல்ஹஸன்ஷாதலி முதலியோர், நாயகம் (ஸல்) அவர்களுக்குமுன் இவ்வுலகமிருந்த நிலைமை, ஸஹாபாக்கள் பெருமானர் (ஸல்) அவர்கள்மீது கொண்டுள்ள பிரீதி ஆகியவகைகள் சம்பந்தமாய் அரும் சொற்பெருக்காற்றினர். தலைவரின் முடிவுரைக்குப்பின் "இஸ்லாத்தின் சம்பூர்ணத்துதர்" என்னும் நூல் வினியோகிக்கப்பட்டு கூட்டம் கலைவுற்றது.

மீண்டும் இரவு 9-30- க்கு மௌலவீ ஹுஸைன் முஹம்மது சாஹிப் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. அதில் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' பிரதிநிதி மௌலவீ முஹம்மது மியான்சாஹிப், மீ. இ. ஷா. அப்துர்

ரஹ்மான் சாஹிப், அல்ஹாஜ் மௌலவீ ஷேக் தாவூத் ஆலிம், மௌலவீ செ. மு. அப்துல் காஸிம் ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களது நற்குணம், மகிமை ஆகியவைகளைப் பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார்கள்.

நாகப்பட்டணம்

இவ்வூர் 'தீனிய்யா நஜ்மு' பேட்மின்டன் கிரவுண்டில் 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு டவுன்காஜீ கான்பஹாதுர் V. ஹமீது சுல்த்தான் மரைக்காயர் அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு நடைபெற்றது. அது பொழுது மௌலவீ முஹம்மது மன்ஸூர் ஆலிம், மௌலவீ கா. ப. காதர் முஹையித்தீன் ஆலிம், செ. முஹையித்தீன் ஆலிம், மௌலவீ K. P. அப்துல் கரீம் ஆலிம், யூ. ஹாஜீ முஹம்மது காஸிம் மரைக்காயர் ஆகியோர் திருநபியின் குணாதிசயங்களைப் பற்றி மிக்க இனிமையாக உபன்னியாசித்தார்கள். பிறகு 'உலக ரட்சகர் முஹம்மது நபி ஸல்' என்னும் ஸீரத் பிரசுரம் ஏராளமாக வினியோகிக்கப்பட்டு மகாநாடு முடிந்தது.

அடியக்கமங்கலம்

இவ்வூர் 'இஸ்லாமியா முன்னேற்ற சங்கத்' திற்கு முன் அமைக்கப்பட்டுள்ள சிங்காரபந்தலில் 16-6-35 சனிக்கிழமையன்று சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியதரிசி மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மதுஅலீ சாஹிப் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மீலாத் ஷரீப் விழா மகாநாடு கூடிற்று. தலைவர் அவர்கள் முகவுரையில் நாயகம் (ஸல்.) அவர்களின் குணாதிசயங்களையும் மேன்மைகளையும் எடுத்துக் கூறியபின் ஜனாப்களான S. புருஹானுத்தீன், மௌலவீ A. A. அப்துல் கரீம் சாஹிப், கு. மு. முகம்மது மொய்தீன் சாஹிப், செ. அப்துற் றஜாக் சாஹிப் முதலானோர் நாயகம் (ஸல்.) அவர்களின் குணாதிசய மேன்மைகளையும் சத்தொழுக்க சற்குணங்களைப்பற்றியும் தக்க முறையில் சொற்பெருக்காற்றியபின் 'உலகரட்சகர் முஹம்மது நபி ஸல்' என்னும் ஸீரத் நூல் வினியோகிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

விருதுநகர்

இவ்வூர் 'ஹிதாயத்துல் இஸ்லாம்' சங்க ஹால்பந்தலில் 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 4-30 க்கு இன்கம்டாக்ஸ் அஸிஸ்டெண்ட் ஆபிஸர் சிலார்ஷா, B. A. அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் ஜனாப்களான M. உமர் பாக்ஷா, N. சுல்த்தான் காதர், பி. எம். சிக்கந்தர், A. A. N. அல்லிகான், P. O. P. அப்துற் றஜாக், P. N. A. முஹம்மது இப்ருஹீம் சாஹிப், தென்காசி முஸல்மான் ஆசிரியர் M.E. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் ஆகியோர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது குணாதிசயம் முதலியவைகள் விஷயமாய் அழகிய சொற்பெருக்காற்றினர். தலைவரின் முடிவுரைக்குப்பின் 'உலகரட்சகர் முஹம்மது நபி (ஸல்.)' என்னும் ஸீரத் பிரசங்கநூல் வினியோகிக்கப்பட்டு சபையின் நடவடிக்கைகள் முடிவு பெற்றது.

திட்டச்சேரி

இவ்வூர் 'மஞ்சூர் ஒலியுல்லாஹ்' அவர்கள் தர்காவின் முன் அமைக்கப்பட்டுள்ள சிங்காரப் பந்தலில் 16-6-35 ஞாயிற்றுக்கிழமை கூட்டம் நடைபெற்றது. மகாநாட்டின் நிகழ்ச்சிகளைக் குறித்து முஸ்லிம் ஊர் உறவின்முறை வக்பு நிருவாக சபையார்களால் முற்கூட்டியே துண்டுப் பிரசுரம் வினியோகிக்கப்பட்டிருந்ததால் சுற்றுப்புறங்களிலுள்ள பல ஊர்களிலிருந்தும் முஸ்லிம்களும் ஹிந்துக்களும் 5000 பேர் வரையில் விஜயஞ் செய்திருந்தனர். அம்மகாநாட்டுக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த மௌலானா மௌலவீ சையித் முர்தஜாசாஹிப் பஹாதுர் M.L.A., மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீ சாஹிப், மௌலவீ A. A. அப்துல்கரீம் சாஹிப், மௌலவீ E. M. முஹம்மது சயீத் கமால், அலீஹஸன் சாஹிப் ஆகியோர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் குணாதிசயம் ஜீவிய வரலாறு ஆகியவைகளை சாங்கோபாங்கமாய் சக்கரைப்பந்தலில் தேன்மாறி பொழிந்ததுபோல் இனிதெடுத்தோதினார்கள். இவ்வூர் பிரபல வர்த்தகரும் மிராசுதாரருமாகிய ஜனாப் பொ. ஜெ. முஹம்மது இஸ்மாயீல் அவர்களால் 'உலகரட்சகர் முஹம்மது நபி ஸல்' என்னும் ஸீரத் பிரசங்கநூல் ஏராளமாய் வினியோகிக்கப்பட்டது.

மீண்டும் இரவு 9 மணிக்கு சபை ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் R. ரெத்ன சபாபதிபிள்ளை, மௌலவீ முஹம்மது இஸ்மாயீல் சாஹிப், மௌலவீ S. A. முஹம்மது அலீசாஹிப், மௌலவீ A.A. அப்துல்கரீம் சாஹிப், வ. அப்

துல்வஹாப் ஆலிம் சாஹிப், மௌலவீ K. G. அப்துஸ்ஸலாம் சாஹிப், மௌலவீ முஹம் மது இஸ்ஹாக் சாஹிப், ம. நி. ஹிதாயத்துல்லா ஆலிம், செ. அ. அப்துற்றஜாக் சாஹிப் முத லானோர் அரிய சொற்பொழிவாற்றியபின் அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு தலைவர் அவர்களது முடி வுரைக்குப்பின் மகாநாட்டு பரிபாலனக் கமிட்டி தலைவர் ஜனுப் ம. இ. அப்துல் ஹமீது (V. M.) அவர்களால் அச்சிடப்பட்டிருந்த பிரிவுபசாரப் பத்திரம் வாசித்து வினியோகிக்கப்பட்டபின் இரவு 3½ மணிக்கு சபையின் நடவடிக்கைகள் இனிது பூர்த்தியாயிற்று.

தீர்மானங்களாவன :—

(1) திட்டச்சேரி ஜமாஅத்தார், காலப் போக்கை வெகுவாக கவனத்துக்குக் கொண்டு வந்து அதற்குத் தக்கவாறு சரியான சிக்கன திட்டத்தை ஏற்படுத்தி, ஜமாஅத்தார் நடந்து வரும்படியாக முஸ்லிம் ஊர்உறவின்முறை வக்பு நிருவாக சபையார் பெரு முயற்சியுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(2) பாஞ்சாலத்தில் காதியானிகளுடன் போராடியதாலேற்பட்ட வழக்கில் மௌலானு சையித் அதாவுல்லாஷாஹ் புகாரீ அவர் கள் வெற்றியடைந்ததற்காக இம்மகாநாடு சந்தோஷத்தை வெளியாக்குகிறது. இது விஷயமாய் தக்க சேவை புரிந்துள்ள 'அஹ் ரார்' சபையினரையும், 'ஜமீன்தார்' பத்திரி கையையும் இம்மகாநாடு போற்றுகிறது.

(3) அரசாங்கத்தார் முஸ்லிம்களின் ஆக்ஷே பணையை கவனியாது சௌதரீ ஜபருல்லாகானை மெம்பர் பதவியில் நியமித்திருப்பதால் அவர் முஸ்லிம்களின் சரியான பிரதிநிதியாக மாட்டாரென்று இக்கூட்டம் கவர்ன்மெண் டுக்கு அறிவித்துக்கொள்ளுகிறது.

இவ்வைபவங்களில் 'ராத்திபத்துல் காதி ரிய்யா பீஉம்மத்துல் முஹம்மதிய்யா' சங்கம், ராத்திபத்துல் காதிரிய்யா பீ திக்ரி ரஹ்மானிய் யா' சங்கம், 'ராத்திபத்துல்காதிரிய்யா பீஜமா அத்துல் முஹம்மதிய்யா' சங்கம் ஆகியவை முழு முயற்சியுடன் ஈடுபட்டுழைத்தது போற்றத்தக்கதாகும்.

கிள்ளான் (F. M. S.)

இவ்வூர் டவுன் பள்ளியில் முறையே புரை 1 முதல் 12 நாளும் மௌலிதுஷரீப் ஓதப்பட்டு கடைசி நாள் 3000 ஜனங்களுக்கு அன்னம் வழங்கப்பட்டது. அன்றும் முதல்நாளும் ஜனுப் மௌலவீ முஹம்மது தாஹிர் சாஹிப் அவர்கள் பெருமானர் (ஸல்.) அவர்களது ஜீவிய சரித்திர வரலாறுகளை தக்கமேற் கோளுடன் விளக்கிக் காண்பித்தார்கள். இதில் கிள்ளான் தென் இந்திய முஸ்லிம் வர்க்கத்தார் மிக்க பிரயாசையோடு ஈடுபட்டது போற்றத்தக்கதாகும். இத்திருநாள் நல்ல முறையில் கொண்டாடப்பட்டதற்கு ஜனுப்கள் R. E. M. ஷேக்தாவூத், K. A. பகீர் முஹம் மது, A. ஜமால் முஹம்மது, A. பகீர் முஹம் மது, A. முஹம்மது ஷரீப், M. A. அப்துல் கரீம் முதலானவர்களே காரணமாகும்.

லண்டன் வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸோஸி யேஷன் ஜீவிய தலைவர் டாக்டர் காலித்ஷெல்டி ரேக் அவர்களால் இவ்வருட மீலாத்நபி வைப வத்திற்கென்றே தயாரிக்கப்பட்டு சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரால் செந் தமிழில் இனிய நடையில் மொழிபெயர்த்து அச்சிடப்பெற்ற "உலக ரட்சகர் முஹம்மது நபிஸல்" என்ற அழகிய ஸீரத் புத்தகங்கள் கிள்ளான் தென் இந்திய வர்த்தக சங்கத்தா ரால் ஜாதிமத பேதமின்றி 1000 பிரதிகள் எப். எம்.எஸ். தலைநாடுகளில் வினியோகித்தது சாலச் சிறந்த இஸ்லாமிய தொண்டாகும்.

கோலாலம்பூர்

இவ்வூர் ஸீரத் கமிட்டியாரின் சார்பில் டவுன் மலாய்ப் பள்ளிக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் 15-6-35 சனிக்கிழமை மாலை 3-30க்கு ஆலிஜனுப் K. A. பகீர் முஹம்மது சாஹிப்அவர்கள் தலைமையின் கீழ் மகாநாடு நடைபெற்றது. ஜனுல் மௌலவீ அப்துல் அஜீஜ்சாஹிப், உர்துவிலும், K. A. M. அப்துஸ் ஸமத்சாஹிப் இனிய தமிழிலும் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் வாழ்க் கைச் சரிதை குணவிசேஷம் ஆகியவைகளைப் பற்றி அரிய சொற்பொழி வாற்றினர். கனம் அக்கிராசனர் அவர்கள் இத்தினத்தைக் கொ ண்டாட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத் திக்கூறி இதனை பிரத்தியேக விசேஷ நாளாக ஒதுக்கி வைக்கவேண்டுமென்று தக்க முறை யில் விளக்கிக் காட்டியபின் இரவு 7 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

வடகரை

இவ்வூர் 'அன்வாருல் இஸ்லாம்' சங்கத் தினரின் அரும் முயற்சியால், மஸ்ஜிதுக்கெதி

ரில் அமைக்கப்பட்டுள்ள சிங்காரப் பந்தலில் 14-6-35 வெள்ளிக்கிழமை இரவு 1½-மணிக்கு ஜனுப் மௌலவீ முஹம்மது அபூபக்ர்சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு கூடிற்று. தலைவரவர்களின் ஆரம்பப் பிரசங்கத்திற்குப் பின் மௌலவீ முஹம்மது முஸ்தபா சாஹிப், சி. ஆ. சையித்ஹுஸைன் ஆலிம் சாஹிப் ஆகியோர் அரிய சொற்பெருக் காற்றினர். பின்னர் அன்றுபகல் 3-30-க்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவரவர்களின் முன்னுரைக்குப் பின் மௌலவீ அபுல்ஹஸன் ஷாதுலீ மௌலவீ அம்ஜத் இப்ராஹீம் சாஹிப், மௌலவீ முஹம்மது இப்ராஹீம் சாஹிப், மௌலவீ சி. ஆ. சையித்ஹுஸைன் ஆலிம் சாஹிப் முதலிய பல அறிஞர்கள் சொற்பெருக் காற்றியபின் காதியானிகள் சம்பந்தமான சில தீர்மானங்கள் செய்யப்பட்டு சபை இனிது கலைந்தது.

அலபடகமம் (சிலோன்)

இவ்வூர் மீலாத்ஷரீப் கமிட்டியார் செய்திருந்த ஏற்பாட்டிற்கிணங்க 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 4-30 க்கு, ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் பங்களாவில் ஜனுப் செ. யூ. யூனுஸ் லெப்பை அவர்கள் தலைமையின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஜாதி மதபேதமின்றி ஹிந்து முஸ்லிம் சிங்கள நேயர்கள் சுமார் 1000 பேர் வரை கூடியிருந்தனர். தலைவரின் முகவுரைப் பிரசங்கத்திற்குப்பின் கதீப் சையித் யாசீன் மௌலானா, செ.மு. அப்துல் காதிர் ஆகியோர் பேசியபின் டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஸீரத் பிரசங்கம் வாசிக்கப்பட்டு அஃது சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கூறப்பட்டது. அநேக அறிஞர்கள் சொற்பெருக்காற்றிய பின் 'உலகரட்சகர் முஹம்மது நபிஸல்' ஸீரத் பிரசங்கநூல் யாவருக்கும் வினியோகிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

அதிராம்பட்டணம்

இவ்வூர் 'மத்ரஸத்துஸ் ஸலாஹிய்யா 'வில் இதற்கென அமைக்கப்பட்டிருந்த இடத்தில் 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மௌலவீ ஷேகுனு அல்ஹாஜ் அஹமது லெப்பை ஆலிம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர், பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது மாட்சி மிக்க திருஅவதார சம்பந்தமாய் தக்க முறையில் விளக்கினுர்கள். ஜனுப் மு. க. செ. முஹம்மது அபூபக்ர் அவர்களால் வரவேற்பு பிரசங்கம் செய்யப்பட்டது. பின்னர் ஜனுப்களான மு. செ. மு. அப்துற்றஜாக், ச. மு. கி. சையித் முஹம்மது தம்பி, ஸ்ரீமான் K. S முருகையப தேசிகர்ஆகியோர் பேசியபின். ஜனுப் மௌலவீ S.K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், பெருமானுர் (ஸல்.) அவர்களின் வாழ்க்கையின் மேன்மை, அவர்கள் மக்கட்கு செய்துள்ள அநேக உபகாரங்கள் ஆகியவைகளை கேட்போர் மனம் உருகுமாறு எடுத்துக் கூறினுர்கள். பின்னர் மௌலவீ A. K. அப்துல் ஹமீது சாஹிப் அவர்கள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் 1350 வருடங்களுக்கு முன் செய்த உபதேசங்களும், நடத்திக் காட்டிய வழிகளும் தற்கால நாகரீகத்துக்கும் ஸைன்ஸ் ஆராய்ச்சிக்கும் ஒத்தமைந்திருக்கிற விஷயத்தை நன்கு துலக்கிக் காண்பித்தார்கள். பிறகு 'உலகரட்சகர் முஹம்மது நபி ஸல். 'காத்த முந்நபி' என்னும் நூல்கள் சபையோருக்கு வினியோகிக்கப்பட்டு இரவு 10 மணிக்கு சபை கலைந்தது.

சிட்டார்கோட்டை

இவ்வூரின் சிங்காரதோப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அலங்காரப் பூபந்தலில் 14-6-35 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஜனுப் ஹாஜீ வ. நெ. குப்பைநெயினுர்பிள்ளைராவுத்தர் அவர்களின் தலைமையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர் அவர்களின் முன்னுரைக்குப்பின் மௌலவீ S. அஹமத் இப்ராஹீம் சாஹிப், மௌளவீ L. முஹம்மது லெப்பை சாஹிப், ஜனுப் S. N. N. அப்துல்கனி, ஸ்ரீமான் மீனுக்ஷி சுந்தரம் ஐயர், ராமநாதபுரம் ஹெட்மாஸ்டர், ஜனுப்வாப்பா நெய்னுர் புலவர் ஆகியோர் அரிய பிரசங்கம் புரிந்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின், ஆலீ ஜனுப் M. S.M. முஹம்மது களஞ்சியம் மரைக்காயர் அவர்கள் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "உலகரட்சகர் முஹம்மது நபி ஸல்" என்னும் அரும் ஸீரத் பிரசங்க நூலின் அநேக நூற்றுக்கணக்கான பிரதிகள் சபையோருக்கு வினியோகிக்கப்பட்டு சிற்றுண்டிக்குப்பின் கூட்டம் கலைந்தது.

சாத்தன் குளம்

இவ்வூர் பள்ளிவாசலின் தென்புறம் அமைக்கப்பட்டுள்ள 'மௌலிது மண்டபத்தில், 14-6-35 வெள்ளிக்கிழமைபிற்பகல் 3-மணிக்கு

208343

யவ்முந்நபீ விழாக்கொண்டாட்டம்

ஜனுப் ஹாபிஸ் முஹம்மது புகாரீ ஆலிம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு கூடிற்று. ஹிந்து முஸ்லிம்கள் 1000 பேர்வரை விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். தலைவர் அவர்கள் முகவுரையில் 'நபிகள் நாயகத்தின் ஜீவியமும், என்றும் அழியா அற்புதமும்' என்பதுபற்றி உருக்கமான பிரசங்கம் புரிந்தார்கள். பின்னர் ஜனுப் S. M. S. ஹமீது, மாணவர் S. A. மஹ்மூத் இவர்கள் முறையே "இஸ்லாமும் காருண்ய நபியும், பெருமானர் (ஸல்.) அவர்கள் பொறுமையும் சாந்தமும்" என்பது பற்றி அழகான முறையில் பேசினர்கள். தலைவரின் முடிவுரைக்குப்பின் "காத்தமுந் நபிய்யீன்" என்னும் ஸீரத் பிரசங்கநூல் சபையோருக்கு வினியோகிக்கப்பட்டு இரவு $9\frac{1}{2}$ மணிக்கு மகா சபை இனிது முடிவுபெற்றது.

இன்சீன் (பர்மா)

இவ்வூர் அஞ்சுமன் ஹிதாயத்துல் இஸ்லாம் சார்பில் 'இர்வின்-வெல்லிங்டன் ஹாலில்' 14-6-35 வெள்ளிக்கிழமை 'யவ்முந்நபி' விழாக் கொண்டாடப்பட்டது. சோலியாபள்ளி பேஷ் இமாம் மௌலவீ E. K. முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்கிராசனரவர்களது ஆரம்பப் பிரசங்கத்திற்குப் பின் மௌலவீ பஜ்லுல் ஹக் சாஹிப், மௌலவீ அப்துஸ் ஸமத் சாஹிப் ஆகியோர் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது குணுதிசயங்களைப்பற்றி உர்தூவில் அழகான முறையாக உபந்நியாசித்தார்கள். பின்னர் மௌலவீ ஹாஜீ V. K. முஹம்மது, மௌலாஞ கோயாகுட்டி இவர்கள், பெருமானர் (ஸல்.) அவர்களது உபதேசத்தால் மனித கோடிகள் அடைந்துள்ள பெரும்பயன்கள் என்னும் விஷயமாய் மலையாள பாஷையில் இனிதெடுத் தோதினர்கள். அதன்பின் மிஸ்டர் மொஜன்தார் அவர்கள், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது பெருந்தன்மை குணுதிசயம் ஆகியவைகளை இங்கிலிஷ் வங்காளி பாஷைகளில் எடுத்துக்கூறினர். பிளீடர் ஜனுப் M. கான்மீர் சாஹிப், மௌலவீ முஹம்மது ஷபீ சாஹிப் முதலியோர் சீர்திருத்தம் என்னும் மகுடத்தின்கீழ் பெருமானர் (ஸல்.) அவர்கள் இவ்வுலகின்கண் திருஜனனம் புரிந்தது கொண்டு என்னென்ன சீர்திருத்தம், பிரயோசனங்களேற்பட்டதென்னும் விஷயமாய் அரிய பிரசங்கம் புரிந்தார்கள். மௌலவீ முஹம்மது ஷபீ சாஹிப் பேசுகையில், காதியானிகள் முஸ்லிம்களல்லவென்றும், முஸ்லிம்களில் காதியானி பித்னு மிகவும் தீங்கு செய்யக் கூடியதாக இருப்பதால் இந்தியா கவர்ன்மெண்ட் அவர்களை முஸ்லிம் சமூகத்தினரெனக் கருதி பொது ஸ்தாபனங்களில் மார்க்க விஷயங்களுக்கு காதியானிகள் அபேக்ஷகராக நிற்க அனுமதியளிக்கக்கூடாது என கேட்டுக்கொள்வதாகவும் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது. இந்த தீர்மானத்தை பத்திரிகை மூலமாயும் தனியாகவும் கவர்ன்மெண்டாருக்கு தெரியப்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

தலைவர் முடிவுரையில் பெருமானர் (ஸல்.) அவர்களது ஜீவிய சரிதை வரலாறுகளை தக்க முறையில் விளக்கிக் காட்டிய பின் உருது, தமிழ், இங்கிலீஷ், பர்மா பாஷையிலுள்ள ஸீரத் பிரசங்க நூற்கள் ஏராளமாய் வினியோகிக்கப்பட்டு சபையின் நடவடிக்கைகள் முற்றுபெற்றது.

அம்பகரத்தூர்

இவ்வூர் மத்ரஸாவின் முன்புறமுள்ள அலங்காரப் பந்தலில், 17-6-35 திங்கட்கிழமை காலை 8-30-க்கு 'திருநபிஜனன விழா மகாநாடு' மீலாத் ஷரீப் கமிட்டியாரின் ஆதரவில் நடைபெற்றது. மௌலவீ A. K. அப்துல் ஹமீது சாஹிப் அவர்கள் தலைமை வகித்து யவ்முந்நபி விழாவின் சிறப்பைப்பற்றி அரிய சொற்பெருக் காற்றினர்கள். பிறகு ஸ்ரீமான் N. ராமமூர்த்தி, ஜனுப்கள் B. P. ஷர்புத்தீன் சாஹிப், மௌலவீ K. முஹம்மது இப்ராஹீம் சாஹிப், மௌலவீ E. K. அப்துல் அஜீஜ் ஆலிம், ஸ்ரீமான் N. ரெங்கசாமி, B. A., L. T., ஆகியவர்கள் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களால் உலகமக்கள் அடைந்த நன்மைகள், பிரயோசனங்கள் ஆகியவைகள் சம்மந்தமாய் தக்க சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் இ. முகம்மது பாக்ஷாவால் வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டு மாலை 5-45-க்கு சபையின் நடவடிக்கைகள் இனிது பூர்த்தியாயிற்று.

சந்தா நேயர்கட்கு.

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் பினுங், சிங்கப்பூர், F. M. S., சிலோன் சந்தாதாரர்களிலனேகர் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப்பணத்தை அனுப்பிவைக்காமலே அசட்டையாக இருந்துவருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய சந்தா பாக்கியையும் நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமிதமின்றி அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

N.B.—சிலோன் பகுதியிலுள்ள அன்பர்கள் இம்மாதக் கடைசிக்குள் தங்கள் சந்தா பாக்கிகளை அனுப்பிவைக்கவில்லையாயின் அடுத்த மாதத்திய இதழ் அன்னேருக்கு வி. பி. மூலம் அனுப்பிவைக்கப்படுமென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஹிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும் அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னுட்டில் பரவிய வரலாறும், அதன் பிரசாரத்தை எற்று நடத்திவரும் தென்னுட்டு மிஷனரியின் விபரமும் விபரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் முஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் அட்ரசுக்கு தபால் சிலவு 0—0—9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.